தண்ணீரை விட இலேசானது. இச்சீரகப் பொடி வாயுவைப் போக்கி சீரண சக்தியை உண்டாக்கும். இதைக் கறிம சாலையில் சேர்ப்பதுண்டு. cumin seed, star anisee -Illicium anisatum. It is imported from China. It is so called because of its resemblance to a star with 6 or 8 points. Common in most bazaars. Capsules abound in an essential oil which is lighter than water. Powdered capsules are carminatives, used as a condiment in culnary preparations.

நட்சத்திரந் தோன்றி, பொண்ணாங்கண்ணி. இதை முறைப்படி சாப்பிட பகலில் நட்சத்திரங் கண்ணுக்குப் புலப்படும். ஆகவே இதற்கு இப்பெயர் வாய்ந்தது போலும், sessile plant -Illecebrum sessile. It is so called because stars are made visible in day light when consumed as per prescribed method.

நட்சத்திர நாளம், நட்சத்திரத்தைப் போன்ற நாளம். இது குண்டிக் காயின் கீழாக அமைந்துள்ளது, a star shaped plexus of veins beneath the capsules of the kidneys -Venae stellatae.

நட்சத்திர மீன், ஓர் வகைக் கடல் மீன், a kind of sea fish -Star fish.

நட்சத்திரம், விண் மீன் கூட்டம், (in Astronomy) a special form of constellation called asterism in the moon's path; star in general; 2. பூரம்.

நட்சத்திர வாயு, கண்களிலும் புருவங்களிலும் குத்தலுடன் விரணத்தை உண்டாக்கி, மூக்கில் நீர் வடியச் செய்யுமோர் கடைக்கண் ரோகம், a disease of the outer corner of the eyes marked by pricking pain in the eyes and the eye brows inflammation of the eyes and running of the nose.

நட்சத்திராகிருதி, வெண் சோளம், white great millet -Holcus saccharatus.

நட்சமா, கூமா, which see.

நட்சை, தணக்கு, catamaran tree -Gynocarpus jacquine.

நட்ட கண், கண் இமைக்காமல், கரு விழியும் அசையாதிருக்கும் கண், eye that remains still without winking, eye that has no reflex action.

நட்ட செவி, வெண் கடுகு, white mustard -Brassica alba.

நட்டச் சாரிமூலி, நாய் வேளை, dog cleome -Cleome viscosa.

நட்டச்சாருதம், கட்டுக்காடை, Indian roller -Corucias indica.

நட்டரிசியன்னம், நன்றாகச் சமையாத சாதம், பாதி வெந்த சோறு, not fully cooked rice; half cooked rice.

நட்ட பீசம், விந்தூறலின்மை, destitute of seminal secretion -Impotent.

நட்டமின், கள்ளி, Indian spurge -Euphorbia genus.

நட்டாமுட்டி மருந்து, பொருளறியா மருந்து, not effective medicine; 2. மருந்து, empiric medicine, house hold medicine.

நட்டம், வெந்நீர், ..ot water; 2. அம்மணம், nakedness.

நட்டுக் கொள்ளல், எழும்பல், projecting or rising as of penis.

நட்டுவக்காலி, see நடுவாய்க்காலி.

நட்டு வழியாள், நன்னாரி, Indian sarsaparilla -Hemidesmus indicus.

நட்டுவாக்காளி, see நட்டுவாய்க் காலி.

நட்டு வாய்க்காலி, தேளினத்தைச் சேர்ந்த ஓர் வகை கருப்புப் பெரிய தேள், lobster mouthed -Legged scorpian; See நீண்ட வாய்க்காலி.

நட்பத்திரிகை, சேம்பு Indian Kales — Colocasia antiquorum.

நட்பிலூட்டல், அனுபானத்திற்கொள்ளல், taking a medicine with its appropriate vehicle.

நட்புச் சரக்கு, மித்திரச் சரக்கு, friendly drugs as opposed to சத்துருச்சரக்கு, inimical drugs.

நட்பு மருந்து, முதன் மருந்துக்கு முறைமையான அனுபான மருந்து, vehicle appropriate to the original or principle medicine.

நணந்தம், சணல், Indian hemp -Crotolaria juncea; 2. புன்கு, Indian beech -Pongamia glabra alias Dalbargia arbore; 3. காட்டுப் பச்சிலை, forest rose wood -Dalbergia lanceolara.

நணுவகம், மயிலை, a kind of jasmine.

நணைத்திறக்கி,

நணையா வறட்டி, ஆகாசத் தாமரை, a water plant known as sky lotus -Distia stralioles.

நண்ட பிண்டல், உண்பதற்குத் தகாத குழைந்த சோறு, over cooked rice unfit for eating.

நண்டல், குழைந்தது, that which is over boiled or cooked.

நண்டிறைச்சி, சமைத்த நண்டின் மாமிசம், cooked or boiled crab flesh.

நண்டு, குளிர், cold; 2. கள்ளி, milk spurge.

நண்டு, ஞெண்டு. இது குளம், ஏரி, ஆறு இவற்றுள் சாதாரணமாக வசிக்கும். கடலிலும் இதன் இனம் உண்டு. இதை சாதாரணமாக ஏழை சனங்கள் புசிக்கலாம். இதற்கு மருந்துக் குணமுண்டு. ஆகவே பத்தியக் கறியாகவும் உபயோ கிக்கலாம். இதை ரசமாகச் செய்து நோயாளிகளுக்குக் கொடுக்க உடம்பு வலி, சீதளம், சன்னி முதலியவைகளைக் குணப் படுத்தும். இது அடியிற் கண்டபடி பல வகைப்படும், அவையாவன; crab -Cancer pagurus. It is commonly found in tanks, lakes, rivers etc, but the bigger is found in the sea. It is generally eaten by poor classes. It has medicinal virtues and so used in diet, a soup is also prepared and given to patients in cases of pain in the body,

chillness, delirius fever etc. it consists of different kinds as mentioned below;.

1. குள நண்டு, small tank crab.

2. ஆற்று நண்டு, river crab.

3. கடல் நண்டு, sea crab.

4. கடுக்காய் நண்டு,small crabs of the size of gall nut used in medicine.

5. நீலக்காலி நண்டு, blue legged crab.

6. ஒரு கால் நண்டு, crab with one claw only.

7. செம்பாறை நண்டு, large and red crab.

8. தில்லை நண்டு, black crab found under Tiger's milk tree on the sea shore.

9. வயல் நண்டு, field crab having medicinal virtues.

10. வெள்ளை நண்டு, milk crab.

11. கருப்பு நண்டு, black crab, See No.15.

12. வானம்பாடி நண்டு, another variety.

13. பால் நண்டு, the same as No.10

14. பீ நண்டு, crabs found in holes in moist ground.

15. சீமை நண்டு, English black clawed crab.

16. சூக்காய் நண்டு.

17. பெரு நண்டு, big crab see No.3.

நண்டுகண்ணுக்கினி, எலுமிச்சை, lime fruit.

நண்டுகண்ணுப்பூடு, கடலுராய்ஞ்சி மரம், climbing partridge tree.

நண்டுக்கல், வெட்டை, மகோதரம் இவைகளைக் குணப்படுத்தும் கல், நண்டுக்கல், a kind of stone (forsil of crab) useful in venereal diseases abdominal dropsy etc.

நண்டு கழை, ஓர் வாழை, a variety of plantain tree.

நண்டுக்கறி, சமைத்த நண்டுக்கறி, dish prepared out of crabs.

நண்டுக்காற் கீரை, நண்டுக் காலைப் போன்ற கீரை, crab footed greens -Bergera verticillata.

நண்டுக்காற்புல், நண்டுக் காலைப் போன்ற புல், crab footed grass -Ischanium aristatum.

நண்டுக்குழி நீர், நண்டுவளைத் தண்ணீர், இதை நோயாளியின் தாகத்தைப் போக்கக் கொடுப்ப துண்டு. நீங்கா விக்கல், வமனம், விதாகம், உடம்பெரிச்சல், போம். the water lying stagnant in the crab's hole near the ridges of fields. It is given for quenching patients irresistable thirst, it cures also hiccup and vomiting.

நண்டுக்குழிமண, நண்டுக்குழியி லுள்ள மண். இது மாந்திரீ கத்திற்கு உபயோகப்படும், the earth of crab's hole, it is used in magic.

நண்டுக் கொடுக்கு, நண்டின் பெருங்கால், the forceps of a crab.

நண்டுக் கொழுப்பு, நண்டின் கொழுப்பு. இது மருந்திற்கு உபயோகப்படும், crabs fat useful in medicine.

நண்டுக்கோது, நண்டோடு, crab's shell.

நண்டுச்சாறு, நண்டுச் சதையைச் சமைத்த குழம்பு நீர், crab's soup.

நண்டுச்சினை,.

நண்டுச் செலவு, நண்டு வளை, crab's hole.

நண்டு தின்னிக்குரங்கு, நண்டைத் தின்று வாழும் குரங்கு, crab eating monkey -Macacus cynomolgus.

நண்டு தின்னி நாகம், நண்டு வளையிற் புகுந்து நண்டைத் தின்று வாழும் நாகம், cobra living on crabs. It enters the hole and catches the crab.

நண்டு தெருக்கால், see நண்டு வாய்க்காலி.

நண்டு நசுக்கு, சிறு குழந்தைகள், babies.

நண்டு பெருங்கால், நண்டின் முன்னங்கால், the two forelegs of the crab.

நண்டு வளைத் தண்ணீர், வயல்களின் வரப்பு ஓரங்களிலும் குளம் அல்லது ஆற்றங் கரைகளிலும் காணப்படும் நண்டின் வளைக்குள் நிற்கும் தண்ணீர். இது மாறாத விக்கலுக்காகக் கொடுக்கலாம், stagnant water in the crab's holes in ridges of rice fileds and beds of rivers and tanks. It is prescribed for unceasing hiccup.

நண்டு வாய்க்காலி, தேள் இனத்தைச் சேர்ந்த ஓர் கருப்பு விஷ சந்து. இது விரியன் பாம்பின் வயிற்றில் பிறப்பதாகச் சொல்லப்படும். இது கடித்தால் நெறி கட்டி, வீக்கம், குடைச்சல், எரிச்சல் முதலிய குணங்களை உண்டாக்கி, வாயினின்று நுரை தள்ளச் செய்யும். crab coloured scorpion lobster mouthed legged scorpion. It is black coloured and is said to take its birth from the viper. Its sting is very poisonous and is marked by sympathetic bubo, swelling boring pain, burning sensation, issue of froth from the mouth etc. First it catches with its claws of the two forelegs and then stings.

நண்டூரு கால், நண்டின் சிறு கால், the eight small legs of the crab.

நண்டோடு, நண்டின் ஓடு, crab's shell.

நண்ணிடல், சேர்தல், copulate.

நண்பகல், நடுப்பகல், midday, noon; 2. பத்து நாழிகை முதல் இருபது நாழிகை வரை, a period of four hours from 10 a.m. to 2 p.m.; 3. ஆறு பொழுதினொன்று, one of the six division of the day.

நண்பல், இரண்டு பற்களின் இடை, பற்சந்து, interspace between the teeth.

நண்பன், சணல், Indian hemp -Crotalaria junica; 2. சணற் பயிர், hemp crops.

நண்பாலம், see நண்பாலை.

நண்பாலை, வெட்பாலை, blue dying rosebay -Wrightia tinctoria alias W.tomentosa alias Nerium antidy — sentericum.

நதம், கரை விதை seeds of ring worm plant -Cassia Tora (seeds of); 2. நந்தியா வட்டம், Indian rosebay -Tabernaemontana coronaria.

நதாங்கி, பொன், gold.

நதாதி, கிழங்கான் மீன், Indian whiting -Sillago sihama.

நதி, கெந்தியுரி பாஷாணம், a kind of arsenic; 2. ஆறு, river.

நதிகடம்பு, நீர்க்கடம்பு, water cadamba -Nauclea purpurea.

நதிகரந்தை, திப்பிலி மூலம், root of long pepper -Piper longum (root of).

நதிகாந்தம், திப்பிலி மூலம், see நதிகாந்தை; 2. கடம்பு, small Indian oak -Barringtonia acutangula; 3. நொச்சி, quadrangular chaste tree -Vitex negundo.

நதிகாந்தை, see நதிகரந்தை.

நதி கூலம், பிரப்பஞ் செடி, water rattan -Calamus rotang.

நதிசம், நீர் மருது, arjuna myrobalan -Terminalia arjuna; 2. அவரை அல்லது மொச்சை, country been -Lablab; 3. நீலாஞ்சனம், antimony; 4. தாமரை, lotus flower; 5. ஆற்றில் பிறப்பன, river born or coming from a river.

நதிபதி, கடல், Ocean.

நதி மண்டலம், சூரிய மண்டலம், solar region.

நதிவாலுதிகம், கருங்கூளி, a large black eagle.

நதீசம், தாமரை, lotus flower.

நதீவடம், கருப்பு ஆலமரம், black banyan tree.

நதீவரம், தகரை, see நதம், 2. நந்தியா வட்டை, see நதம்.

நதீவரி, குதம்பை, see கூத்தன் குதம்பை.

நதீளம், கடல், sea.

நத்தகா, புன்கு, Indian beech -Pongamia glabra alias Dalbergia arborea.

நத்த காலம், இராத்திரி, night.

நத்தச்சூரி, see நத்தைச் சூரி.

நத்த பத்திரி, நந்தியா வட்டை, see நதம்.

நத்த போசனம், இராச்சாப்பாடு, night meals- Supper.

நத்தப்பாலை, எருக்கு, Indian madar -Calotropis gigantea.

நத்தப்பிரகி, see நத்தப்பாலை.

நத்தப்பிலா, see நத்தப்பாலை.

நத்தப் பூரிதம், சிற்றரத்தை smaller galangal -Alpinia galanga (minor).

நத்த மாதிதம், சிறிய சிவப் பம்மான் பச்சரிசி அல்லது சிவப்பு சின்னம்மான் பச்சரிசி, red false raw rice plant -Euphorbia thymifolia.

நத்தமாலகம், see நத்தகா.

நத்த மாலம், புன்கு மரம், see நத்தகா.

நத்த முகை, இராத்திரி, night.

நத்தம், நத்தை, snail; 2. புன்குமரம், see நத்தகா; 3. சங்கு, conch; 4. மூக்கு, nose; 5. இரவு, night dark; 6. எருக்கு, see நத்தபாலை; 7. இருள், darkness; 8. வாழை, plantain.

நத்தயிலி, எரிப்பு, pungency, acidity; strong acid smell.

நத்தராகி, பூவாடங் கேழ்வரகு, a variety of ragi.

நத்தலை பாவட்டை, pavetta — pavetta indica.

நத்தலைச்சூரி, see நத்தைச்சூரி.

நத்த வீரம், இரத்த வீரரிசி.

நத்தலை வைரவன், see நத்தலை.

நத்தாங்கூடு, நத்தைக்கூடு, snail shell.

நத்தாந்த ரோகம், இராக்குருடு மாலைக்கண், night blindness failure or imperfect vision at night. It is caused by the deficiency of vitamin A. in the system; 2. அந்திமாலை, dull sight in the evening twilight or in a dim light -Nyctolopia.

நத்தாமணி, வேலிப்பருத்தி hedge cotton -Daemia extensa.

நத்திசின்னன், பரங்கி பாஷாணம் அல்லது வீரம், Corrosive sublimate or perchloride of mercury.

நத்தி நினை, புங்கங் கொட்டை, nut of Indian beech tree -Pongamia glabra.

நத்திபத்திரி, நந்தியா வட்டம், common wax flower dogbane -Tabernae montana coronaria alias Nerium coronarium.

நத்திரி, கோழிமுட்டை, fowl's egg.

நத்தி வோ சத்தெலும்பு, முழங்காலெலும்பு, knee cap -Patella.

நத்து, சங்கு, conch, shank; 2. ஓர் கூகை, a kind of owal; 3. உப்பு, salt; 4. மூக்கு, nose.

நத்துரு வண்ண நாதம், ஈய மணல், lead ore; lead mixed with sand.

நத்துளி, அத்திப்பால், milk from fig tree -Ficus racemosa (milk of).

நத்தை, ஊமச்சி, snail; 2. ஓர் புல்லுருவி, parasitic plant; 3. கடுகு, mustard; 4. நாரத்தை, bitter orange; 5. குளம், குட்டை முதலிய நீர் நிலைகளிற் காணப்படும் ஓர் பூச்சிக்கூடு. இதற்கு கண்மாய் எனவும் பெயர். இதை ஏழை சனங்கள் தின்பதுண்டு. ருசியாயிருக்கும். இதற்கு மருந்துக் குணமுண்டு. இது மூலத்திற்கு மிகச் சிறந்தது. உடம்பிற்கு மிக்க குளிர்ச்சிதரும்.

Whelk Buceinum. It is generally found in tank, pond, lake and other places where water is stagnant; poorer classes eat this. It gives good taste. It has medicinal virtues for it serves as a remedy in cases of piles; cools the system; 6. சிப்பி, snail fit for eating -Helix pomatia; 7. வழலை, efflorescent salt in fuller's soil; 8. கொற்றான் (கொத்தான்) aircreeper Cassytha filiformis; 9. கூன், hunch back.

நத்தைக் கட்டை, சாரணை, one slyed trianthema -Trianthema monogyna.

நத்தைக்கறி, ஊமச்சிக்கறி. இது மருந்திற்கு சிறந்ததாதலின் நத்தையை வைத்தியத்தில் ஓர் உபரசச்சரக்காகக் கொள்ளப் பட்டது. the dish of snail flesh. Because of its usefulness in medicine it is selected as one of the 120 kinds of natural substances in Tamil Medical science.

நத்தைக் கிளிஞ்சில், நத்தாங்கூடு, snail shell cockle shell.

நத்தைக்குத்திநாரை, நத்தை கொத்தி நாரை; பெருநாரை.

நத்தைக்கூடு, see நத்தைக் கிளிஞ்சில்.

நத்தைக்கொத்தி நாரை, நத்தையைத் தின்னும் நாரை, crane or heron living upon snail snail pick heron -Shellibis -Anastomus oscitanus alias A albus.

நத்தைச் சதை, நத்தைக் கறி. இதை உண்ண நீண்ட நாள் வாழலாம், snail flesh -when eaten it causes longvity of life.

நத்தைச்சாதி, lanthina.

நத்தைச்சுண்டி, நத்தைச்சூரி, oyster pincher. see நத்தைச்சூரி.

நத்தைச் சுண்ணாம்பு, நத்தைக் கூட்டின் சுண்ணாம்பு, choonam of snail shell c.f. கிளிஞ்சிற் சுண்ணாம்பு.

நத்தைச்சூரி, நத்தைச் சுண்டி. இதற்கு குழி மீட்டான் என்றும் பெயர். இது ஓர் அபூர்வ

மூலிகை. நத்தைச் சிப்பியை இப்பூண்டினால் தொட சிப்பி வாய் பிளந்து திறக்கும். ஆகவே இதற்கு இப்பெயர் அடைந்தது போலும். இது ஒரு சிறிய செடி. ஒவ்வொரு கொத்திலும் 5-6 பூக்கள் உண்டு. பூக்களின் நிறம் வெள்ளை அல்லது நீல நிறம், காய்கள் முசுமுசுப்பாயிருக்கும். விதைகள் சாயற் சதுரமானவை. இலைகளின் ஓர் முருந்தைப் போல் சிறிது கடினமாயிருக்கும். விதைகள் தாது புஷ்டியை கொடுக்கும். பூண்டு இரத்தப் போக்கை நிறுத்தவும் இரத்த மூலத்தைக் குணப்படுத்தவும் உதவும். உடம்பைத் தேற்றி இரத்தத்தை நன்னாரியைப் போல் சுத்தி செய்யும். அன்றியும், இதன் வேர் கஷாயத்திற்கு உபயோகமாகும். இக்கஷாயத்திற்குப் பழைய ரோகங்களைப் படிப்படியாகக் குணமாக்கும் குணமுண்டு. இவ்வேரை பசுமையாய் அரைத்து ஆவின் பாலில் சேர்த்து பாகமாய்க் கலக்கி உட்கொள்ள உடம்பு வலுக்கும். பூதகணம் பிடித்தால் பேய் உடனே பறந்து விடும். கிராணி, கழிச்சல் போம். இவ்வேரை நத்தை கூட்டில் காண்பிக்க ஓடு சூரியனை போல் இரண்டாகப் பிளந்து காட்டும். நத்தைச் சூரி நாயுருவி எத்தைச் சொன்னாலும் கேட்கும் என்பது பழமொழி. தமிழ் சித்த நூலில் இதற்கு குழிமீட்டான் என்றும் ஒரு பெயர். இவ்விலையை வாயிலிட்டு மென்று பிறகு கல்லைக் கடித்து நொறுக்கலாம் மேலும் கல் போன்ற விக்க மெல்லாம் கரையச் செய்யும். bristly button weed; shaggy button weed -Spermacoce hispida alias S.articularis alias S. scabra. It is a rare plant and is so called because of a belief that an oyster will open its shell if touched by the plant. (The snail shell is seen to break when it comes in contact with this plant by C.D.) seeds are aphrodisiac, the plant is prescribed in cases of haemorrhage and haemorrides. It is an alterative and a purifier of the blood like sarsaparilla. The decoction of the root is a good alterative. The paste of the fresh root, mixed with cow's milk forms a good

tonic, cures diarrhoea. Accordig to siddhar's science if the leaves are chewed the teeth and gums become so strong as to crush stones into pieces. The paste of the leaves resolves swellings, when applied externally.

நந்தைச் திராளி, கம்புக் கொல்லையில் வளரும் ஓர் வகைக் கீரை, a kind of garden or vegetable green found grown in millet fields.

நத்தைப்படுவன், நத்தைக் கூடு போல் கண் விழியிற் காணும் ஓர் வகைக் கட்டி. இதனால் தலைகுத்துவலி, புருவத்தில் முளை எழும்பல், சோதி சிறுத்தல், கரு விழி புடைத்து வலி கண்டு சீழ் பெருகி பார்வை மந்தப்படல் முதலிய குணங்களுண்டாகும், the boil of an eruption like an oyster shell in the eye ball marked by head ache contraction of pupil swelling of the black of the eye purulent discharge diminushing of the eye sight etc.

நத்தையுப்பு.

நத்தையோட்டுக் கம்பு, உட்காதி னுள்ளிருக்கும் நத்தை யோட்டைப் போன்ற ஓர் எலும்பு, a bone of the internal ear having a conic cavity and resembling the snail shell -Cochlea.

நந்தகாரி, சிறு தேக்கு. இது குடலிலுள்ள வாயுவைப் போக்கும், knot plant-Clodendron serratum. Its decoction cures flatulence.

நந்தகி, திப்பிலி, long pepper -Piper longum.

நந்தமலாதி, விரலின் நகம், nail of the finger or toe.

நந்த மாலம், புன்கு, Indian beech -Pongamia glabra. See நந்தமாலம்.

நந்தம், கஸ்தூரி, musk; 2. காக்கை, crow, 3. நாரத்தை, bitter orange -Citron; 4. கடார நாரத்தை, bigarade orange -Citrus auremtium (bigaradia); 5. சங்கு, conch; 6. நவமணிகளில் ஒன்று, one of the nine precious stone or gems; 7. எருக்கு, madar plant-Calotropis gigantia; 8. வாழை,

plantain tree -Musa paradisiaca, 9. புன்கு, see நந்தமாலம்.

நந்தல், கெடுதல், rotting decaying.

நந்தளம், நத்தை, snail; 2. நாரத்தை, bitter orange; 3. ஓர் விஷப்பூடு, an unknown poisonous plant.

நந்தவனம், பூந்தோட்டம், flower garden usually attached to or belonging to temples and places.

நந்தனம், 26-வது வருஷம், 26-th year of Hindu cycle; 2. பூந்தோட்டம், flower garden; 3. நத்தை, snail; 4. நாரத்தை, biter orange.

நந்தன், சிபந்த பாஷாணம், a kind of arsenic.

நந்தாமணி, உத்தாமணி, hedge cotton -Daemia extensa.

நந்தி, தூணுமரம், toon tree -Cedrela toona; 2. எருது, bull; 3. நந்தியா வட்டம், which see; 4. உப்புக்கீரை, Indian glass wort Suaeda nudiflora; 5. வாலை, Goddess energy; 6. நந்திதேவர், one of the members of the original school of Siddhars; 7. வெண்தேக்கு, white teak wood; 8. வசிவி, a prostitute; 9. கோனந்தி, yellow orpiment; 10. சிறுபூசினி, small pumpkin; 11. சின்னி, whichsee; 12. வலம்புரி, which see.

நந்திகம், உப்புக்கீரை, see நந்தி.

நந்திகேசரம், See நந்தியாவட்டம்.

நந்தி கேசுவரீயம், ஓர் காமநூல், book on erotic science.

நந்திகை, மட்பாண்டம், earthern ware.

நந்திபத்திரி, see நந்தியா வட்டம்.

நந்தி பண்ணை, வெடியுப்பு, potassium nitrate.

நந்தி பராக மூலி, ஈசுர மூலி, Indian birth wort -Aristolochia indica.

நந்திபீசம், சோரங்கொட்டை, marking nut.

நந்திபூசினி, சாம்பற் பூசனி, ash pumpkin -cucurbita alba alias ipomaea digitata.

நந்திமுகி, நீண்டும் மிருதுவாகவுமிருக்கும் ஓர் வகைக் கோதுமை, an elongated soft wheat.

நந்தியா வட்டம், நந்தி கேசுரப்பூ. இது ஓர் பூஞ்செடி. 6-8 அடி உயரம். காம்புகளில் 3-6 பூக்கள். வெண்ணிறம். இரவில் வாசனை வீசும், வருஷம் முழுவதும் பூக்கும். கோயில் பூசைக்காகத் தோட்டங்களில் வைத்துப் பயிராக்கப்படும். மேற்கே காடுகளிலும் விசேஷமாய் வளரும். இதன் இலைச் சாற்றைக் கண்ணோய்க்குக் கண்ணில் பிழியலாம். இதில் பலவகையுண்டு. அவற்றுள் ஒரே அடுக்குப் பூதான் மிகச் சிறந்தது. பூச்சாற்றைக் கண் பூவுக்குப் பிழியலாம். அன்றியும் தலை ரோகங்களுக்கும் உபயோகிக்கலாம். இதன் வேரை மெல்ல பல்வலி போம். Indian rose bay -Tabernae montana coronaria. It is a flowering plant. 6-8 ft. leaves opposite peduncles bear 3-6 flowers. flowers white fragrant but more at night, flowering nearly all through the year much cultivated in temple gardens of South india for it is used in worship. Juice of the leaves is dropped into eyes in ophthalmia but the juice of the single whorl flowers is more useful. The juice of the flowers mixed with oil is an efficacious remedy for relieving the burning sensations of sore eyes, a collyrium is prepared with the flower juice, tender cocoanut water and juice, of the flowers of Bengal currant -Carandas spinaraum as chief ingredients which is very useful for all eye diseases. By chevring the root the tooth ache is relieved, paste of the root in water is a vermicide. There are two varieties of these plant one bearing a single whoral flowers and the other bearing many whoral flowers.

1. ஒத்தை நந்தியா வட்டை, single whoral flowered Tabernaemontana coronaria.

2. அடுக்கு நந்தியா வட்டை, multi whoral flowered Tabernaemontana coronaria.

நந்தியா வட்டை, see நந்தியா வட்டம்.

நந்தியாவர்த்தம், see நந்தியா வட்டம்; 2. அரச மரம், holy fig tree -Ficus religiosa; 3. ஓர் வகைச் சிப்பி, a kind of shell or mollusc; 4. வலம்புரி, which see.

நந்தியுப்பு, நஞ்சுக்கொடி, naval card; 2. சத்தியுப்பு, சிவனுப்பு, கம்பியுப்பு, பூரம் இவைகளைச் சமனிடையாய்த் தூக்கி கல்வத்தி லிட்டு அரைத்து ஒரு பீங்கானில் வாங்கி இரவியினில் காயப் போட்டுத் தயாரித்த உப்பு. (இராம சிவயோகம் 200) a kind of salt prepared by grinding together the following; equal weights of Satti uppu, Shiva uppu, Kambi uppu and pooram (subchloride of mercury) and keeping the mixture under the sun.

நந்திரகம், சிவனார் வேம்பு, Shiva's neem -Indigofera asphala thoides.

நந்திர சின்னி, சிறுசின்னி, see நந்தி விருட்சம்; 2. see நந்தியா வட்டம், 3. ஒடுகு, wodisha -Lebidioropsis orbicularis; 4. சின்னிமரம், a medicinal tree Acalypha fruiticosa.

நந்தி வட்டம், see நந்தியா வட்டம்.

நந்தி வாகனம், தூலதேகம், gross body or fleshy body as opposed to சூக்குமதேகம், subtle body.

நந்தி விருட்சம், தூணி மரம், Bastard cedar -Cedrela toona; 2. சின்னி மரம், Indian shrubby copper leaf -Acalypha fruiticosa.

நந்திகழற் பருப்பு,

நந்திசர், பூர்வத்தில் உமா தேவியார் அர்த்த நாரியாக வேண்டும் என்று சதுர கிரிக்குத் தவம் செய்ய வேண்டி வரும் போது அம்மையுடன் வந்த வீரகன் என்னும் பெயருடைய ஒரு கணநாதராவார். அம்மையார் தவமுடித்த பின் கணநாதர் சதுர கிரியை விட்டு வரப் பிரியம் இல்லாமையைக் கண்டு உமா தேவி நீ

இவ்வடிவத்தை விட்டு அவ்விடத்தில் இருந்த சிலாத முனிவருக்குப் புத்திரனாய்ப் பிறந்து வாழ்வாயாக என்று அருளிச் செய்தாள். அப்படியே கணநாதர் ஷியாருக்குப் புத்திரனாய்ப் பிறந்து நந்திதேவர் என்ற பெயருடன் சதுர கிரியில் வாழ்ந்து வந்தார். இவர் வாத வைத்திய யோகஞான நூற்களும் சோதிட நூற்களும் இயற்றி, தம்மாணாக்கர்களால் உலகத்தில் பரவும்படி செய்தார். இவர் செய்த நூற்களாவன; வைத்திய காவியம், கலைக்கியானம், நிகண்டு, கருக்கிடை, தண்டக பட்சணி, ஞானசூத்திரம், சங்கம விளக்கம், முப்பு சூத்திரம் முதலியனவும் இன்னும் பல சோதிட நூற்களுமாம். When Umadevi spouse of God siva came to Sathuragiri to make penance she was accompanied by one named Veeragan. After the penance, she wanted to go back, but the man who accompanied her before refused to go back and wanted to remain at Sathuragiri. As per his desire, he was born as the son of Cilathamuni and lived at Sathuragiri. He was named as Nandhi devar. He compiled many books on Alchemy, Granam, yogam, Philosophy, Medicine, Astrology etc. Vaidya kaviyam, Kalaignanam, Nigandu, Carukkadi, Thandaka patchini, Gnana soothiram, Muppu soothiram, Sangam Vilkam are the names of some of the books he had compiled.

நந்தீசர் நாடி, நந்தி தேவர் செய்த நாடி என்னும் சோதிட நூல், a kind of Astrology based on palmistry compiled by Nandideva.

நந்தீசர் வைத்தியம், நந்திதேவரால் செய்யப்பட்ட ஓர் தமிழ் மருந்துவ நூல், a Siddha system of medicine compiled by Nandideva.

நந்தீடம், வழுக்கைத்தலை, bald head.

நந்தியம், நந்திகேசுவரால் செய்யப்பட்ட ஓர் வடமொழி வைத்திய நூல், an Ayurvedic science written by Nandigeshwar.

நந்து, சங்கு, conch; 2. நத்தை, snail; 3. பறவை, bird.

நந்துதல், சாதல், dying; 2. அவிதல், extinguishing; 3. வளர்தல், growing; 4. தழைத்தல், sprouting; 5. விருத்தியாதல், thriving as vegetables; 6. விளங்கல், shining.

நந்தை, கொற்றான்கொடி, air creeper -Cassytha filiformis; 2. தேற்றாமரம், water clearing nut -Strychnos potatorum; 3. முடக்கொற்றான், palsy curer -Cardiospermum hulicacabum; 4. கபிலைப்பசு, black cow with black udder.

நபசங்கமம், பறவை bird.

நபசாரியம், மரு, maid's love -Artemesia abrotanum (pallens).

நபநஞ்சு, காற்றின் விஷம், poisons produced by micro organisms in the air; toxins, at mospheric poison.

நபாலயம், புகை, smoke.

நபிலம், கொள், horse gram -Dolichos biflorus.

நபுஞ்சகம், பேடித்தன்மை, the condition of an impotent man or of a castrated male -Eunchism loss of sexual power due to derangment of the pituitary secretion.

2. ஆண் தன்மையின்மை, loss of virile or manly power or erection power of the penis.

3. அலித்தன்மை, neither male or female -Hermophroditism.

4. புணர முடியாமை, sexual incapacity -Impotenita cocunda consisting of different kinds. 1. Rental impotency 2. Virile impotency, 3. congenital impotency.

நபுஞ்சகலிங்கம், எழுச்சியில்லாத ஆண் குறி, penis without erection power; 2. பேடியின் ஆண் குறி, ஆண், பெண் அல்லாக் குறி, the penis of a hermaphrodite, perhaps one not fully developed organ of neither sex.

நபுஞ்சகன், ஆண் குறியற்றவன், one deprived of a male organ -penis; 2. பேடி, hermaphrodite.

நநும்சகன், see நபுஞ்சகன்.

நபோமணி, சூரியன், the sun.

நபோரேணு, பரமாணு, atom.

நபோலயம், see நபாலயம்.

நப்பாசை, நாக்கின் தீராவாசை, fever craving for taste.

நப்பு, கொழுப்பு, as பச்சோந்தி நப்பு, fat as of green lizard.

நப்பு சப்பு, ருசி, taste.

நமக்காரி, ஆடு தின்னாப்பாளை, black blood plant: worm killer -Aristolochia bracteata; 2. வறட்சுண்டி, a speicies of sensitive plant -Mimosa triquetra.

நமசிவயம், பஞ்சாட்சரம். அதாவது ஐந்து எழுத்து, the mystic five letters, the five lettered mantram or mystic prayer of the shiva sect. If 'Om' is prefixed to these 5 letters then it is called shadae -Sharam representing the six psychic centres of the body ஆறாதாரம்.

நமச்சாரம், see நவச்சாரம்.

நமமுடு, see நமுடு.

நமட்டுச்சிரங்கு, சிறு புழுக்களால் உடம்பில் பலவிடங்களிற் காணும் நமைச்சலோடு கூடிய வேர்க்குருவைப் போன்ற சிறு சிரங்கு. இது சாதாரணமாய் ஆசனவாய், மர்ம ஸ்தானம் முதலியவிடங்களில் காணும். சில சமயம் கை மடிப்பு, தோள், முதுகு இவ்விடங்களிற் கண்டு இரவில் நமைச்சல் அதிகரித்து, தொந்தரவு கொடுக்கும். வயது சென்ற கிழவர், நீரிழிவு ரோகி, கர்ப்பணிகள் ஆகிய இவர்களுக்கும் இப்படியே, a kind of ereption or skin disease covered with pimplus or small vesicles with intense itching at the anus or the posterior parts and the privates. It sometime occurs in the flexores of the limbs

or on the shoulders and back. It is a common complaint among old people and diabetic patients and a frequent complaint of pregnant woman consisting of intense itching of the external genitals.

இதற்கு கார்போகரிசி, நீரடிமுத்துப் பருப்பு, கொப்பரைத் தேங்காய், கசகசா, கெந்தகம் இவைகளைச் சமனிடை எடுத்து குப்பை மேனிச் சாற்றிலரைத்து புளித்த தயிரிற் கலந்து மேற்பூசி 2 மணி நேரம் சென்ற பிறகு இலுப்பைப் பிண்ணாக்கை அரைத்து தேய்த்து 2-3 நாள் வெந்நீரில் குளிக்க ஆறி உதிரும். Babchi seeds, chalmugra kernel dry cocoanut kernel, poppy seeds and sulphur are taken in equal proportion and grinded with the juice of the rubbish plant into a fine paste and mixed with sour curd and then applied to the parts affected. After two hours bath must be taken using powder of tassia oil cake instead of soap.

நமட்டுச்சொறி, see நமட்டுச்சிரங்கு.

நமதம், புகை, smoke.

நமதாயம், யகாரம். இது ஐந்தெழுத்திலொன்று, the mystic letter 'ya' one of the five sacred letters of Shiva.

நமத்தம், சடாமாஞ்சில், valerian root -Indian 'spikenard -Cyperus stolonoferus alias Valerian jatamansi; 2. ஓர் மருந்து, a kind of medicine.

நமத்து, ஆக்கினை, the psychic centre of the cerebral region in the human body.

நமஸ்து, see நமத்து.

நமருதல், ஊறுதல், crawling.

நமரை வாழை, ஓர் வகைப்பச்சை வாழை, a kind of green banana -Musa para disiaca (troglody tarum).

நமாகண்டன், ஓர் வகை சன்னி, a kid of delirium.

நமர்காணல், சன்னியுண்டாதல், getting shock or delirium.

நமவாருதி, தொடை, thigh; 2. ஆடா தோடை, which see.

நமனார் தம்பலம், இந்திரகோபப் பூச்சி, lady's fly.

நமனை விரட்டி, தில்லை மரம், tigger's milk spurge -Excoecaria agallocha.

நமன், இயமன், god of death; 2. காரீய மலை, mountain containing plumbago; 3. எருமை, buffaloe.

நமன் கத்துவயம்.

நமன்கற்பத்தி, செம்பல்லிப்பூடு, red lizard plant.

நமன் கற்பம், நீர்க்கடம்பு, water kadamba -Stephegyne parviflora alias Nauclea parviflora.

நமன் வாகனம், எருமைக் கடா, he buffaloe.

நமன் வாதம்,

நமிடு, ஈறு, gum of the teeth; ஓர் வகை நாரை, a kind of heron.

நமிட்டுப் பறவை, ஓர் வகைப் பட்சி. இதன் கறிக்கு சயத்தை நீக்கும் தன்மையுண்டு. உடம்பைத் தேற்றி வலுவைக் கொடுக்கும். a kind of unknown bird. Its fleshis a remedy in consumption and is very useful for improving the health of convolescents.

நமிருது, (ந+மிருது) ரொம்பவும் பலம் அல்லது ரொம்பவும் மெலிவு இல்லாமை, neither too strong nor too weak.

நமுடு, கீழுதடு, lower lip; 2. ஓர் பறவை, a bird; 3. ஈறு, gum of teeth; 4. கொக்கு, stork.

நமுடு கடித்தல், குழந்தைகள் கீழ் உதடு கடித்தல். இது நோய் காணுவதற்கோர் அறிகுறியாகும். biting of the lower lip by children which is considered as a symptom foreboding illness.

நமுட்டுச் சிரங்கு, see நமிட்டுச் சிரங்கு; 2. வேர்க்குரு, prickly heat.

நமுட்டுதல், தினவெடுத்தல், itching.

நமுதா, இருமலுக்காகக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் ஓர் வகை இலை, a kind of leaf used for cough in children.

நமேரு, உத்திராட்சம், Rudra's bead -Elaeocarpus tuberculatus; 2. புன்னை, a flowering tree. Alexandrian laurel -Calophyllum inophyllum; 3. சுரபுன்னை, which see.

நமை, வெள்ளை நமை மரம். இதுவே வெக்காலி, button tree -Anogeissus latifolia (parviflora); 2. தினவு, itching; 3. நமைச்சல், irritation; 4. சொறிவு, scratching sensation; 5. கத்தரி, brinjal; 6. பாசி மரம், moss tree.

நமைக்காய், கத்தரிக்காய். இது கரப்பான் அல்லது நமைச்சலை உண்டாக்குவதாலிப் பெயர், brinjal -Solanum melongena. It is so called because of its causing irritation of the skin.

நமைக்கிரந்தி, தினவுடன் கூடிய கழலை, a small tumour with itching sensation.

நமைச்சல், தினவு, itching, irritation.

நமைச்சல் போக்கி, உடம்பின் தினவைப் போக்கு மூலி, drug that relivers the sensation itching -Autipruritic.

நமைச்சிரங்கு, see நமிட்டுச் சிரங்கு.

நமைச்சொறி, தினவை உண்டாக்கு மோர் வகைச்சொறி, a kind of eruption causing intense itching; 2. தினவு, irritation.

நமைத்தல், தினவு காணுதல், scratching or itching sensation.

நமைப்பு, சொறிவு, scratching; 2. சிரங்கு, itch.

நம்பகன், சீர்பந்த பாஷாணம், see நந்தன்.

நம்பலங்கம், சாலாங்க பாஷாணம். இது 32 பாஷாணங் களில் ஒன்று, one of the thirty two kinds of native arsenics.

நம்பல், ஆசைப் பெருக்கம், intense desire, 2. மோகம், cupidity; amorousness.

நம்பி, தம்பூரச்சிகை, a medicinal plant used in Alchemy.

நம்பு, see நம்புலி.

நம்புலி, நாவல், jaumoon -Eugenis jambolina.

நம்பெரும், விந்து ரசம், the juice of the seed.

நம்மிடசுவா, பசும்பால், cow's milk.

நயக்கன், நாய், dog.

நயநயப்பு, மிருது தன்மை, softness and smoothness -maleabilty.

நயநௌஷதம், (நயனம் +அவுஷதம்) கண் மருந்து, collyrium for the eyes, lotion for the eyes, eye wash.

நயப்புணர்வு, கண்ணோட்டம், kindness favourableenesa of disposition.

நயப்புள்ள அயம், மிருதுவான இரும்பு, mallcable iron.

நயமாலி, மனோ சிலை. இது விளைவு பாஷாணம். 32-ல் ஒன்று. realgar -Arsenicum bisulphuretum. It is one of the 32 kinds of natural arsenics.

நயம், இன்பம், pleasure.

நயன கத்தூரி, (நயனம்+கத்தூரி) கண்ணுக்கிடும் கத்தூரியைப் போன்ற ஒரு சிறந்த மருந்து, an esteemed medicine like musk or application for the eye.

நயனகாசப்படலம், கண்மேலேற்படும் படல நோய், a film over the eyes.

நயனக்கத்தி, கண்ணிற்குள் சத்திரம் செய்வதற்காக உபயோகிக்கும் கத்தி, a surgical knife or other instrument used in the operation of the eyes.

நயனக்குறி, கண் ரோகத்தில் ஏற்படும் குறிகள், symptoms occuring in diseases of the eye; 2. கண்ணினால் காட்டும் சைகைகள், gestures of the eye as in love; 3. நோயினால் கண்ணில் தோன்றும் குறிகள், the symptoms that appear in the eye due to the diseases eg. yellow eyes in jaundice pale eyes in anemia.

நயன சஞ்சீவி, தூதுவளை, three lobed night shade -Solanum trilobatum; 2. கண்ணிற்கு உபயோகப்படும் சஞ்சீவியைப் போன்ற சிறந்த மருந்து, a reputed application for the eyes.

நயன சந்திராதி மாத்திரை, கண்ணீர் ஒழுக்கு, பீளை, கண் சிவப்பு, குத்தல் முதலியவை தீர்க்கும் மருந்து. மாத்திரை, a pill rubbed in a suitable media and applied to the eyes to cure watering of the eyes purulent discharge from the eyes redness and pain of the eyes.

நயன சாணம், நயகுஞ்சனம், ointment for the eye.

நயன சாஸ்திரம், see நயன நூல்.

நயன சூலை கண் குத்தல் நோய், stabbing pain in the eyes.

நயனத்தரிப்பு, கண் நமைச்சல், irritation of the eyes.

நயனத்தாபிதம், கண்ணிற் ஏற்படும் அழற்சி, inflammation of the eye -Ophthalmitis.

நயனத்திற்குனாத்தி, தாமரைக் கிழங்கு, lotus root.

நயனத்தோன், புட்பராகம், a yellow or white transparent gem, topaz oriental topaz.

நயன நீர், கண்ணீர், water discharged from the eyes.

நயன நூல், கண்ணினது ஒளியையும் பார்வையையும் பற்றிக் குறிக்கும் நூல், the

science which treats of light and of vision; 2. கண்ணையும் கண்ணின் நோய்களைப் பற்றியும் கூறும் நூல், an ophthalmic book concerning the eye and its diseases.

நயன பார்வை, காமப்பார்வை, an amorous look.

நயன பூபதி மாத்திரை, கண் படலம், புண், பூ, காசம் முதலிய கண் ரோகங்களைத் தீர்க்கும் மாத்திரை, a pill that cures padalum, ulcer, cataract etc. when applied to the eyes through suitable media.

நயனப் பத்திரி, வட்ட சாரணை. இதன் இலைகள் கண் ரோகத்திற்கு உபயோகப் படுவதாலிப் பெயர். rounded -mucronate -leaved trianthema -Orgia trianthemoides. It is so called because of its usefulness in ophthalmia and other diseases of the eye.

நயனப் பரிகாரம், கண் வைத்தியம், eye treatment, treatment of eye disease -Opthalmiatrics.

நயனப் பரிகாரி, கண் வைத்தியன், one skilled in the treatment of eye diseases- Oculist.

நயனப் பரீட்சை, கண்ணைச் சோதித்தல், examination of the eye.

நயனப் பார்வை, கண் பார்வை, eye sight vision of the eye; 2. காதல் நோக்கம், amorous look.

நயனப் பிரபந்தம், கடைக்கண், outer corner of the eye.

நயனம், கண், eye in general; 2. கண்மணி, pupil of the eye.

நயனாம், ஓர் கண்ணோய், a disease of the eye -Ophthalmia; 2. கண்ணில் அரத்தால் அறுப்பது போல் வலி காணும் ஓர் நோய், an eye disease characterised by sawing pain in the eyes.

நயன ரோகம், பொதுவாக கண்ணிற் ஏற்படும் நோய்கள், diseases that diretly affect the eye, eye diseases, See கண்ணோய் வகை.

நயன வல்லி, வல்லாரை, Indian pennywort -Hydrocotyle asiatica.

நயன வாதம், கண் சதைக்கேற்படும் வாதவலி, paralysis of the eye muscles -Ophthalmoplegia.

நயன வாரி கண்ணின் நீரொழுக்கு, discharge of water from the eye -Lachrymation.

நயன விதி, நயன வைத்தியத்தைப் பற்றி அகஸ்தியர் செய்த ஓர் நூல், a book on the diseases of the eye and their treatment as well as prevention of eye diseases by the sage Agastya.

நயனாஞ்சனம், கண்ணுக்கிடுமை, ointment for the eye.

நயனாமயக்கொடிச்சி, காட்டுக் கொள், wild horse gram, jungle horse gram -Atylosia scarabaeoides alias Rhynchosia scarabacoides.

நயனாமிர்தம், பச்சைக் கற்பூரம். சுத்தி செய்த சுருமாக்கல். மயில் துத்தம், ரசாஞ்சனம், மர மஞ்சள், கடுகுரோகணி, பலகரை, இந்துப்பு, திரிகடுகு, கடல் நுரை, அதிமதுரம், ஸ்ரீ சுந்தம், சங்கு இவைகளைச் சமனெடை சேர்த்து மாதுளை ரசத்தாலரைத்து மாத்திரை செய்து பிறகு தேன் அல்லது நெய்யில் அரைத்துக் கண்ணிற்கிடும் கலிக்கம், சகல கண்ரோகம் போம், a pill for several eye diseases is prepared by grinding the above mentioned drugs with the sweet pomegranate juice and applied to the eyes in honey or ghee.

நயனாவுடதம், கண் மருந்து, medicine for the eye.

நயனி, காந்தள், November flower -Gloriosa superba.

நயனை, கண்மணி the pupil of the eye.

நயனோ பாந்தம், கடைக்கண், see நயனப் பிரபந்தம்.

நயிட்டிசகன், நிட்டை தவறாதவன், one engaged in fixed ness of mind.

நய்யத் தட்டல், see நையத்தட்டல்.

நாகல், மலம், excreta, faeces, excrement.

நரகல்வாய், குதம், anus.

நரகவாயாய், குதம், anus; 2. மலவாயில், opening for fecal discharge.

நரகனாதி, தேட்கொடுக்கி, scorpion sting -Heliotropium indicum.

நரகாமயம், ஆத்துமா, soul.

நரகாலி, மாட்டுக்குண்டாகும் ஓர் நோய், cattle disease.

நரகாலிகம், சப்பைப்புல், a kind of sedge grass .

நரகோன் மத்தம், கொலைப் பைத்தியம், homicidal monomania.

நரங்குதல் வளர்ச்சிக்குறைவு, 2. மெலிதல்; 3. தேய்ந்து தேய்ந்து கெடுதல், wasting away.

நரசண்டன், ஆணலி, male herma phrodite.

நரசிங்கவங்கம், வெள்வங்கம், white lead, tin .

நரசிங்கிதம், கருந்துளசி, black basil -Ocimum sanctum (nigrum).

நரசிம்பக்கனி, கறிப்புடலை, snake gourd -Trichosantha anguina.

நரசீலன், நவச்சாரம், sal ammoniac.

நரசீவன், மானிடவுயிர், human life.

நரசெந்திரகம், மிருக மைதுனம், sexual connection with an animal -Bestiality.

நரண்டை,

நரத்துவம், மனிதத்தன்மை, human nature.

நரத்தை, உடுப்பை மரம், smooth lance leaved -Indian inden Grewia leavigata alias G. orbiculata.

நரநரவென்று கடித்தல், பல்லை நரநரவென்று சப்தம் படும்படி கடித்தல், an imitative word signifying the sound made by striking the teeth together with noice.

நரந்தம், கஸ்தூரி மிருகம், musk deer; 2. புனுகுபூனை, civet cat; 3. காக்கை, crow; 4. see நரந்தகி, 5. வாசனை; smell.

நரந்தை, கொற்றான் கொடி, air creeper -Cassytha filiformis; 2. கிச்சிலி, orange; 3. பரிமளம், fragrant smell.

நரபலி, மனித பலி human scarifice.

நரபுடம், ஐந்தெருவைக் கொண்டு போடும் புடம், calcination of metals with the aid of five cowdung cakes.

நரப்பு, see நரம்பு.

நரமாமிசம், மனிதர் இறைச்சி, human flesh.

நரம், மனிதப் பிறவி, human birth.

நரம்படுத்த, மரம்புக்குரிய, nervous neural.

நரம்படைப்பு, நரம்புத்தடை, obstruction of nerves.

நரம்பற்ற, பலமற்ற having no strength sinewless.

நரம்பன், ஓர் புகையிலை, a kind of tobacco; 2. இளைப்பினால் ஒல்லியாயும், நரம்பெழும்பிய உடம்புமுள்ளவன், a thin or meagre and emaciated person whose veins stand out; 3. நரம்பு பலமுடையவன், a man of nervous strength.

நரம்பாணி, முடிமாமிசம், skin on the top of the head, scalp.

நரம்பாண்மை, நரம்பு பலம், nerve power -Neuropotential.

நரம்பி, உடம்பிளைத்து நரம்பெழும்பிய பெண், a slender woman having raised veins; 2. நரம்பு பலமுடையவள், a woman with nerve energy.

நரம்பிசிப்பு, see நரம்பிழுப்பு.

நரம்பிசிவு, see நரம்பிழுப்பு.

நரம்பிலி, கருந்தும்பி, South India pine - Podocarpus latifolia.

நரம்பிழுப்பு, உடம்பின் நரம்பு மேலுக்கிழுத்தல், sterching of the nerves contraction of nerves -Neurospasm; 2. வலிப்பு,

convulsion; *3. தசைநார் சுருட்டிக் கொள்ளுகை,* contraction of muscular fibres.

நரம்பிளைப்பு, *நரம்பின் பலவீனம்,* nervous debility, nervous prostration -Neurasthenia.

நரம்பு, *நாடி,* artery; *2. காரி ரத்தக்குழல்,* vessel carrying black blood -Vein; *3. உடம்பிலுள்ள குழாய்,* any duct in the body; *4. நார்,* sinew; fibre; *5. இலை நரம்பு,* leaf nerve -Veins of the leaf.

நரம்பு, *மூளையிலும் முள்ளந் தண்டுக் கொடியிலுமிருந்து செல்லு கின்ற பலங் கொண்ட சிறிய கயிறு போன்ற வெள்ளைக் கொடிகள். இவை மனித உடம்பின் எப்பகுதிக்கும் கொப்புக் கொப்பாகக் கூந்தல் விட்டுச் செல்கின்றன. இவை நுட்பமாகிய நார்களானவை. உணர்ச்சியை ஒரு பாகத்தினின்று மற்றொரு பாகத்திற்குக் கொண்டு செல்லும்.* a cord like structure resembling a white creeper emanating from the cerebral and spinal regions. It consists of bundles of nerve fibres and it spreads over several parts of the body with several branches and so impulses are conveyed from one part of the body to another. The following are the different kinds nerves.

NOTE: Hindu physiologists say that in the human body there are 72,000 nerves and veins but another version mentioned only 1008.

A. According to their characteristics nature etc.

1. *கேள்வி நரம்பு,* auditory nerve acoustic nerve 8the pair.
2. *பரிச நரம்பு.*
3. *ரூப நரம்பு.*
4. *கந்த அல்லது வாசனை (நாற்ற) நரம்பு,* 1st pair.
5. *பார்வை நரம்பு,*ophthalmic or optic nerve.
6. *உஷ்ண நரம்பு,* calorific nerve.
7. *விசர்க்க நரம்பு.*

8. *ஒற்றுணர்வு நரம்பு,* sympathetic nerve.
9. *அமுற்சி நரம்பு.*
10. *சலன நரம்பு.*
11. *பெரு நரம்பு,* large nerve.
12. *சுவாசோதர நரம்பு,* pneumo gastric nerve.
13. *கசேரு நரம்பு.*
14. *நுரித நரம்பு,* excitor nerve.
15. *எழுச்சி நரம்பு,* erectile nerves as those of genital organs rectum and bladder.

B. Nerves distributed over several organs and parts of the human body:.

1. *மூளை நரம்பு,* cerebral nerves 12 pairs.
2. *சிர நரம்பு,* nerve of the head.
3. *முக நரம்பு,* facial nerve.
4. *நெற்றி நரம்பு,* frontal nerve.
5. *கண்ணிரப்பை நரம்பு,* ciliary nerve.
6. *நாசி நரம்பு,* nasal nerve.
7. *கன்னப் பொறி நரம்பு,* temporal nerve.
8. *உண்ணாக்கு நரம்பு,* tonsillar nerve.
9. *கன்ன நரம்பு,* buccel nerve.
10. *வெளிக்காது நரம்பு,* nerve of the external nerve.
11. *உட்காது நரம்பு,* cochlea nerve.
12. *கழுத்து அல்லது கண்ட நரம்பு,* cervical nerve.
13. *தோள் நரம்பு,* shoulder nerve.
14. *கைநரம்பு,* cutaneous nerve.
15. *முதுகு நரம்பு,* dorsal nerve.
16. *முள்ளந்தண்டு நரம்பு,* spinal nerve.

17. நுரையீரல் நரம்பு, pulmonary nerve.

18. ஈரல் நரம்பு, hepatic nerve.

19. இருதய நரம்பு, cordiac nerve.

20. உதர நரம்பு, abodominal and gastric nerve.

21. விலா நரம்பு, intercostal nerve.

22. பிட்ட நரம்பு, gluteal or iliac nerve.

23. தண்டு நரம்பு, cavernous nerve.

24. கடி தட நரம்பு, pudendal nerve.

25. தொடை நரம்பு, sialic nerve.

26. உள்ளங்கால் நரம்பு, calcanean nerve.

27. இரத்த நரம்பு, the nerve that supplies the blood vessels -Nervivasorum.

நரம்புக்கடை, நரம்பின் இறுதி அல்லது முடிவு, terminus of a nerve.

நரம்புக்கழலை, நரம்பு வஸ்துவினாலாக் கப்பட்ட கழலை, a tumour made up of nerve substance -Neuroma tumour growing from a nerve.

நரம்புக்காய், முருங்கைக்காய், drum stick -Hyperinthera moringa (fruit of); 2. நீண்டு மெலிந்த காய், thin long fruit.

நரம்புக்கிரந்தி, நரம்புகள் உப்பி உட்புறத்தில் தடிப்பதனால் இரச தாது ஓட்டமின்றி அதனால் இரத்தம் தேக்கப்பட்டு நரம்புகள் உலர்ந்து முடிச்சு உண்டாகி நரம்புகளை வெளிபக்கம் எழுப்பப் பண்ணும் ஓர் வகை கிரந்தி, varicose veins in which the veins are enlarged or dilated. Enlargement or dilatation is due to sluggish of or impediment to the circulation of the blood through the veins and this sluggishness may depend on debility or many other causes. The veins may be seen clustered in raised knots

under the skin in different directions.

நரம்புக்கிரந்திக் கழலை, இரத்த நாடிகள் பருத்து சில சமயங் கிழிந்து அல்லது பலவீனப்பட்டு அதனால் நாடிகளின் இரத்தம் ஒருவாறு திரண்டு காணப்படும் பையைப் போன்ற கழலை. சில சமயம் இதை அமுத்த ஓர் வித சத்தமும் வலியும் தோன்றும், a sacor tumour formed by the dilatation of the walls of an artery and filed with blood. It is accompanied with a systolic murmur and an increase of laminated coagulam caused by rupture disease or weakness of the arterial walls -Aneurysm.

நரம்புக் குடைச்சல், நரம்பின் உளைச்சல், neuralgia.

நரம்புக்குத்தல்,.

நரம்புக்குத்து, நரம்புச்சூலை, nervous pain.

நரம்புக்கூடு, உடம்பு முழுவதும் பரவியுள்ள நரம்புக்கூட்டம், a set cr series of nerves passing through the whole body -Nervous system.

நரம்புக்கூட்டம், நரம்பு வலை, a net work of nerves -Plexus.

நரம்புக்கூறு, நரம்பின் பாகுபாடு, nervous system.

நரம்புக்கேடு, நரம்புக்கு பலவீனத் தால் ஏற்படும் கெடுதி, nervous break down or prostration; 2. நரம்பிற்கு அழற்சி கண்டு வெந்து மெலிதல், degeneration or deterioration of the proper nerve substance -Degenerative neuritis; 3. நரம்பிற்குண்டாகும் அழிவு, destruction or dissolution of nerve tissue -Neurolysis.

நரம்புக்கோளாறு, நரம்புக் கேற்படும் பல வித குற்றங்கள், nervous affections or disorder or derangement.

நரம்புச்சக்தி, நரம்பின் வல்லமை, nerve power.

நரம்புச் சலனம், நரம்பிற்கு ஏற்படும் அழற்சி, nervous irritability.

நரம்புச்சன்னி, இழுப்பு நோய், nervous apoplexy; functional apoplexy.

நரம்புச்சாலம், நரம்பின் கண்ணறை, nerve cell.

நரம்புச்சிலந்தி, உடம்பில் நமைச்சல் கண்டு, பிறகு கொப்புளம் எழும்பி உடைந்து அதனுள்ளிருந்து புழுக்கள் நூலிழை போல் நீண்டும் வெளுத்தும் வெளி வரும் ஓர் வகைச் சிலந்திப் புண். இதில் புழுக்கள் அறாமல் வந்து விழுவது நலம். அப்படி அறுபட்டால் வீக்கம் வேதனை அதிகமாகும். இது சாதாரணமாக சருகு ஊறிய குளம், குட்டை, கிணறு முதலிய நீர் நிலைகளில் உற்பத்தியான சிறு புழுக்கள், குடிக்கும் அசுத்த நீர் மூலமாவாது குளிக்கும் தண்ணீர் மூலமாவது வாய் வழியாயும், உடம்பின் மயிர்க்காலின் வழியாயும் உட்புகுந்து முக்கியமாய் கால் அல்லது பாதங்களைத் தாக்கி அவ்விடத்தில் தீச்சுட்ட புண்ணைப் போல் நீர்க்கொப்பளம் போல் எழுப்பி உடைந்து அநேக புழுக்கள் வெளிப்படும். இது 20-30 அங்குல நீளமிருக்கும். பெண்களை விட புருஷர்களுக்கு இந்நோய் அதிகமாக காணும். சாதம், பாதரசம் இரண்டையும் அரைத்து வாழைப்பழம், பெருங்காயம் இவைகளை மத்தித்து கட்டவும் ஆறும். a thread like worm issued out from a blister occuring in any part of the body. This blister is frequently accompanied by itching of the body and when it breaks or is opened, the end of the worm may be found in it. This worm which exists in the stagnant water of dirty tanks, pools wells etc saturated with dried leaves and other rubbish matter is believed to penetrate through the hair follicles or perspiratory ducts of the skin of persons while bathing or washing in them or enter ito the stomach with the drinking water and then into the body making its way into the various parts of the body. It most frequently appears in the feet and legs in the form of blisters in

which in numerable worms are coiled round. These worms are generally 20-30 inches long -Guinea worms disease.

NOTE: It is also called Medina worm which inhabits the subcutaneus or intermuscular tissues of man and several domestic amimals. Its embryos are discharged through the openings in the skin upon contact with water. It was formerly called Filaria medinensis.

The end of the worms as its presents in the blister should be caught by a roll of sticking plaster and then by very delicate management, it should be extracted by inches daily. If the worm breaks abscess and fever are the general results but sometimes dangerous illness may also arise. So, it should not be attempted without skilled advice. Injections of a drop of carbolic acid into the worm will kill it and assist the removal of it easily from the blisters.

Adequate quantities of lime to such contaminated water supplies as step wells, tanks etc. has proved in controlling the spread of the disease. By boiling the water and straining it through a fire muslin will suffice to remove the cause and render the water innocucous.

நரம்புச்சிலந்திப்புழு, நரம்புச் சிலந்தி ரோகத்தில் உடம்பிலுண்டாகும் புழு. இது 20-30 அங்குல நீளமிருக்கும். guinea worm -Dracunculous medinensis. It is threat like worm 20-30 inches long.

நரம்புச் சுருக்கம், உடம்பின் கீழ் பாகத்தில் நரம்பு முடிச்சுகளாக சுருங்குந் தன்மை, a morbid enlargement knotty in shape, as often seen in the veins of the lower tremities -Vericosity of the veins.

நரம்புச்சுருட்டு, நாளத்தில் இரத்தம் தேக்கப்படுவதினால் காணும் நரம்பு முடிச்சு, a varicose condition of the veins due to obstruction in the free

passage of blood and formation of knots.

நரம்புச்சுளுக்கு, நரம்பின் சுளுக்கு, over straining of nerves -Sprain.

நரம்புச்சூலை, நரம்பு குத்து, nervous pain.

நரம்புச் சோர்வு, நரம்ப சோர்வடைதல், nervous prostration -Neurasthenia; 2. நரம்புத் தளர்ச்சி, nervous debility, nervous break down. see நரம்பிளைப்பு.

நரம்புத் தலைவலி, நரம்புக் கோளாறினால் ஏற்படும் ஒற்றைத் தலைவலி, a nervous affection marked by a periodic headache and various sensory disturbances -Migrane.

நரம்புத் தளர்ச்சி, நரம்பின் மெலிவு, nervous debility. See நரம்புச் சோர்வு.

நரம்புத் தாபிதம், நரம்புக்கு காவுண்டாகும் அழற்சி, inflammation of a nerve -Neurities.

நரம்புத்திடம், நரம்பின் உறுதி, nervous strength the specific energy peculiar to the nervous system -Neurosity.

நரம்புத்திரட்சி, நரம்பு நார்கள் வெளிப் படும் நரம்பு முடிச்சியைப் போன்ற சிறு உண்டை, a knot like mass of grey nervous matter forming a centre from which fibres radiate -Ganglion.

நரம்புத்திருகு, நரம்பு முறுக்கம், twisting of the veins.

நரம்புத் தோச்சி, நரம்பு வளர்ச்சி development of nerve tissue -Neurogenesis.

நரம்புத் தோற்றம், நரம்பின் எழுச்சி, enlarged or dilatated condition of the vein; 2. ஓர் மரணக்குறி, a symptom of death.

நரம்பு நடுக்கம், நரம்பு நடுங்கும் ஓர் நோய், morbid nervousness with physical unrest- Nervosity.

நரம்பு நரை, நரம்பிலுள்ள சாம்பல் நிறமான வஸ்து, the grey matter of the nerves.

நரம்பு நார், நரம்பின் நார் போன்ற வஸ்து, nerve fibre.

நரம்பு நீக்கல், உடம்பினின்று நரம்பை அகற்றல், excision of a part of a nerve -Neurectomy.

நரம்பு நோய், நரம்பைப் பற்றிய நோய், disease of the nervous system.

நரம்புப் பிடிப்பு, நரம்பிசிவு, spasm of the nerve; 2. நரம்பு வலிப்பு, contraction of the nerve; 3. மூச்சு விட முடியாது துன்புறுத்தும் நரம்பு வலி, spasmodic suffocotive attack -Angina.

நரம்புப் பிணைப்பு, நரம்புகள் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டிருத்தல், nerves or vessels intervoven or vessels -Plexus of nerves or anastomosis of vessels.

நரம்புப்பின்னல், இரத்தக் குழல்கள் அல்லது நரம்புகள் வலை போல் பின்னிக் கொண்டிருத்தல், See நரம்புப் பிணைப்பு.

நரம்புப் புடைத்தல், நரம்பு வீங்கிக் காணல், dilated or enlarged nerve or vein.

நரம்புப் புடைப்பு, நரம்பின் மேல் அழற்சியினால் முடிச்சுகள் உண்டாகி, சதைக்கு மேல் காணும் எழுச்சி, a form of neuritis characterised by the formation of nodes i the nerves -Neuritisnodosa.

நரம்புறைப்பு, நரம்பின் உறுதி, nervous strength, specific energy peculiar to the nervous system -Neuricity.

நரம்பு மணி, நரம்புப் போக்கிற்கு ஆதாரமான வஸ்து, any mass of nervous substances as a centre of nervous influence -Ganglion.

நரம்பு மண்டலச்சூலை, நரம்பு மண்டபத்தின் செய்கை அல்லது ஊக்கத்தைக் குறைக்கும் நரம்புகள், nerves whose stimulation lowers or in hibits the activity of the nerve centre, inhibitory nerves of the nervous system.

நரம்பு மண்டலம், நரம்பின் கோட்பாடு அதாவது உடம்பின் தொழிலை இயற்றுவதற்காக வேண்டி பல நரம்புகள் கூடுமிடம். இதில் நரம்புகள், நரம்பு, தசை, நார், முடிச்சு முதலியவைகள் சேர்ந்தது, series of nerves unite in a common function, a collective name for all the nerves and nerve centres, nervous tissues and ganglia considered together.

நரம்பு மத்திமம், நரம்பினடு, nerve centre.

நரம்பு முடக்கம், நரம்புப் பிடிப்பு, நோயாலும் அவபத்தியத் தினாலும் நரம்பை இழுத்து முடமாக்கல், contraction of limbs rendering one disabled or crippled due to disease or faulty diet- Shrinking of sinews cramping spasms.

நரம்பு முடிச்சு, நரம்பின் முடிச்சு விழும் அல்லது சுருட்டையாகும் ஓர் நோய், nodes on the nerves -Neuritis nodosa, knotty nerves; 2. நரம்புருண்டை, a mass of nervous matter -Neuroganglion.

நரம்பு முறுக்கேறல், நரம்புக்கு வலிவு அதிகப்படல் அல்லது நரம்பு உறுதிப்படல், development of the nervous energy, nerve being strengthened like a twisted one, the hardening of the substance of nerve Neurosclerosis.

நரம்பு மூலம், நரம்பின் பிறப்பிடம், nervous origin.

நரம்பு ரோகச் சிகிச்சை, நரம்பு நோய்களுக்கு செய்யும் பரிகாரம், treatment of nervous diseases -Neuriatry.

நரம்பு வலி, நரம்பிற்கேற்படும் வலி, nervous pain, pain in the nerve or in nerves -Neurodysia.

நரம்பு வலிமை, நரம்பு பலம், nerve energy; nerve potential.

நரம்புவாங்கள், நரம்பிழுத்துக் கொள்ளல், stretching of the nerves; 2. நரம்பு சுருங்கல், contraction of nerves; 3. உடம்பினின்று நரம்பு அல்லது நரம்பின் பாகத்தை நீக்கல், excision of removal of a nerve or its part.

நரம்பு வாதம், நரம்பிற்கேற்படும் வாத வலி. இது நரம்பிலும் அல்லது நரம்போடும் மார்க்கத்திலும் காணும் நோயிலும் இவ்வலி காணும். இவ்வலி மிகக் கொடுமை வாய்ந்ததும், விண்விண்ணென்று தெறிக்கக் கூடியதுமாயிருக்கும். இது உடம்பில் அனேக விடங்களில் காணும் இடத்தையும் காரணத்தையும் கருதி இது பலவகைப்படும். (உ.ம்.) மார்பு, முகம், சிரசு இவைகளும், விஷம், நீரிழிவு, சூலை முதலியவைகளும் காரணங்களாம். இதைக் கீல் வாதமெனக் கருதுவது தவறு. ஏனெனில் நரம்பு வாதம் ஒரேயிடத்தில் நிலைத்து நிற்கும். ஆனால் கீல் வாதமோ பல மூட்டுகளிற் காணுவதுமின்றி ஓடித் திரியும் சுபாவமுடையது. pain in a nerve or in nerves or the pain radiating along the course of a nerve -Neuralgia. It is also a name applied to pain due to diseases or other morbid conditions. The pain is of a severe darting or throbbing character attended by sensitiveness of the skin. It occurs in several parts of the body and is distinguished according to the part affected or to the cause as bronchial, malarial, diabetic, gouty, facial, occipital etc.

This should not be confounded with the rheumatic or arthritic pain as the former is confined to one particular part and the latter attacks several joints and is of wandering nature.

நரம்பு வாயு, நரம்பிற்கு காணும் அழற்சி அல்லது வீக்கம், inflammation or swelling of a nerve; 2. நரம்புத்தடிப்பு, thickening of a nerve or vessel; 3. விதைவாயு, inflammation of testis marked by pain and swelling of the spermatic cord -Orchitis. See ஆனந்த வாயு.

நரம்பு விசை, நரம்பின் வேகம், agility or brishness of a nerve; 2. நரம்பு பலம், strength of a nerve.

நரம்பு விறைப்பு, நட்டுக்கும்படி செய்யும் நரம்பு, nerve that causes erection.

நரம்பு வீச்சு, நரம்பிழுப்பினால் ஏற்படும் வலி, pain due to stretching of the nerves.

நவமூர்த்திமெழுகு, நவாச்சாரம், வீரம், பூரம், கௌரி, தாரம், இலிங்கம், வெள்ளை, வெடி யுப்பு, கறியுப்பு ஆகிய இவ்வொன்பதையும் ஒவ்வொன் றாக நாதத்தினால் 9 நாள் மெழுகைப் போல் அரைத்துத் திரட்டி வைத்துக் கொள்ளும் ஓர் வகை மருந்து, a wax like preparation or medicine obtained by grinding for nine days the following nine drugs first separately and then all together with Natham a prepared fluid -salammoniac, corrosive, sublimate, subchloride of mercury golden arsenic, yellow orpiment vermilion, white arsenic, nitre, common salt. They must be

grinded till they obtain the wax like consistency.

நவமூலம், மூளை மூலம், இரத்த மூலம், சீழ் மூலம், உள் மூலம் முதலிய ஒன்பது வகை மூல நோய்கள், the nine varieties of piles.

நவம், ஒன்பது, nine; *2.* பாம்பு, snake; *3.* சாரணை, one styled trianthema -Trianthema monogyna; *4.* மாரிகாலம், rainy season; *5.* புதுமை, novelty.

நவரக்கனி, see *நௌரக்கனி.*

நவரச மெழுகு, இராச பிளவை போம், a waxy medicine that cures diabetic carbuncle.

நவரசம், ஒன்பது வகை ரசம், the nine kinds of juices or essences; *2.* வாலைமுப்பு, quintessence of salt.

நவரத்தின சத்து, நவரத்தினங்களின் சத்து, essence extracted from nine gems.

நவரத்தினம், see *நவமணி.*

நவரத்தின வைப்பு, ஒன்பது வகை இரத்தினங்களைச் செய்யும் வைப்பு முறையைப் பற்றிச் சொல்லும் சட்டைமுனி செய்த ஓர் வைத்திய நூல், a treatise on medicine compiled by Siddha named Sattaimuni dealing with the artificial process of making the nine gems synthetically together with their qualities and uses in medicine.

நவரம்பழம், see *நவர வாழை.*

நவரை, (கடல் மீன்) 1. கல் நவரை; 2. பேய் நவரை, 3. செந்நவரை; 4. பரு நவரை என நான்கு வகை நவரை, a sea fish of four varieties.

நவரை, 90 நாளில் பயிராகும் நெல், paddy maturing in 90 days; 2. கருத்த நவரை அல்லது கருங்குருவை, black paddy possessing medicinal virtues; useful to prepare kadi; 3. See *நவரை வாழை.*

நவரை வாழை, மகர வாழை, a species of plantain.

நவரோதயம், சீனிக் கற்கண்டு, white sugar candy.

நவலோகக் களங்கு, நவலோகங்களையும் இரசத்தையும் சேர்த்துச் செய்யும் உருண்டை, alloy prepared with nine metals along with mercury.

நவலோகக் களிம்பு போக்கி, தேவதாளி அல்லது பேய்ப் பீர்க்கு, snake luffa -Luffa echinata.

நவலோகச் சத்து, ஒன்பது லோக வகைகளைச் சேர்த்துப் புடமிட்டு எடுத்த சத்து, the essence derived by subjecting the nine metals to violent heat or calcination -calx of nine metals.

நவலோகத் தகடு, ஒன்பது லோகங்களையும் ஒன்று சேர்த்து உருக்கித் திரட்டித் தட்டிய தகடு, the foil or plate of an alloy of nine metals.

நவலோகத் தங்கம்.

நவலோகத் துரட்டி, see *நவலோகாங்கம்.*

நவலோக பூபதி மாத்திரை, ஒன்பது லோகங்களையும் சேர்த்துத் தயாரித்து சுரம், சன்னி முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் பூபதி என்னும் கூட்டு மருந்துக் குளிகை, a reputed pill prepared as per process of Tamil medicine from a mixture of nine metals.

நவலோகபேதி, கெந்தி பாஷாணம், a poisonous compound of sulphur in its native state, a mineral poison; 2. ஒன்பது லோகங்களையும் பேதிக்கச் செய்யும் மருந்து, (in Alchemy) any substance capable of acting chemically on nine metals.

நவலோக மரணன், see *சோரபாஷாணம்.*

நவலோகமாரணி, see *தாம்பூரச்சிகை.*

நவலோகமேமாக்கி, இலவண பாஷாணம், a kind of prepared arsenic; 2. குங்கும பாஷாணம், one of the 32 kinds of prepared arsenic.

நவலோகம், ஒன்பது வகை உலோகங்கள். அவையாவன; பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், வங்கம், நாகம், குருத்துவம், குடவன் or பித்தளை, gold, silver, copper, iron, tin, lead, zinc, platinum and brass.

NOTE: சில நூல்கள் வேறு வகையாக கூறுகின்றன. அவை; தங்கம், வெள்ளி, செம்பு, அயம், வெள்வங்கம், காரீயம், நாகம், வெண்கலம், குடவன் என்பவை. some books treat some other nine metals as Navalogam, they are; gold, silver, copper, iron, tin, lead, zinc, bell metal and brass.

நவலோக வக்கினி குமாரன், உடம்பினிலுள்ள நோய்களை நெருப்பைப் போல் தகிக்கக் கூடிய ஒன்பது லோகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவோர் மருந்து, a reputed or well known remedy for curing or reducing to nothing like fire, all ailments in the system radically, prepared with the aid of nine metals.

நவலோக வங்குசம், காந்தம், load stone, magnet.

நவலோகவேதிச்சி, கருநெல்லி, black Indian gooseberry -Phyllanthus emblica (nigrum).

நவலோகாங்கம், காந்தம், load stone, magnet.

நவவடி பிறந்தோன், விந்து, நாதம், facundating fluid of either male or female seminal secretion of a male or ovarian secretion of a female.

நவ வாயில், நவத்துவாரம், the nine gates or openings in the human system.

நவளுகம், see நவனாகம்.

நவற்குப்பு, வெடியுப்பு, nitre.

நவனாகம், ஓமம், bishop's weed -Carum ajwaun; sison -Sison ammi.

நவாசாரகம், see நவாச்சாரம்.

நவாச்சாரக்காரம், நவாச்சார நீர், strong solution of ammonia -Liquor ammoniac; 2. நவாச்சாரவுப்பு, carbonate of ammonia -Ammoniac carbonas; 3. நவாச்சார செயநீர், a liquid with a very pungent odour and strong alkaline reaction obtained by exposing salammoniac with other ingredients in the night's dew.

நவாச்சாரக்கட்டு, நெருப்புக்கு ஓடாதபடி கட்டிய நவாச்சாரம், consolidated salt ammoniac which resists fire.

நவாச்சாரக்கிரகணம், நவாச்சாரத் தோடு கூட இரண்டு பங்கு சீமைச்சுண்ணாம்பும், நன்றாகக் காய வைத்துக் கலந்து பதங்கமாக வெரித்த ஓர் வகை ஓடுஞ் சரக்கு. இது உள்ளுக்கு கொடுக்க உதவாது. ஆனால் வலிப்பு, இழுப்பு, மூர்ச்சை, சூதக சன்னி ஆகிய இந்நோய் களில் மூக்கில் முகருவதற்காக உபயோகப்படுத்தப்படும். smelling salt volatile salt of ammoniac. It is generally prepared by vaidyans by mixing sal ammoniac with a double quantity of a chalk, then drying them carefully and sublimating with strong heat. The sublimate is a volatile salt and is used as a local stimulant to nose in fainting, fits, longours and hysteria.

நவாச்சாரம், வாசனையற்ற பளபளப்பான, நாரிழை போன்ற ஓர் வெண்மையான வஸ்து. இது சாதாரணமாய் இந்தியாவில் எல்லாக் கடை களிலும் விற்கப்படும். இது செங்கற் சூளையில் வேகாத பக்கங்களினின்று சேகரிக்கப் படும். ஒட்டகம் முதலிய மிருகங்களின் எருவைப் போட்டு எரிக்கப்படும். சூளை களில் மிகுதியாகக் கிடைக்கும். ஆனால் இவ்விதமாகச் சேகரிக் கப்பட்டதை சுத்தமான தென்று கருதப்படாது. ஏனெனில் மருந் துக்காக உபயோகிக்க வேண்டிய இதைக் கொதிக்கும் தண்ணீரி விட்டுக் கரைத்து இரட்டைத் துணியால் வடிகட்டிப் பிறகு காற்றில் ஆற வைத்துக் கட்டிகளாக எடுப்பார்கள். இக்கட்டிகள் கனதியாகவும்,

கசப்பும் விருவிருப்போடும் கூடியதாகவுமிருக்கும். இது மிக்க கடினமானதால் பொடி செய்வதற்கு கஷ்டமாயிருக்கும். இது தண்ணீரிலும் சாராயத்திலும் கரையக் கூடியது. சிறிய அளவில் உடம்பின் கோளாறுகளைப் போக்கக் கூடியதும், பெருமளவில் கோளங் களுக்கு சுறுசுறுப்பைத் தரக் கூடியதுமான குணம் வாய்ந்தது. இது வைத்தியத்தில் மிக உபயோகமாகும். நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், இவைகளின் கோளாறுகளுக்கும் ஈரல், கருப்பை நோய்களின் சம்பந்தமான பாண்டு ரோகம், முகவாதத்தினால் ஏற்படும் இரத்தப் பெருக்கு இவைகளுக்கும் நரம்பு கோளாறினால் ஏற்படும் தலைவலி, சூதக சிக்கல், கக்குவான் முறை அல்லது தொந்த சுரங்களுக்கும், உள்ளுக்குக் கொடுக்க குணமாகும். மேலும் இதைத் தண்ணீரில் கரைத்து சாராயத்துடன் கலந்து கழலைக்கட்டி, கோள வீக்கம், முலைக்கட்டிகள், முலைக்காம்பு ரோகம், ஓதம், வழுவுண்ட காயம், சுளுக்கு, சில சரும நோய்கள் முதலியவைகளுக்குப் பூசவுதவும். கன்னார் உலோக பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவதற்கும் இந்த நவாச்சாரத்தை உபயோகிப்பார்கள். இதை நெருப்பிற் கோடாதபடி கட்டினால் வாத வேலைக்கு உபயோகப்படும். ஆனால் கட்டுவது அசாத்தியமான காரியம், கசப்பும், புளிப்பும் வெகுட்டலுமுள்ள தாயுமிருக்கும். மருந்துக்கு இதை சுத்தி செய்து உபயோகிப்பார்கள். இது உஷ்ணத்தைக் கொடுக்கும். கபத்தை அறுக்கும். வியர்வையை உண்டாக்கும். மூத்திரத்தை வடிக்கும். உடம்பில் புண்களைத் தாக்கும், வாத நோய், இடுப்பு வலி, முகவாதம் இவைகளுக்கு விடாமல் கொடுத்து வரலாம். நன்னாரிவேர்க் கஷாயத்தில் கொடுக்க முடக்கு வாதம், கீல் வாயு, சூலைக்கட்டு போம். கற்பூர செயநீருடன் கலந்து கொடுக்க கருப்பையின் வலி, கருப்ப வாயு இவைகள் போம்.

சூரணித்துத் தேனில் கொடுக்க மஞ்சட் காமாலை, பக்க சூலை, சீதபேதி இவைகள் குணமாகும். முருங்கை வேர்க் கஷாயம் அல்லது முள்ளிக் கஷாயத்தில் சூரணித்துக் கொடுக்க ஈரல் நோய், மகோதரம் போம். இதனால் வயிற்று வலி, குடல் குத்தல், பெரு வயிறு அசுமரி போம், a colourless in odorous and translucent fibrous mass known as salammoniac- Ammonii chloridum -Murias ammonia. It is generally procurable in almost all the bazaars in India. It is obtained from the unburnt extremity of brick kilns in which the manure of animals especially that of camel is used as fuel. It is always more or less impure. When it is intended for medicinal purpose, it requires to be dissolved in boiling water. strained through a double thick cloth and the solution evaporated to crystallisation. It is a thick heavy substance, it so hard that it cannot be easily powdered and is of a bitter acrid taste. It is soluble in water and rectified spirit. It is an alterative in small and continued doses, but in large doses, it is a stimulant its action being chiefly directed on glandular structures. It forms a useful drug in medicine. In chronic affections of the lungs, the liver and the spleen, in dropsy connected with hepatic and ovarian diseases, in passive haemorrhage especially hemoptysis, in neuralgic and rheumatic affections of the face, in certain forms of nervous head aches, in amenorrhoea, hooping cough and in inter millent and continued fevers, it has been employed internally with advantage. Locally or externally, it is applied in solution to indolent tumours enlarged glands, incipient mammary abscesses hydrocele, bruises, sprains and certain chronic skin diseases. Metal workers or solderers use it for cleaning surfaces of metals and tinmen for facilitating union between tin, iron or copper. When heated it

volatilizes easily, but when consolidated it becomes useful in Alchemy but it is an impossible task ordinarily. If given in sarsaparilla decoction it cures rheumatism, in the decoction of the root of drumstick tree it cures ascites and diseases of liver and in honey it cures jaundice dysentery and piueracy.

NOTE: It is a compound formed by acids in union with alkalies and metallic oxides. It is not the sal ammoniac of ancients which is considered as impure common salt or perhaps rock salt. It has a nauscous taste and is generally covered by the addition of Indian liquorice.

நவாச்சார வாயு, நவாச்சாரத் தினின்று கிளம்பும் விஷக் காற்று. இது தனித்தும் கலந்தும் தாவரங்களிலும், தாது வகை களிலும் பரவி இருக்கும். இது சிறிய அளவில் வாயு மண்டலத்திலும் பரவி உள்ளது. மனிதரின் மூத்திரத்திலும் காணலாம். அழுகிய நாற்ற முள்ள சீவராசிகளிலும் பொருந் தியுள்ளது. இவ்வாயு நிறமற்ற தாயும், ஒளிபாயுந் தன்மையதாயு முள்ளது. எறிப்பு நாற்றமும், விருவிருப்பான ருசியுமுள்ளது, gas ammonia (NH_3). It is a poisonous gas found in Sal ammoniac. It is found widely diffused either in a free or combined state extensively in the organic and in organic kingdoms of nature. It exists in minute quantities in atmospheric air and is one of the constituents of urine in man; it is also a product of putrefaction in animals matter. It is a colourless transparent gas with a powerful pungent odour and acrid alkaline taste.

நவாச்சார வாயு செயநீர், இதனால் தாம்பூர பற்பம், செந்தூரத் திலுள்ள தோஷங்கள் போம், solution of Ammonia. It is capable of removing the defects in calcined oxides of copper either red or white.

நவாத்து, மணற் சர்க்கரை, aska sugar.

நவான்னபானம், புது அரிசியைச் சமைத்த சோறு. புது மதுபானம். cooked new rice and new wines. (old rice and old wines are always beneficial).

நவான்னம், வெஞ்சோறு, சுடு சோறு, hot cooked rice.

நவித்தல், அவித்தல், baking.

நவிரம், உச்சி, crown of head; 2. தலை, head, 3. மயில், Peacock; 4. மலை, mountain.

நவிரெழுசங்கு, முட்சங்கு, four spined monetia - Monetia tetra Cantha alias Azima tetra Cantha.

நவிர், ஆண் மயிர்; male hair, முள் முருக்கு, Indian coral tree - Erythrina Suberosa.

நவீன, புதிய modern; 2. தற்காலத்திய pertaining to the present time; 3. அதிசயமான, novel.

நவீன நூலாராய்ச்சி, புதிய நூற் பரிசோதனை, modern scientific research.

நவு, கொத்துமல்லி, coriander.

நவுகா, see நவுகு.

நவுகு, கருமுருகி. அதாவது கையாந்தகரை, eclipre plant -Eclypta prostrata.

நவூரியம், சிவப்பு சிற்றகத்தி, red variety of sesban- Sesbania acgyptiaca.

நவோத்திருதம், வெண்ணெய், butter.

நவ்வங்கம், வெள்வங்கம், white lead, tin.

நவ்வல், தித்திப்பு நாவல், sweet jaumoon -Eugenia jambolina.

நவ்வல் பிசின், நாவல் மரத்துப் பிசின், gum of jaumoon tree.

நவ்வி, மான், deer; 2. அழகு, beauty; 3. இளமை, tender age; 4. பெண்மான், female deer.

நவ்வு, ஆடு, sheep.

நவ்வூகிதம், வரிக்கற்றாழை, striped aloe -Aloe genus.

நழுகிய பீலிகம், தன் இடத்தை விட்டு நழுவிய இடப் பாட்டால், displaced spleen.

நழுக்குதல், சிறிது சிறிதாக மலம் போதல், frequency of stools little by little.

நழுவமிழ்து, கூழ், pudding.

நழுவல், இடம் விட்டுப் பெயரல், displacement.

நழுவு சாதம், see நழுவமிழ்து, கூழ்.

நழுவுதல், see நழுவல்; 2. கைநழுவ விடல், slipping out of the hand; 3. சப்பை நழுவுதல், dislocation of blade as of thigh or shoulder.

நழுவை வாதம், சாப்பிட்ட உணவு தங்காமல் வெளி வந்து வயிற்றினுள்ளே பிண்டத்தைப் போற் பிரண்டு காட்டி மேலாக குலையிலேறி உளைந்து காணுமோர் நோய், an abdominal enlargement of moving swelling between the regions of the heart and abdome due to indigestion or dyspepsia.

நளகம், காலின் உட்புறத்திலுள்ள எலும்பு காலின் பேரெலும்பு, the large bone of the lower leg situated on the medial side -Tibia; 2. முன்கால் எலும்பு, the skin bone; 3. குழாவைப் போன்ற உறுப்பு, a tubular organ of the body; 4. நீண்ட எலும்பு, any long bone of the body.

நளகி, தாமரை, lotus flower -Nelumbium speciosum.

நளகுகா, சீனிக்கொத்தவரை, a kind of cluster beans -Cyamopsis psorulioides.

நளசிகமஞ்சரி, துளசி, holy basil -Ocimum sanctum.

நளத்தம், சடாமாஞ்சில், Indian spikenard- Cyperus stoloniferus.

நளபன், சணல், hemp- Crotolaria juncea.

நளபாகம், நன்றாய்ச் சமைத்தது, dish well cooked.

நளப்பன், வெட்பாலை, dyer's oleander, blue dying rose bay -Wrightia tinctoria alias W.tomentosa.

நளமீன், ஓர் வகை மீன், a kind of fish.

நளம், தாமரை, lotus, See நளகி; 2. ஓர் பூடு, கிரந்தியம் -Phragmites harka alias Arundo Karka.

நளல், நண்டு, crab.

நளன், ஓர் வகைக் குரங்கு, a kind of monkey.

நளி, குளிர்ச்சி, chillness; 2. தேள், scorpion; 3. வெண்சாரணை, a species of trianthema -Trianthema monogyna; 4. செறிவு, closeness as leaves.

நளிகை, ஓர் வகைக் குழல், a kind of syringe; 2. மூங்கிற் குழாய், bamboo pipe.

நளிர், குளிர், cold; 2. நண்டு, lobster.

நளிர் காய்ச்சல், குளிர் காய்ச்சல், shivering fever; ague.

நளிர்குளிர், நடுங்கும் குளிர், Shivering Cold.

நளிர் சுரம், குளிர் காய்ச்சல், see நளிர் காய்ச்சல்.

நளிர்தல், குளிர்தல், feeling chill; 2. நடுங்குதல், shivering.

நளிர் மண், செம்மண், red ochre.

நளிவிடம், தேள் விஷம், poison from scorpion sting.

நளின கங்கை, சித்தினி சாதிப் பெண், one of the four classes of women divided accurding to lust.

நளின நாபி, தாமரையைப் போன்ற கொப்பூழ், lotus shaped navel Lotus navel.

நளின மாகுதல், குளிர் நடுக்கம் காணுதல், getting shiver with cold, trembling with cold.

நளின மாதா, சடா மாஞ்சில், a medicinal grass known as Indian spikenard -Cyperus stoloniferus.

நளினம், நாபியின் கீழ் குடலிருக்கும் வலது பாகத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் 5 அங்குலமுள்ள பை, a worm like

diverticulum or pouch of the cecum about 5 inches in length just below the navel region; *2.* *தாமரை*, lotus of 1000 petals; *3.* *நீர்*, water, *4.* *பாசி*, moss.

நளின *விருட்சம்*, *முண்டினி விருட்சம்*, an unknown tree.

நளின *வேதி*, *செம்மரம்*, red wood.

நளினி, *பாற்சோற்றி*, Indian gutta percha -Dichopsis elliptica; *2.* *ஓர் வாசனைப் பண்டம்*, a fragrant substance; *3.* *தேங்காய்ப் பாலினின்று தயாரிக்கும் ஓர் வகைப் போதை வஸ்து*, a fermented and intoxicating substance prepared from the milk extracted from the cocoanut kernal; *4.* *தாமரை*, lotus; *5.* *பத்மினி சாதிப் பெண்*, first of the four classes of women divided according to lust.

நளினீசம், *தாமரை மணி*, lotus bead.

நளினீருகம், *தாமரைத் தண்டு*, lotus stalk.

நளு, *அட்டை*, centripede.

நளுங்கு, *அளுங்கு*, a large lizard, Manis brachyara; *2.* *ஓர் கிளிஞ்சல்*, bivalve.

நளை, *ஏலத்தோல்*, the husk of cardamon.

நள், *உச்சிப் பொழுது*, noon; *2.* *நள்ளிருள்*, midnight.

நள்ளி, *நண்டு*, crab, lobster.

நள்ளிருணாறி, *இருவாட்சி*, a variety of jasmin -Jasminum sampuc.

நள்ளிருள், *நடு இராத்திரி*, midnight.

நறதியா, *வட்டதுத்தி*, Rox burghs lotus croton -Macaranga Rox burghii; *2.* *பூசினி*, pumpkin.

நறநறவெனல், *நறநறவென்ற சப்தமுண்டாகப் பல்லைக் கடித்தல்*, (imitative) sounding as by gnashing and grinding the teeth.

நறப்பிரியம், *பற்பாடகம்*, fever plant- Mollugo cerviana.

நறம்பருப்பு, *இஞ்சி*, green ginger.

நறவம், *அனிச்சை*, snake jasmine -Rhina canthus communis; 2. *குங்கும மரம்*, scarlet croton Mallotus philippinensis; 3. *ஞாழல்*, which see; 4. *தேன்*, honey; 5. *வாசனை*, fragrance, perfume; 6. *ஓர் கொடி*, a creeper; 7. *கள்*, toddy; 8. *ஓர் சிறிய மரம்*, caesalpinia.

நறவிகா, see *நறவம்*.

நறவு see *நறவம்*.

நறவுசாரம் *குங்குமம்*, saffron power of a fine crimson colour worn by a woman on the fore head; 2. *குங்குமப்பூ மரம்*, a fragrant tree -Crocus sativus; 3. *வாசனை*, odour; 4. *தேன்*, honey; *5.* *சாப்பிரா*, monkey turmeric -Bixa orellana; 6. see *நறவம்*.

நறளை, *காட்டு பிரண்டை*, *நறளைப் பூடு. இதன் காய் மேற்பக்கம் தட்டையாயும், அடி நான்கு பிரிவினையுடையதாயு மிருக்கும். இதனுள் விதை நான்கு, பூக்கள் பச்சை சிறியன. மழை காலத்தில் பூக்கும். இது அடியிற் கண்டபடி பலவகைப் படும்.* iguanas foot vine -Vitis pedata alias Cissus pedatus, medicinal plant used for purifying copper. It takes off the vardigris of copper especially the root. Fruit flattened at the top usually four to bed and four seeded. Flowers green and small flowering in the rainy season. It consists of different kinds as mentioned below.

1. *புளி நறளை*, sore creeper -for grape -Vitis carnosa alias V.muricata, arid roots used in medicine.
2. *பெருநறளை*, heart leaved vine -Vitis lanata alias Vitis cordifolia.
3. *பெரும் புளி நறளை*, large acid naralay -Vitis muricata alias Cissus muricata.
4. *சிறு புளிநறளை*, small acid naralay -Vitis gmelina alias V.linnae.
5. *சிறுநறளை*, large wooly -lobed vine -Vitis tomentosa.

நறா, கள், toody; 2. வாசனை, fragrance; 3. தேன், honey.

நறாவி, பத்மினி சாதிப்பெண், see நளினி.

நறிவிரை, see நரிவிளா.

நறிவெங்காயம், see நரிவெண்காயம்.

நறு, அகல், coromandel ailanto -Ailanto excelsa.

நறுக்கரிசி, பாதிவெந்த சோறு, half cooked rice.

நறுக்குக்கொடிச்சி, தொழு கண்ணி, telegraph plant — Hedysarum gyrans.

நறுக்குத்திப்பிலி, கண்டத் திப்பிலி, root of long pepper அல்லது தேசாவரம்.

நறுக்குவெட்டி, வெட்டி நெட்டி, the stalathe — Aeschynomene aspera.

நறுக்குமூலம், திப்பிலிவேர், see திப்பிலி மூலம்; 2. வெட்டிவேர், khus khus root;3. நன்னாரிவேர், sarsaparilla.

நறுங்கரந்தை, நாறுகரந்தை, sweet basil — Ocimum basilicum; 2. சிவகரந்தை, shivas basil — Ceylon tools of Sphaeranthus zeylanicus.

நறுங்கற்றாழை, see கற்றாழை, aloe.

நறுங்குறிஞ்சி, நல்ல குறிஞ்சி, cone head — Strobilanthes genus; 2. சிறு குறிஞ்சி, medium dense a criminate leaved cone head — Strobilanthes cuspidatus, china mindie Lawsonia spinosa.

நறுஞ்சுதை, நல்ல பசும்பால், pure cow's milk.

நறுஞ்சோதி, ஒரு வாசனைப்பூ, a fragrant flower.

நறுதாளி, see நறுந்தாளி.

நறுநகை, seeநறுந்தாளி.

நறுநன்றி, see நறுநிண்டி.

நறுநாற்றம், சுகந்தம், fine smell.

நறுநிண்டி, நன்னாரி, India sarsaparilla — Hemiduscus indicus (typica).

நறுநெய், பசுநெய், cow's ghee.

நறுந்தக்காளி, தக்காளி, Indian winter cherry — Physalis peruviana; 2. உபரசத்தின் தோஷத்தைப் போக்கு மோர்வகைத் தக்காளி, a kind of winter cherry capable of removing the impurities and purifying the natural substances contemplated in the Tamil Siddha Medicine.

நறுந்தாது, வாசனைச்சரக்கு, perfumes.

நறுந்தாளி, ஓர்வகை வாசனைத் தாளி, இதன் இலையைக் கீரையாக உபயோகிக்க உள்ளுறுப்பின் எல்லாவித அழலை, விரணம் முதலிய வைகளைப் போக்குவதுடன் தேக உஷ்ணம், பிரமேகம் போம், சுக்கிலவிருத்தியாகும், தொண்டை, மார்பு ரணம் போம், இதுவே நல்லதாளி, a kind of fragrant tauli deer's foot — Convolvulus arvensis alias C. gemellus; 2. நஞ்சுக்கொடி, the navel cord of a new born child.

நறுந்திகா, சுக்கு நாறிப்புல், ginger grass — Panicum repens.

நறுந்தேன், கொம்புத்தேன், honey collected on branches of trees.

நறுந்தைலம், வாசனைத் தைலம், an odori ferous oil, balsam.

நறுமரம், பெருமரம், பீநாறி மரம்,foetid smelling tree.

நறுமருப்பு, see நறும்பருப்பு.

நறுமகாசீரம், நற்சீரகம், cumin seed — Cuminum cyminum.

நறுமணம், நல்ல வாசனை, fragrance, good smell.

நறுமணத்தக்காளி, மணித் தக்காளி, Indian hounds berry Solanum nigrum; 2. சிவப்பு மணித்தக்காளி, red Indian hounds berry — Solanum rubrum.

நறுமலர், வாசனைப்பூ, fragrant flower.

நறுமாதுளம், தித்திப்பு மாதுளை, sweet pomegranate — Punicum granatum.

நறுமுதல், பல்லைக் கடித்தல், grinding the teeth in children this is a symptom of worms

in the intestines, 2. பல்லாற்கடித்தல், biting.

நறுமுதிரம், வனமிரட்டி.

நறுமுருக்கை, see நறுமுருங்கை.

நறுமுருங்கை, முருங்கை, drum stick — Hyperanthera moringa.

நறுமுலிகா, சுரபுன்னை, soora poon fragrant poon —Ochro carpus longifolia.

நறுமுறுக்கை, see நறுமுருங்கை.

நறுமுன்னை — முன்னை அல்லது பசுமுன்னை, Indian head ache tree. It is so called from the plant having an agreeable aromatic odour — Premna integrifolia.

நறுமை, சுகந்தவர்க்கம், வாசனைவர்க்கம், aromatic ingredients, a class or group of fragrant drugs;2. வாசனை, perfume, scent.

நறும்பருப்பு, இஞ்சி, green ginger;2. சுக்கு dry ginger; 3. கழற்சி,bonduc nut — Caesalpin in bonduc.

நறும்பலா, ஈரப்பலா, bread fruit tree — Artocarpus incisa alias A.pubescens.

நறும்பிசின், சாதிசம் என்னும் ஓர் வகைப்பிசின், a kind of fragrant resin known as sadisam; 2. பறங்கிச் சாம்பிராணி, true olibanum frankincense; 3. சூரியபோளம், socotrine aloe — Aloe succotrina. black myrrh;4. ஏலம், cardamum; 5. குந்திரிக்கம், which see.

நறும்பிலி, ஓர் வகைத்தாலி, South Indian pine — Podocarpus latifolia.

நறும்புகை, சாம்பிராணிப்புகை, fumes of frankincense; 2.வாசனைப் புகை, fragrant smoke.

நறும்புல், வாசனைப்புல், fragrant grass — Andropogon muricatus.

நறுவல்லி, பிண்ணாக்குச்செடி, which see.

நறுவிலி, விருசு மரம், இதுவே பெரிய நறுவிலி, ஓர் வாசனை மரம்,இதன் பழம் தின்பதற்கு உருசியாயிருந்ததால் இப்

பெயர் வாய்ந்தது போலும், இது செடியாகவும், அல்லது மரமாகவும் இருக்கும், இலைகள் மாறி மாறியும், பூக்கள் கொத்தாகவும், காய்கள் அண்டவடிவாயும், உட்பக்கம் நான்கு பிரிவுகளாயும் பிரிவு ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதையும் உண்டு, பூக்கள் அனேகவித நிறங்களா யிருக்கும், தோட்டங்களிலும், மைதானங்களிலும் வைத்து வளர்க்கப்படும், இதன் கொட்டை களியைப் போன்ற சதைப் பற்றுள்ளது, இதன் மரப்பட்டை துவர்ப்பாதலின் கஷாயமிட்டு வாய் கொப்பளிப்ப தாகவும், இதன் பழம் தின்னலாம், இதனின்று பிசின் எடுக்கலாம், உட்பட்டையினின்று கயிறு திரிக்கலாம். மரவண்டிகள் செய்யவுதவும், இதன் வேர் எலும்புருக்கியைத் தீர்க்கும் (2) இம்மரம் விசாலமாயும், இலைகள் அடர்ந்துமுள்ளது, பட்டை சாம்பல் நிறம், அனேக வெடிப்புகளுள்ளது, காய்கள் குலைகுலையா யிருக்கும், பழத்தின் சுவை மெதுவாயும், வழவழப்பாயு மிருக்கும், இப்பழம் அதிக இருமலைத் தணிக்கும், எரிச்சல், வறட்சி இவைகளைப் போக்கும். ஆகவே வாயில் அடக்கிக் கொள்வதுண்டு, அன்றியும் இரத்த பித்தம் பிரமேகம் போம், (3) இதன் கொட்டையை இடித்துச் சூரணித்து எண்ணெயிற் குழைத்துப் படைகளுக்குப் போடலாம், இலைக்கு மூலரத்தமும், வேருக்கு அஸ்திசிராவமும் குணமாகும். (4) முகத்திற் காணும் கொப்புளங்கள் பருக்களுக்கு இதன் இலையைப் பிழிந்து தடவுவதுண்டு; பட்டையை இடித்துக் காய்ச்சி கஷாய மிட்டு வாய்ப்புண், பல்லின் இரத்தம், பல்லாட்டம் இவை களுக்குக் கொப்புளிக்கும் நீராக உபயோகிக்கலாம், பட்டையின் சாற்றைத் தேங்காயெண்ணெயிற் கலந்து உட்கொள்ள வயிற்று நோய் குணமாகும். இதில் அடியிற் கண்டபடி பலவிதமுண்டு.

Sebesten — Cordifolique alias C.rothi C.Myxa. It literally means a fragrant tree and is so called from its fruit being pleasant to

taste. It is also known as lobesten. It may be found as a tree or shrub. Leaves are alternate or nearly opposite; flowers in clusters, fruit is oval with one to four cells each with a seed, flowers of various colours according to kinds found grown in gardens and in plains, nut surrounded with mucilaginous pulp. Dection of the bark astringent and used as gorgle, pulp of fruit eaten given a gum, inner bark is made into rope; its root is a useful remedy in tuberculosis of the bones; wood is used in carriage works and for furmiture. The following are the different kinds.

1. பெரிய நறுவிலி, common large sebesten, broad leaved sebesten — Cordia oblique.
2. பொன்னறுவிலி, golden sebesten cuba sebesten alias Cordia sebestina.
3. சிறுநறுவிலி, small sebesten, phlem killer — Cordia myxa alias C.africana.
4. நாய்நறுவிலி, smaller disc leaved sebesten — Cordia monoica.
5. அச்சிநறுவிலி, rough leaved sebesten — Cordia sebestena typica.

நறுவிலியிலைத் தசைமடிப்பு, mystile shaped fleshy bodies — Carunculae myrti formis.

நறுவிலிப்பழம், நறுவிலிச் செடியின் தித்திப்பும், பிசுபிசுப்புமுள்ள பழம், the sweet mucilaginous fruit of sebesten.

நறுவிலியிலைச்சவ்வு, யோனித் துவாரத்திற்குள்ளிருக்கும் 4 மடிப்புகளுள்ள சுருங்கிய தசை, சிலர் பிறைச்சவ்வு கிழிந்து இவ்வாறு காணப்படு மெனத் தப்பு அபிப்பிராயம் கொள்வர், 4 rings or folds of the membrane in the vagina, resembling myrtle leaves— Carunenlae myrtiformis. They are not the remains of the ruptured hymen as is mistakenly construed.

நறுவிளம்பிஞ்சு, வாசனையுள்ள இளங்காய், fragrant tender fruit; 2. நறுவிலிச் செடியின் இளங்காய், the young fruits of sebesten.

நறுள், see நகரை.

நறை,கள், toddy; 2. புளித்தமது, fermented liquor; 3. தேன், honey; 4. சந்தனம், sandal paste; 5. நறும்புகை, incense fumes aromatic fumes; 6. வாசனை, perfumes; 7. வாசனைக்கொடி, fragrant creeper.

நறைக்காய்,சாதிக்காய், இது பஞ்சவாசத்தொன்று, nutmeg. It is one of the five aromatics or spices.

நறைசகி, கடுக்காய், gallnut — Terminalia chebula.

நறைபடுபுகை, கொழும்புகை, incense.

நறையால், பகன்றைக்கொடி.

நற்கந்தம், நல்ல வாசனை, fragrant smell opposite of துர்கந்தம்,stink.

நற்கரணாதியெலும்பு, மாரெலும்பு, breast — bone, chest bone — Sternum.

நற்கருணை, காராக்கருணை, elephant foot yam having no acrid taste — Typhonium orixense; 2.இராப்போசனம், supper.

நற்கல், ஆட்டுக்கல், granite stone mortar and pestle for grinding wet materials.

நற்கள்ளி, அழுகண்ணி, Indian weeping plant.இதில் மூன்று வகைகள் உண்டு.

1. பெரும் அழுகண்ணி, Drosera peltata.
2. சிறு அழுகண்ணி, Drosera burmanni Vhl.
3. நாட்டு அழுகண்ணி, Drosera indica Lin.

NOTE:- Recent research by R.Kumarasamy M.A. it is identified as a carnivorus herb not tree.

நற்கனிச்சாறு, இனிப்பு பழத்தைப் பிழிந்த சாறு.juice of sweet fruit.

நற்காந்த பற்பமாக்கி, இடுகொள், four leaved cassia — Cassia absus. It is capable of calcining load stone.

நற்காமம், ஒத்தகாமம், equal pleasure, equal lust.

நற்காரம், வழலை, efflorescent salt found on the soil of fuller's earth.

நற்குணி, நல்ல குணமுடைய பொருள், drug with good properties.

நற்குலமேரு, செம்புமலை, mountain of copper ore.

நற்கேசி, see நற்கோலி.

நற்கையான், கரிசலாங்கண்ணி, eclipse plant — Eclipta prostrata.

நற்கொம்மட்டி, கொம்மட்டி, மாதுளை, which see.

நற்கோலி, தக்கோலம், which see.

நற்கோவை, தித்திப்புக் கோவை, sweet caper — Lehneria umbellata; 2. see நல்ல கோவை.

நற்சகுனம், நல்ல சகுனம் அல்லது குறி, happy angury.

நற்சங்கு, சங்கஞ்செடி, four spined monetia — Azima tetracantha.

நற்சத்தி, நவாச்சாரம், which see.

நற்சந்தனம், சாதிச்சந்தனமரம், இக்கட்டையால் சீழ்ப்பிரமியம் போம், அறிவும், காம விச்சையுமுண்டாம், good sandal wood. It cures gonorrhoea; increases sexual passion; 2. இழைத்த சந்தனம், Sandal paste.

நற்சரக்கு, உயர்ந்த அல்லது மேலான சரக்கு, superior material; 2. கலப்பில்லாச் சரக்கு, unadultered drug.

நற்சர்ப்பம், நல்லபாம்பு, cobra.

நற்சா, happy death; 2. பிணிபடாச் சாவு, death without sufferings from disease.

நற்சாங்கம், தாலம்ப பாஷாணம், a kind of native arsenic.

நற்சாந்தம், நச்சுப்புல், red poisonous grass.

நற்சாந்து, சுண்ணச்சாந்து, slaked lime paste with sand; 2. சந்தனக் குழம்பு, sandal paste.

நற்சாளை, ஓர்வகைச் சாளைமீன், fringed labeo — Labeo fimbriatus.

நற்சாறி, see நவாச்சாரம்.

நற்சித்தன், இராசவர்த்தக்கல், which see.

நற்சித்தி, கருநொச்சி, an unknown black variety of chaste tree — Vitex genus; 2. விழுதி, which see.

நற்சிலை, கருங்கல், granite stone.

நற்சிறிது, நிலவேம்பு,French chiretta — Andrographis paniculata alias Justicia paniculata.

நற்சிந்தில், சீந்தில், moon creeper — Menis permum cordifolium. c.f. பொற்சீந்தில், which is a sweet kind growing in hilly places, yellow within when broken.

நற்சீரகம், கறிச்சீரகம், cumin used in cooking.

நற்சீர், நற்சீரகம், which see.

நற்சீனப்பால்,see பரங்கிப்பட்டை, China root.

நற்செங்கல், மஞ்சள் காவிக்கல், yellow ochre;2. காவிக்கல், red ochre.

நற்சேவகன், கோடங்கிழங்கு, கார்த்திகைக் கிழங்கு root of Malabar glory — Gloriosa superba.

நற்பசளை, See பசளை.

நற்பச்சை, துரிசு, blue vitriol — Subascetate of copper.

நற்படிரம், சந்தனம், sandal wood paste.

நற்பரகுன்றி, சிந்துலவணம், Sindh salt; 2.கடலுப்பு, sea salt.

நற்பலம், வெட்பாலை, blue dying rose bay — Wrightia tinctoria alias Nerium anti dysentericum.

நற்பலா, வேர்ப்பலா, trunk jack fruit — Artocarpus integrifolia.

நற்பவளம், நல்லபவழம், good coral.

நற்பனை, பெண்பனை, female plamyra tree.

நற்பன்னகம், பாம்புவிஷம், snake poison.

நற்சகெந்தி, சுத்தகெந்தகம், pure sulphur.

நற்பாம்பு, நல்ல பாம்பு, cobra.

நற்பாலை, ற்சோற்றிப்பாலை, milk tree — Malabar paulary — Dichopsis elliptica.

நற்பீடகம், வாதுமைக் கொட்டை, almond.

நற்பீர்க்கு, கறிப்பீர்க்கு, common luffa — Luffa acutangula.

நற்பிரியம், பற்பாடகம், fever plant — Mollugo cerviana.

நற்போசனம், நல்ல சாப்பாடு, rich meals, dainty dish; 2. சைவசாப்பாடு, vegetable food.

நற்றலைதேவி, பொற்றலைக் கையாந்தகரை, மஞ்சள் கரிசலாங்கன்னி, See கரிசலை.

நற்றாய், பெற்ற தாய், own mother as opposed to செவிலித்தாய், foster mother.

நற்றாளி, தாளிக்கொடி, hedge bind weed — Ipomea sepiaria; 2. சிறுதாளி, common creamy white bindweed — Ipomea obscura (gemella).

நற்றும்பை, தும்பை, leucas flower - Leucas aspera.

நற்றுடி, நாவல்மரம், jambu tree — Syzigium jambolanum alias Eugenia jambolana; 2. வேர், root.

நற்றுளசி, நல்லதுளசி, holy basil — Ocimum sanctum.

நற்றுளி, அத்திப்பிசின், gum of fig tree; 2. அத்திமரம், fig tree — Ficus glomereta alias F.racemosa.

நற்றூக்கம், அயர்ந்த தூக்கம், deep sleep.

நற்றூபம், சாம்பிராணி, frankincense, benzoin; 2. வாசனைத் தூபம், fragrant fume.

நற்றேசி, கழுதை, ass.

நனந்தம், புன்கு, poon tree — Calophyllum tomentosum alias Dalbergia saborea; 2.சணல், hemp.

நனந்தலை, உச்சி, crown of the head; 2. நடு, middle.

நனவு, விழிப்பு, wake fulness as opposed to கனவு, dream; 2. மயக்கம் நீங்கல், being free from drowsiness.

நனை, கள், toddy; 2. தேன்,honey; 3. பூ மொக்கு, flower bud; 4. நனைத்தல், soaking;

5. எறும்பு, ant; 6. கச்சோலம், an aromatic drug; 7. பூவரும்பு, flower not yet blosomed.

நனைதல், ஈரமாதல், becoming wet.

நனைத்தல், ஈரமாக்கல், wetting, soaking.

நனைந்தவம், சிறு கட்டுக்கொடி, which see.

நனையாவரட்டி, ஆகாசத் தாமரை, sky lotus — Distia stralioles alias Pistia stratiotes.

நனையாவிருட்டி, கொட்டைக் கரந்தை fish eye plant — Sphaeranthus indicus.

நனைவிற்காட, ஈரமில்லாப் பூமி, dry place.

நனைவு, ஈரம், dampness, moisture.

நன்காடு, சுடுகாடு, cremation ground.

நன்பகல், நடுப்பகல், midday — noon.

நன்பனா, சணல், hemp — Crotolarea juncea.

நன்பன், see நன்பனா.

நன்பெருமாள் வித்து, இரசம், mercury.

நன்மஞ்சள், பூசுமஞ்சள், raw turmeric used for smearing the face.

நன்மரம், காய்க்குமரம், fruitful tree.

நன்முத்து, கெட்டிமுத்து, solid natural pearl. — Superior pearl.

நன்முருங்கை, நல்ல முருங்கை, drumstick.

நன்மை, ருது, puberty.

நன்றாச்சி, கௌரி பாஷாணம், a kind of prepared arsenic yellow oxide of arsenic.

நன்றாய்த் தாளித்தல், சுவைப் படுத்தல், seasoning highly; 2. நன்றாய் வேக வைத்தல், slaking as lime (slacked lime).

நன்று, வாழ்வு, welfare.

நன்றுசமைதல், பெண் ருது, girl's puberty.

நன்னருக்கல், சொற்பநோய், slight disease indisposition; 2. வயிற்றில் வலித்தல், stomach pain; 3. பிரசவ இடுப்புவலி, labour pain.

நன்னலம், அழகு, beauty.

நன்னல், மதகிரிவேம்பு, Indian Mahogany — Cedrela toona.

நன்னாரி, பாற்கொடி, வாசனைக் கொடி, இது கோடை காலத்தில் உபயோகிக்க உடம்பின் உஷ்ணத்தைப் போக்கிக் குளிர்ச்சியைத் தரும், இதற்குக் கிருட்டின வல்லி என்றும் பெயர். இது முறுக்கிக் கொண்டிருக்கும், கொடியின் அடிபாகம் வழ வழப்பாயும், இலைகள் இரு பக்கமும் வளைந்து முனையில் கூராகவும் காம்பு களுடையன வாகவும், பூக்கள் வெளிப்பக்கம், வெளிர்ப் பச்சையாகவும் உட்பக்கம் கருஞ் சிவப்பாகவுமிருக்கும், மழை காலத்தில் பூக்கும், சாதாரணமாய் இழிந்த நிலங்களில் விளையும், கடைகளில் இதன் நீளமான வேர்களை நன்றாய்த் திரட்டிக் கட்டி கட்டுகளாக விற்பார்கள், வேர்ப்பட்டை வெடித்துச் சுரசுரப் பாயிருக்கும், புதிதாகக் காயப்போட்ட வேர் வாசனை யுள்ளது. சிறிது இனிப்பாகவும், சுவைக்க விருவிருப்பாகவுமிருக்கும், இக்கொடி வடஇந்தியா, வங்காளம், திருவனந்தபுரம், (கோடிக்கரைக் காடு), இலங்கை இவ்விடங்களில் விசேஷமாய்க் கிடைக்கும்.

இதன் காய்ந்த வேர் உடம்புக்கு ஆரோக்கிய த்தையும், பல விருத்தியையும் உண்டாக்குவதுமன்றி, நீர் அதாவது மூத்திரத்தையும் வடிக்கும், அன்றியும் வியர் வையையும் உண்டாக்கும். இதை கஷாயமாக வைத்து அத்துடன் பசும்பாலையும் சேர்த்து, கல்லடைப்பு, நீர்ச் சுருக்கு முதலிய நோய் களுக்குக் கொடுக்கலாம். நமது நாட்டு வைத்தியங்கள் செரியாமை, குன்மம், பசி யின்மை, சுரம், சரும நோய்கள், விரணம், மேக நோயினாலேற்பட்ட கிரந்திப் புண், வாதப்பிடிப்பு, பெண் களுக்குக் காணும் வெள்ளை முதலிய நோய்களுக்கும் இதை உபயோகிப்பார்கள். மேலும் இது இரத்தத்தைச் சுத்தம் செய்து, பித்தத்தினா லுண்டான வாய்க் கசப்பையும் போக்குவதற்கு இக்கஷா யத்தைச் சீரகத்தோடு சேர்த்துக் கொடுப்பதுண்டு, இதன் வேர் கஷாயத்தோடு பால், சர்க்கரை

சேர்த்துக் குழந்தைகளுக்குக் காணும் இருமல், அசீரண பேதி முதலிய நோய்களுக்குக் கொடுக்கக் குணமாகும். வைத்திய பாகத்தில் இவ்வேர் அனேக மருந்துகளுடன் சேரும். வேர்க்கஷாயத்தோடு வால் மிளகு, குக்குலு, கொம்மட்டி வேர், இவை களைச் சேர்த்து ஆயுள்வேத வைத்தியர்கள் கிரந்தி, ஆனைக்கால், பாரிச வாயு, திமிர் வாயு முதலிய நோய்களுக்குக் கொடுப் பார்கள். யூனானி வைத்தியர் களும் இதனின்று ஷர்பத் தயாரித்து பல விருத்தி மருந்தாக உபயோகிப்பார்கள். 1. நாட்டு நன்னாரி, 2. சீமை நன்னாரி; 3. பெரு நன்னாரி, 4. சிறு நன்னாரி, country Sarsaparilla, fragrant root — Hermidesmus indicus alias Periploca indicus. It is also called black creeper. It is a turning creeper, stem glabrous leaves cuspidatus sometimes peduncled, flowers on the outside pale green and dark blood coloured on the inside, flowering in the rainy season common in waste ground.

The drug — dried roots is sold in bazaars in the form of small bundles, the bark in cracked and fissured longitudinally. The fresh dried root has a peculiar fragrant smell and is sweet but slightly acrid in taste. The plant is found in abundance in Northern India, Bengal, Travancore and Ceylon.

Dried root is an alterative, a divertic and a diaphoretic, decoction of this root mixed with cow's milk is given in cases of gravel and stranguary Vaidyans prescribe it for indigestion, dyspepsia, loss of appetite, fever skin diseases and ulcerations of syphilitic origin, chronic rheumatism and leucorrhoea. It is also used to purify the blood and correct the acrimony of the bile. Decoction or infusion of this root mixed with cumin seeds is also given with advantage in urinary complaints. Infusio of root bark mixed with mi and sugar is a good alterativ tonic especially for children i cases of chronic cough anc diarrhoea. The root is very

commonly used as one of the ingredients in medicinal preparations. A decoction of this root with that of colocynth mixed with long pepper twice daily has been held in esteem in chronic skin diseases, syphilis, elephantiasis, hemiplegia and loss of sensation. It is used by unani doctors in the form syrup as a tonic. There are two varieties.

1. நாட்டுநன்னாரி, country sarsaparilla.

2. சீமைநன்னாரி, jamica sarsaparilla.

நாட்டு நன்னாரியில் இரு வகையுண்டு. அவை,

1. பெருநன்னாரி அல்லது மாகாளிக் கிழங்கு.

2. சிறுநன்னாரி, country sarsaparilla is of two kinds large known as Magalli Kizhangu and small.

நன்னாரியுபயம், இரு நன்னாரி, அதாவது சிறு நன்னாரி, பெருநன்னாரி, the two kinds of Indian sarsaparilla viz. small leaved and large leaved — Hermidesmus indicus.

நன்னாறி, பன்னீர், rose water.

நன்னிக்கல், கலுவக்கல் செய்யவுதவும் கடினமானகல், hard stone used for making mortar which is used for grinding medicines.

நன்னி, பருத்தி, cotton; 2. சிறு. small.

நன்னிப்பயறு, துலுக்கப்பயறு, a variety of green gram — Phaseolus aconite folius.

நன்னிறம், வெண்மை, whitness, white colour.

நன்னீர், மென்னீர், soft water; 2. பனிநீர், dew water.

நன்னு, பெண், girl.

நன்னுதல், நல்ல நெற்றியை யுடைய பெண், a damsel with a beautiful fore head.

நன்னெரிஞ்சில், சிறுநெரிஞ்சில், small caltrops — Tribulous terrestris.

நா

நா, நாக்கு, tongue; 2. நடு, middle, centre.

நாககம், நாகசம்பங்கி, which see.

நாககர்ணம், செவ்வாமணக்கு, a red variety of castor seed plant.

நாககள்ளி, நாகதாளிக்கள்ளி, snake hood fig — Opuntiadillenii.

நாகக்கற்பம், சிவப்பு ஈயம், red lead — Lead tetroxide Pb_3O_4.

NOTE: Red lead is formed by heating lead monoxide of lead in air between 470° — 480°F. It is a scarlet powder used in the manufacture of flint glass and glazes for pottery, paints & matches.

நாககாலன், கருடன், brahmini kite.

நாககெந்தி, நேர்வாளம், croton oil plant — Croton tigilium; 2. வஞ்சிக் கொடி, a creeper — Calamus rotang.

நாககேசம், சிறுநாகப்பூ, serpent champak, iron wood of ceylon — Mesua ferrea, see நாகசம்பங்கி.

நாககேசரம், see நாககேசம்.

நாககேளி, பெருமருந்து, அல்லது ஈஸ்வர மூலி, Indian birth wort — Aristolochia indica.

நாகக்கசடு, நாகமலையை உருக்கும் போது தங்கும் கசடு, a soft bluish metal obtained in the smelting of zinc ores. It is found deposited in the zinc furnace — Cadmium.

நாகக்கட்டு, வாதமுறையில் கட்டிய நாகம், consolidated zinc by process of Alchemy.

நாகக்கல், சிலாநாகம், red zinc ore zno; 2. see கருடக்கல்.

நாகக்கள்ளி, see நாகதாளி.

நாகக்கறுப்பு,

நாகக்கிண்ணி, நாகத்தினாற் செய்த பாத்திரம், basin or broad vessel made of zinc.

நாகக்குந்தளமாக்கி, நாக பாஷாணம், zinc poison used in Tamil medicine and alchemy.

நாகக்குமரி, சொர்ணபேதி, a mineral dissolving gold, a mineral solvent.

நாகக்குவடு, செம்புமலை, mountain containing copper ore.

நாகக்கொல்லி, சர்க்கரை வேம்பு, a sweet variety of margosa tree — Azadirachta indica.

நாகங்கட்டி, கருங்காளான், black mushroom; 2. இம்பிலி வேர்ச்சாறு, juice of the root of common satin ebony — Maba buxi folia, capable of consolidating zinc.

நாகசம், சிந்தூரம், red oxide;2. ஈயம், lead; 3. வங்கம், white lead.

நாகசண்பகம், சொர்ணப்பட்டி, common yellow trumpet flower tree — Tecoma stans.

நாகசப்பூ, see நாகப்பூ.

நாகசகம், ஓர்விதலீலை, சர்ப்பத்தைப் போல் பிணையுதல், a kind coitus like that of snakes.

நாகசம்பங்கி, வெண்சம்பங்கி, இதன் வாசனையால் நாகம் வசித்தலால் இப்பெயர், white champak — Tecoma undulata Title from resort of serpents under this tree due to odour of its flowers; 2. சிறுநாகப்பூ, see நாககேசரம்.

நாகசம்பவம், செவ்வீயம், red lead, see நாக கற்பம்.

நாகசர்ப்பம், நாகப்பாம்பு, cobra snake.

நாகசாகம், பேரிலாழம்.

நாகசாபூ, see நாகசம்பங்கி.

நாகசிகு, சிவப்பு பாஷாணம், அதாவது மனோசிலை, red arsenic.

நாகசிங்கி, குளம் தடாகம் முதலிய நீர்நிலைகளில் முளைக்கும் ஓர் வகைப்பூடு, இதை பொழுதுக்கு முன் பிடுங்க தும்மலை யுண்டாக்கும், a rare plant, generally found grown in tanks, pools and other places where water is stagnant. It is known to cause sneezing-which is a peculiar characteristic of this plant when it is plucked before the dusk.

நாகசிங்கு, கலப்புகுவன்னி, இது நவலோகத்தையும் பாஷாணத் தையும் பேதிக்கு மூலிகை, an unknown drug probably of வன்னி (Mesquit) variety capable of acting on nine metals and arsenical poisons chemically. It is supposed to be useful in Alchemy; 2. பொடுதலை, creeping vervain — Lippia nodiflora alias verbena nodiflora.

நாகசிந்தூரம், see நாகசெந்தூரம்.

நாகசிலை, see நாகசிலைக்கல்.

நாகசிலைக்கல், சிலா நாகம், இது உபரச வகைகளிலொன்று. red zinc ore — zno; a kind of mineral stone containing zinc. It is one of the 120 kinds of natural substances contemplated in Tamil medicine.

நாகசீவனம், துத்தநாகம், common zinc of commerce.

நாகசுரம், see நாகேசுரம்.

நாகசுவந்தை, கிரிப்பூண்டு, which see.

நாகசெண்பகம், see நாகசண்பகம்.

நாகசெந்தூரி, நாகத்தை செந்தூ ரிக்கும் மூலிகை அதாவது மாகாளி, சுரபுன்னை, drug capable of turning zinc into red oxide by process of calcination viz big sarsaparilla and soora poon — Ochrocarpus longifolius.

நாகசெந்தூரிச்சி, மாஞ்சரோகினி, ஓர் காயசித்தி மூலிகை, an unknown rejuvenating zinc into red oxide, a plant much used in clearing dimness of eyes.

நாகசத்துமூலி, பிரமி, which see.

நாகச்சாரம், ஏமமணல், sand mixed with gold dust — Gold ore.

நாகச்சுண்ணம், முப்பு, a mystic salt prepared from zinc as one of the ingrediants.

நாகஞ்சம், விஷ்ணு காந்தி.

நாகஞ்செம்பாக்கி, செம்மரம், red wood capable of turning zinc into copper.

நாகஞ்சேர்வை, நாகஞ் சேர்ந்தது, an alloy of zinc or any compound of zinc.

நாகஞ்சேர்வை செந்தூரம், மற்றச் சரக்குகளுடன், நாகத்தைச் சேர்த்துப் புடமிட்ட செந்தூரம், a red oxide of zinc prepared with other drugs by process of calcination.

நாகணத்தி, காக்கட்டான், crow creeper — clitoria ternatea.

நாகணப்பேரி, கடலையாவரை, tanners cassia found grown in burial ground — Cassia auriculata.

நாகணம், நேர்வாளம், croton oil plant — Croton tigilium; 2. நகம் என்னும் ஓர் வாசனைச் சரக்கு, இதனால் மலடு, கண்ணோய் பெருவயிறு போம், a perfumed or aromatic drug which is useful in sterility, eye disease and ascites; 3. நாகணவாய்ப்புள், which see; 4. சங்கு, conch.

நாகணவாய், see நாகணவாய்ப்புள்.

நாகணவாய்ப்புள், மைனாக் குருவி, the mina bird — Mainate.

நாகணி, புன்கு, malabar poon — Calophyllum tomentosum.

நாகதண்டிகை, see நாகதந்தம்.

நாகதந்தம், யானைத் தந்தம் ivory; பாம்பின்பல், snake fang.

நாகதந்தி, ஓர் மரம், Heliotropeum indicum; 2. பேய்த்தும்மட்டி, bitter apple, Cucumis colocynthus; 3. முள்ளங்கி, garden radish.

நாகதந்தி, நேர்வாளம், croton, see நாகணம்.

நாகதமனம், தண்ணீர் விட்டான், common asparagus — Asparagus officinalis.

நாகதமனி, மாசிபத்திரி, Indian worm wood Artemesia vulgaris alias Centipeda vulgaris.

நாகதமனியம், பழுபாகல், prickly carolah — Momordica hispida; 2. காய்ப்பாகல், buffalo carolah — Momordica tuberosa; 3. தலைச்சூடுவள்ளி, Indian birth Wort - Aristolochia indica.

நாகதமாலம், புங்கமரம், Indian beech - Pongamia glabra.

நாகதவனம், விஷமூங்கில், poison bamboo — Crinum asiaticum.

நாகதாளி, ஓர் வகைத் தாளி, இதற்கு நாகத்தேமனி, ஈசேகு காரி என்றும் பெயர். இதன் இலைக் குங்குமப் பூவின் வாசனை, இலை வெற்றிலையைப் போலிருக்கும், இதன் சூரணத்தைப் பொடித்து வெருகடி ஒரு மண்டலம் தேனிற்கொள்ள நோய்கள் தீரும். நரைதிரை மாறும், இதை 3 மாதம் தின்ன பாதாளம் தெரியும். பாம்பு விஷங்களைப் போக்கும். 1. கருநாகதாளி; 2. செந்நாகதாளி; 3. அடுக்கு நாகதாளி; 4. மஞ்சள் நாகதாளி என நான்கு வகை, a kind of தாளி Ipomea plant. Its leaves smell like European saffron and the resemble betel leaves. Powdered dry leaves when taken in honey for 40 days cures all kinds of diseases, turn gray hairs black, remove wrinkles in the skin of the body. When taken for 3 month, burried sbstances will be visible. It is an antitode for snake poisoning.

NOTE: This is an unknown plant contemplated in Tamil Medicine. It is quite different from the one which is commonly called as நாகதாளி, prickly pear — cactus Opuntia nigricans given else where.

நாகதாளி, சதுரகிரி மலையிலுள்ள மூலிகை, இதன் இலை சிறிய வெற்றிலையைப் போலவும், மஞ்சள் நிறமுடையதாகவும் இருக்கும், இதற்கு நாகமணி இலை என்றும் ஈசுவர மூலிகை என்றும் பெயர். இந்த இலையை அரைத்துத் துணியிற் பொட்டளங் கட்டி முடிந்து வைத்துக்கொண்டு, ஒரு சட்டியில் சூதமும் அதன் அளவு நல்லெண்ணெயும் விட்டு ஒரு சாதிவிறகு கொண்டு தீயெரித்து எண்ணெய் காய்ந்தவுடன் அந்த நாகதாளி இலைப் பொட்டணத்தை எடுத்துச் சாறு பிழிந்தால் சூதம் கட்டிப் போகும், அதை செந்தூர மாக்கி ஆவின் நெய்யில் ஒருவாரம் சாப்பிட்டுவர தேக சித்தியாகும்.

நாகதாளி, சப்பாத்திச்செடி, இதற்கு சப்பாத்திக் கள்ளி,

சப்பாத்து முள், மஞ்சள் நாகதாளி, நாகக்கள்ளி, பலகைக் கள்ளி எனப்பல பெயர்களுண்டு. இது சாதாரணமாய் இந்தியாவில் எங்கும் கிடைக்கக் கூடிய தாயிருந்தாலும், அமெரிக்கா விலிருந்து கொண்டு வந்து பயிராக்கப்பட்டது என்றும் சொல்வதுண்டு. இதன் பூ பெரியது, மஞ்சள் நிறம், 2 அங்குல குறுக்களவு, அடித்தண்டு சப்பை, சதைப்பற்றுள்ளது. நாளாகக் கெட்டியாயும் கிளைகள் பிரிந்தும், பாத்திரம் போல் உருண்டையாயும் இருக்கும். இதன் பழம் மஞ்சள், பச்சை அல்லது சிவப்பாயிருக்கும், பட்சிகள் இப்பழங்களைத் தின்னும். இது மைதானங் களில் முளைத்துச் சீக்கிரம் பரவும், முள்ளுகள் அடர்ந் திருக்கும். இதை அழித்தாலும் சீக்கிரத்தில் துளிர்த்து வளரும், இதைக் கொளுத்திச் சாம்பல் எடுப்பதுண்டு. இதினின்று உப்பு தயாரிக்கப்படும், இதன் பழம் கக்குவான், இரைப் பிருமல் முதலிய நோய்களுக் குதவும், இதனுள் ஓர் மிருதுவான சதைப்பற்றைச் சாப்பிட உடம்புக்கு ஆரோக்கி யத்தையும் குளிர்ச்சியையும் தரும். slipper milk hedge — Opuntia spinoussimy. It is known by different names as shoe milk hedge, oblong Indian fig snake hood fig, plate leaf milk hedge etc. Although it is found grown and easily procurable almost every where in India it is said to be plant of S.America naturalised here. It bears large bright, yellow flowers two inches in diameter, stems when young fleshy and nearly flat but in age become hard, cylinderical and branched. Fruits are green, yellow or red, birds live on them. It is found grown in waste arid soils and plains and is covered with prickly thorns. Its growth is rapid and as such is very difficult to erradicate Potash may be prepared from the ashes of the burnt plant. The fruit it esteemed as a remedy for whooping cough and asthma. A jelly like pulp found in it is cool and refreshing.

நாகதாளி, அதோ அல்லது அர்வதா இதற்கு வட மொழியில் சோமலதை எனப்பெயர். இது பாம்புக் கடிக்கு உபயோகப்படும். ஆகவே பாம்பாட்டிகள் இவ்வேரைக் காட்ட பாம்பு தலையை வாங்கிக்கொள்ளும், எடுக்க மறுபடி தலையை நீட்டும், snake poison plant — Cucumis anguinus. In Sanskrit it is known as moon creeper. It is a medicinal plant used as antidotes by snake charmers. The root is said to have a peculiar effect on snakes which draw their heads and retire when the root is shown to them and resume in its absence.

நாகதாளி, பேய்ப்பீர்க்கு, bitter luffa or wild luffa — Luffa acutangula.

நாகதாளிக்கள்ளி, இது மலையில் விளையும் ஓர் இனம், விஷதாளிக் கள்ளி, இச்செடி ஆசாம் தேசத்திலும், கொரநாடு, மலையாளம், நேபாளம் இவ்விடங்களிலும் விசேஷம், இலைகள் விஷ கடிக்கு நல்லது, இவ்விலை யைக் கசக்கி உடம்பு முழுமையும் தடவ நல்ல பாம்பு விஷம் தீரும். கொழுந்து காரமுடையது. வியர்வையை யுண்டாக்கும், மேக நோய்க்கும் கொடுக் கலாம். இதிலிருந்து வரும் பாலை 10 துளியளவு சர்க்கரையிற் கலந்து கொடுக்க பேதியாகும், முட்களை கழித்துவிட்டு, கட்டிகளுக்கு வைத்துக் கட்ட அழுந்து விடும். பழம் குளிர்ச்சியைத் தரும், பழச்சாற்றில் சர்க்கரை கூட்டி சர்பத்தாக கரண்டி யளவு சாப்பிட்டுவர சங்கம விஷம், தாவர விஷம், மகாவாத ரோகம், இருமல் முதலிய நோய்கள் போம், many spined prickly pear — Opuntia dillennic alias O.nigricaus. This is another variety found grown in hills and as such is very common in Assam, Coromandel coast. Malabar, Nepal and other places. Leaves are used as an antidote to snake bites and other poisons, tender leaf little acrid and diaphoretic. It is prescribed

for venereal complaints, 10 drops of the milky juice of this plant mixed with sugar is a good purgative. The leaf when got rid of prickles may be applied locally to suppress boils and abscesses. Fruit juice mixed with sugar is a refreshing sharbat and cures cough etc. It is an antitode to vegetable and animal poisons and cures rheumatism.

நாகதுமம், *சீமையாதளை*, common quince — Cydonia vulgaris.

நாகதெந்தி, *நேர்வாளம்*, croton seed plant— Croton tigilium.

நாகதெய்வம், *இந்துப்பு*, rock salt.

நாகதேமணி, *மணித்தக்காளி*, black berried solanum — Solanum nigrum.

நாகதேவதாளி, *நாகதாளி + தேவதாளி, ஆக இரண்டு மூலிகைகள், இது இரசத்தைக் கட்டும், துரிசை வெளுப்பாக்கும்*, Snake hood fig — Opuntia nigricans + snake luffa — Luffa echanata. They are used for Consolidating mercury and turning copper acetate to white colour and as such they are useful in Alchemy.

நாகதேனி, *பெருமருந்து*, see *ஈசுரமூலி*.

நாகதோரணி, *சிவப்புஎலிச் செவிக் கீரை*, a red variety of rat's ear plant —Ipomea rheniformis.

நாகத்தி, *மையிலை*, small elliptia, leaved wild tea — Goldonia obtusa.

நாகத்தினுயிர்பெந்தத்தி, *வெள்ளைக் கிலுகிலுப்பை*, white flowered rattle wort — Crotolaria pulchenima.

நாகத்தின்சத்துரு, *சிறுபூனைக் காலி*, passion flower — Passiflora leschenaultic alias P. foetida.

நாகத்தின் பாம்பு, *பூநாகம்*, small snake found in flowers. It is smallest kind of cobra extremely venomous.

நாகத்துரு, *நாகமரத்தின்வேர்*, root of Jammoon tree.

நாகத்துக்குருவாணி, *பழுபாகல்*, see *நாகதமனிபம்*.

நாகத்தேமணி, *நாகதாளி*, which see.

நாகத்தைச் சூரணமாக்கி, *வெற்றிலை*, betal leaf capable of reducing zinc into powder.

நாகத்தைச் செந்தூரம்பண்ணி, *அழுகண்ணி*, see *நலகண்ணி*.

நாகத்தைச் செந்தூரியாக்கி, *கருமத்தை*,black dhatura; 2. *கசப்புப்பசளை*, bitter portulaca or spinach.

நாகத்தைச் சொர்ணமாக்கி, *அஸ்திபேதி*, a solvent capable of converting zinc into gold.

நாகத்தை நாசமாக்கி, *முருங்கை*, moringa.

நாகத்தைப்பற்பமாக்கி, *மான் செவிக்கள்ளி*, spiral leafy milk hedge — Euphorbia nivulia capable of calining zinc into a white powder.

நாகத்தைப்பேதமாக்கி, *செப்பு சதுரக்கள்ளி* a red variety of milk spurge capable of transmuting zinc into gold.

நாகத்தொட்டி, *நாகம் சேர்ந்த ஓர்வகைத் தொட்டி பாஷா ணம்*, a kind of prepared arsenic compound.

நாகநந்தி, *ஓர்மரம்*,a tree.

நாகந்தி, *நேர்வாளம், நாகணம்*, which see.

நாகநாகிக்கிழங்கு, *ஓர்வகைகிழங்கு*, a kind of tuberous root.

நாகந்தகன், *கருடன்*, brahmini kite.

நாகபடம், *முள்ளில்லாக் கற்றாழை, இது ஓர் கற்பமூலிகை*, thorn less aloe. It is a rejuvenating drug.

நாகபடலம், *கடைக்கண்ணில் சதைபடரும் ஓர் கண்ணோய்*, an eye disease in which a film is formed over the pupil of the eye, see *நாகப்படலம்*.

நாகப்படிக்கற்றாழை, see *நாகபடம்*.

நாகபந்தனி, *நாகத்தைக்கட்டும் மூலிகைகள், அதாவது:*.

1. ஆடுதின்னாப்பாளை, worm killer — Aristolochia bracteata.

2. பொன்னாவாரை,fetid cassia — Cassia sophera.

3. பாலிருள், a white species of iron wood — Mesua.

நாகபந்து, அரசமரம், peepul tree — Ficus religiosa.

நாகபரணி, சப்பாத்திச்செடி, prickly pear — Opuntia nigricans.

நாகபலம், ஒருபூடு, Sida spinosa alias S.alba.

நாகபலா, நாகமல்லி, yellow jasmine, tree jasmine — Jasminum arborescens; 2. காரை, இது பலவிருத்தி மூலிகை, elephant tonic — Canthium parviflora.

நாகபலி, சுக்கு, dried ginger — zingiber officinale.

நாகபலிகை, திரண்டபெண், a woman who has recently matured.

நாகபலை, நாகமல்லி, which see.

நாகபற்பம், நாகத்தைப் புடமிட்ட பஸ்பம், இது வாந்திபேதி, காக்கை வலிப்புக்கும் உபயோகப் படும், calcined oxide of zinc. It is used for cholera and epilepsy.

நாகபற்பம், நாகத்தை இலுப்பை நெய்யில் 20 தரம் உருக்கிச் சாய்த்து பிறகு சுத்தியான வுடன், நாகத்தை உருக்கிக் கண்விட்டாடு கையில் இலைக்கள்ளியை அதிலிட்டு இரும்புக் கரண்டியால் துழாவிக் கொண்டேயிருக்க அது புகைந்து சாம்பலாய்ப் போகும், இதை நெருப்பில் வறுத்துக் கொண்டேயிருக்கப் பொருமி நீறிப்போகும், இதையெடுத்து மெல்லிய துணியினால் வடிகட்டி அடியில் நிற்பதை எடுத்துக் கொள்ளவும், இதுவே பற்ப மாகும். இதை வைத்தியர்கள் இரத்தப் பிரமியம், வெள்ளை, வெட்டை முதலிய நோய் களுக்கு உபயோகிப்பார்கள். தமிழ் வைத்தியத்தில் அனேக வகையாக சித்தர்கள் முறையாகத் தயாரிப்பதுண்டு, வியாதிக்குத் தக்கபடி அனுபானத்தில் கொடுப்ப துண்டு, calcined (white)

powder of zinc — Lana philosophica. The preparations of Native Doctors are as follows: Zinc is taken in sufficient quantity and is cleaned first by melting and pouring it in Mahua oil and this process is repeated twenty times when the zinc is considered to be purified. The zinc so obtained is then melted in an earthern pot when green leaves of leafy milky hedge (Euphorbia nercifolia) are thrown into the melted mass, which is constantly stirred with an iron spoon. It then inflames in the usual manner with a yellow smoke leaving only ashes which are continued to be kept till they acquire a fine white colour. The finest parts are separated from the rest by sifting through a piece of fine muslin and preserved for use Vaidyans employ this powder for gonorrhoea gleet etc.

There are several ways by which this powder is prepared by Vaidyans as per processes adopted by several Siddhars and is prescribed for several diseases, through several mediums or vehicles.

NOTE:- Calcined powders are prepared from zinc with other substances instead of the leaves of leafy milky hedge. They are 1. leaves of Abutillon and stirring it with the root of Abutillon. 2. Eclipse plant; 3. Plant — Tephrosia purpurea and used for bleeding piles, chronic diarrhoea, dysentry etc. It is also prepared along with mercury sulphur etc, by alchemical process, contemplated. In Siddha medicine and used for transmutation to obtain gold. The method is no doubt secret, complicated and incomprehensible to a lay man attempting at this art and this cannot be arrived at successfully without the aid of a spiritual Guru — teacher.

நாகப்பச்சை, ஆற்றுப்பச்சை ஓர் பச்சைக்கல் இது உபர சங்களில் ஒன்று, an inferior green stone contemplated as one of the 120 kinds of natural substances mentioned in Tamil medicine.

நாகபாஷாணம்,சூதம், இலிங்கம், கருவங்கம், பச்சை,

பொன்னரிதாரம், காரம் இவைகளை பொடித்துக் குகையில் வைத்து மேல்மூடிச் சீலைமண் செய்து கஜப் புடத்தில் போட்டு முதிர அனல் மூட்டிப் பிறகு ஆறிய பின் உடைத்துப் பார்க்க மருந்து உருகி ஈயம் போல் வலிந்து இறுகிக் கட்டியா யிருக்கும், இதுவே நாக பாஷாணம், உலோகத்தில் பழுத்திடும், a kind of prepared arsenic an alchemical compound of zinc. It is prepared as follows. Mercury, vermilion, blacklead, vitriol yellow orpiment, borax, are all powdered and the mixture is then secured in a crucible which is covered and luted air tight and placed in a conflagration. It is then taken out and cooled and when the crucible is broken the product left will be found to be a melted rigid mass resembling tin. 2. நாகம் சேர்ந்த பாஷாணம், zinc poison.

நாகபாணி, தில்லைமரம், tigers milk spurge — Excoecaria crenulata.

நாகபாலி, சிறுகிழங்கு, small yam — Goa potato — Dioscorea aculeata.

நாகபித்து, நாகபாம்பின் பித்தம், bile of cobra. see பேரிலாழும்.

நாகபுட்பம், சண்பகம், chambak — Rottleria tinctoria; 2. சிறுநாகப்பூ, iron wood of Ceylon Mesua ferrea.

நாகபேதி, இந்திர கோபப்பூச்சி, lady's fly — Mutella occidentalis. It is so called from its probability of acting upon zinc alchemically.

நாகப்பகை, நாகப்பாம்பிற்குச் சத்துருவான கருடன், brahminikite so called from its being inimical to cobra.

நாகப்படக்கற்றாழை, சப்பாத்திச் செடி, இது சதுர கிரிமலையில் விளைவதாகச் சொல்லப்படும் ஓர் மூலிகை. இது பாம்பு படம் எடுப்பது போலும் வரிவரியாய் நீர்வடிந்து கொண்டும் இருக்கும். இந்தக் கற்றாழையைச் சமூலமும் பிடுங்கி வந்து பால்விட்டு அரைத்து பாலோடு சேர்த்துக் கலக்கிச் சாப்பிட ஒரு முகூர்த்த நேரம் மூர்ச்சை யாகும், அப்போது அடிக்கடி ஒரு கரண்டி விதம் பால் கொடுத்து வர மூர்ச்சை தெளியும். காயசித்தியாகும். pink coloured prickly pear — Opuntia nigricans. It is so called from the resemblance of its leaf to snake hood. It is said to grow in Sathuragiri hills. The whole plant ground with cow's milk add taken with the milk causes unconciousness and fainting for about one and half hours. During this period the person must be fed with teaspoonful of milk every now and then. After some time conciousness will be regained, ane the body will be rejuvenated.

நாகப்படலம், இருகண்களிலும் சிவந்து, அழுத்தமான தடித்த சதை வளர்ந்து வெள்விழி முழுதும் கடந்து கருவிழி யிலும் படர்ந்து நடுவிலி ருக்கும் பாவையையும் நாளா வட்டத்தில் மறைந்து கண்ணீர் வடிந்து அரிப்புண்டாக்கும் ஓர் வகைக் கண்ணோய் an eye disease characterised by inflammation of both eyes choroid coating or film spreading over the pupil and thus affecting the eye sight by covering the cornea. It is marked by discharge of water from the eyes followed by itching.

நாகப்பழக்காடி, நாகப்பழத்திற்குத் தண்ணீர் சேர்க்காமலே பிசைந்து பிழிந்தெடுத்த சுயரசத்தைப் புளிக்க வைத்தகாடி, a fermented essence obtained by pressing and squeezing out the juice of jaumoon fruit without adding water to it.

நாகப்பழம், நாவல்பழம், jaumoon fruit fruit of Eugenia jambolina.

நாகப்பழம், நாவல் மரத்தின் பழம், the fruit of jamboo tree.

நாகப்பற்று, துத்தநாகப்பிடிப்பு, a disease due to exposure to zinc fumes.

நாகப்பாம்பு, see நல்ல பாம்பு and also நாகம்; 2. வயிற்றுப்பூச்சி, round worm a parasite in the intestines — Ascaris.

நாகப்பாம்பு விஷம், நாகங்கடித்த விஷம், poison from snake bite — Cobra venom.

நாகப்பாலை, கொடிப்பாலை, cotton milk plant — Dregea volubilis (typica).

நாகப்பத்திரி, பெருவாகை, parrot tree — Albizzia lebbek.

நாகப்பிரண்டை, படப்பிரண்டை, a kind of adament creeper — vitex species.

நாகப்பிராசிகம், சீமைப்பிச்சி, chinese jasmine — Trachelospermum jasminoides.

நாகப்புல்லுருவி, நாகமரத்தில் வளரும் புல்லுருவி,a parasite growing on jamboo tree.

நாகப்புல்வரி, நாகப்புல்லுருவி, which see.

நாகப்பூ, நாவல்மரத்தின் பூ, flower of jamboo tree; 2. சிறுநாகப்பூ: Ceylon iron wood — Mesua ferrea; 3. ஓர் சிவப்புப் பூ scarlet flower plant — Pentapetes phoenicea; 4. பெருநாகப்பூ, இதுவே, தக்கோலம், a species of iron wood — Calyprtranthes jambolana.

நாகப்பூ, ஓர் மருந்து, a kind of prepared medicine; 2. பூப்போன்ற துத்தநாகம், flower of zinc.

நாகப்பூச்சி, நாக்குளிப் பூச்சி, an intestinal round worm — Ascaris; 2. பூநாகம், an earth worm.

நாகமணல், துத்தநாகம் சேர்ந்த மணல், இது உபரச வகைகளில் ஒன்று, zincore. It forms one of the 120 kinds of natural substances according to Tamil Medicine.

நாகமணி, நாகரத்தினம், gem (ruby) supposed to be on the head of a species of cobra — Carbuncle.

நாகமண், செம்மண், red earth, red ochre.

நாகமதி, துளசி, holy basil — Ocimum sanctum.

நாகமதுசெம்பாக்கி, செவ்வலரி, oleander rosebay — Nerium odorum (roseum).

நாகமதுநித்தாந்யனம், உத்தி ராட்சம், which see.

நாகமம், சுக்கு, dried ginger — zingibar officinale.

நாகமரம், see நாவல்மரம்; 2. வெள்ளை நாகமரம் அல்லது வெக்காலி, chirimaun — Anogassus latifolia.

நாகமலை, துத்தநாக மெடுக்கும் மலை, mountain containing zinc ore.

நாகமல்லி, அனிச்சைச் செடி, இதற்கு ஊரகமல்லி, விஷ மல்லிகை என்றும் பெயர், 4-5 அடி உயரம், பூவின் காம்பு குட்டை, பூ சிறியது, வெண்மை, இது திருவாங்கூர், மாவலிபுரம் முதலிய விடங்களில் அதிகம், இதற்கு நாகமுட்டி யென்றும் பெயர். இதன் பச்சை வேரையும் இலையையும் இடித்து எலுமிச்சம் பழச்சாற்றில் குழைத்துத் தடவ, வண்டுகடி, படை, சொறி சிரங்கு முதலிய சரும நோய்களைப் போக்கும், இதைப் பாலிற் போட்டுக் காய்ச்சி உட்கொள்ளகாமத்தை அதிகரிக்கும். இவ்வேர் பாம்பு கடிக்கு உதவும். இது உஷ்ணத்தைத் தரக்கூடியதால் பழைய நோய்களைப் படிப்படியாய்ப் போக்கும் குணமுடைய தாகும். இலையைக் கசக்க வெகுட்டலா யிருக்கும். இதன் இலையையாவது வேரையாவது மென்று தின்னப் பாம்பு விஷம் நீங்கும், ring worm root, white flowered justicia — Rhina canthus communis alias Justicia nasuta. It is a shrub of 4-5 ft. short petioled flowers small and white. It is found grown in Travancore and Mahablishwar. The fresh root and leaves bruised and mixed with lime fruit juice are reckoned as a useful remedy in ring-worm, itch, scabbies, and other cutaneous affections. Milk boiled with this root is considered as an aphrodisiac. The root mixed with lime fruit juice and pepper or boiled in milk is an useful remedy in snake bites. As it lends heat to the body, it is a useful alternative. Leaves when bruished give a disagreeable

odour. The leaves or root when chewed and taken in is considered as an antidote to snake poison.

நாகமல்லி, பெருமல்லி அல்லது காட்டுமல்லிகை, jungle jasmine — Jasminum latifolium.

நாகமல்லிகை, see நாகமல்லி.

நாகமல்லிகை, Downy jasmine — Jasminum arborescens.

நாகமாணிக்கம், நாகத்தின் தலை மேலிருக்கும் ஓர் உயர்ந்த இரத்தினம்.see நாகமணி.

நாகமாதா, துளசி, holy basil — Ocimum sanctum.

நாகமாதிகம், see நாகமாதா.

நாகமாரணி, இதிர்க்கிழங்கு, wild elephant yam — Dracontium polyphyllum.

நாகமுட்டி, விஷமுட்டி, முறுக்கிக் கொண்டிருக்கும் ஓர் கொடி, இலைகள் அண்டவடிவு, கூர்மையான முனை, இலைக் காம்பு இலையின் பாதி நீளம், சிறிய பூக்கள், வாசனை யாயும், வெண்மையாயும், சாதாரணமாக வேலிகளில் முளைக்கும்; இரண்டு கற்களைக் கொண்டு, நசுக்கித் தண்ணீரில் குழைத்துக் கொடுக்க சகல பாம்பு விஷம் நீங்கும், யானைக்காலுக்கும் இது உபயோகமாகும், இலைக் கஷாயம் இரணப் புண்களுக்கு உதவும். creeper mushty, frog creeper — Tiliacora recemosa alias Coccuslus acuminatus. It is a twining shrub, leaves ovate, acuminated, pedicles usually about half the length of the leaf, one flowered, flowers small cream coloured and fragrant. It is used as an antidode to snake bites being rubbed between two stones and given internally mixed with water and is also applied to elephantiasis (cohinleg), decoction of leaves is applied externally in ulcers.

நாகமுட்டி, எட்டிமரம், nuxvomica tree — Strychnos colubrina; 2. நாகமல்லிகை, which see.

நாகமுத்தக்காசு, நீண்டகோரை, இதற்கு வடமொழியில் பத்திர முஸ்தை என்றும் பெயர், straight sedge — Cyperus pertinuis.

நாகமுல்லை, ஊரகமல்லி see நாகமல்லி.

நாகமுழணிவேர், நாகதாளிவேர், இதைப் பாம்பு விஷத்திற்கு கொடுப்பதுண்டு, root of நாகதாளி, which see. It is an antidote to snake poison.

நாகமுள்ளு, சப்பாத்திச்செடி, prickly pear cactus indus alias Opuntia nigricans.

நாகமூக்கத்தி, see நாக மூக்கொற்றி.

நாகமூக்கொற்றி, விஷமூக் கொற்றி, ஓர் மருந்துச் செடி, இலை பெரிது, மிருதுவானது, இலைக்காம்பு நீளம், 1-5 பூக்கள் பூக்கும், பூக்கள் மிகப் பெரிது, சுத்த வெண்மை சூரியன் மறைந்த பிறகு பூக்கும். காலையில் சுருக்க மடையும், மழைக் காலத்தில் பூக்கும். இதன் வேர் நெய்ச் சத்துள்ளதாயும், உப்புச்சரக்கு வாய்ந்ததாயுமிருக்கும். வேர்ப் பட்டை பேதியாகும் தன்மை யது, முதிராத விதைகளைத் தின்னலாம். இதில் சீமைநாக மூக்கொற்றி என்று ஓர் இனம் உண்டு. இக்கொடியின் பூ வெண்மையா யிருக்கும். இதன் இலைக்கும் வேருக்கும் பாம்புகடி விஷத்தைக் குணப் படுத்தும் தன்மையுண் டென்று கருதப்படும். இதன் விதைகளையும் தின்னலாம். Indian moon flower, Moon creeper — Ipomaea glaberrima alias. I.bona nox alias convolulus muricatus. It is a herb leaves large, very smooth and pointed, peduncles very long, 1 — 5 flowered, flowers very large, pure white, opening at sun set, fading next morning, flowering ih rainy season. The root contains a sort of resin, fatty matter, volatile oil, albumen starch, malic acid and various salts. Bark of root is used as a purgative, seeds eaten when young.

The well kown foreign variety is American moon flower — Ipomaea bonanax having the same characteristics as above, leaves and roots are supposed to have virtues in snake bites, seeds are eaten when young.

நாகமுசிகை, குங்குமமரம், saffron tree monkey turmeric — Bixa orellana; 2. கபிலப் பொடி, Kamela dye.

நாகமோதோவாக்கி, காட்டுக்கொள், wild gram —Rynchosia genus.

நாகம், நல்லபாம்பு, cobra; 2. துத்தநாகம் zinc; 3. பூண்டின் முதற்பெயர் (உ-ம்) நாகமல்லி, நாகதாளி, நாகமுள்ளு, நாகவல்லி முதலியவை, plants first term as naga malli etc; 4. ருசாதியைக் காட்டும் மொழி, term joining two genera as மலைநாகம், பூநாகம்; 5. அம்மணம், நிர்வாணம், nakedness; 6. நாவல்மரம், which see; 7. ஓர்வகை அப்பிரகம், one of (நாகம், பேகம், பினாகம், வச்சிரம்) the four kinds of mica 8. வெற்றிலை, betel leaf; 9. சிறுநாவல்,small jaumoon; 10. see நாகசம்பங்கி, 11. காரீயம், black lead; 12. காயம்,sky; 13. ஒலி, sound; 14. கருங்குரங்கு, black monkey; 15. குரங்கு, monkey; 16. ஞாழல், fragrant herb; 17. புன்னாகம், (புன்னை மரம்) Alexandrian laurel; 18. மலை, mountain; 19. நாக பாஷாணம், which see. 20. நாகப்பச்சை, which see; 21. ஓர் பஞ்சலோகம், an alloy of five metals, see பஞ்ச லோகம்; 22. கஞ்சாங் கோரை.white basil, — Ocimum album; 23. விலாமிச்சவேர் a fragrant root — Andropogon muricatus; 24. கண்டத் திப்பிலி, root of long pepper — Piper longum root of (in Philosophy) deep sleep trance; 25. துத்தநாக வகை, அதாவது சிறுகண்ணாகம், பெருகண் ணாகம், உக்காநாகம், term referring to different kinds of zinc as mentioned above; 26. கந்தகம், sulphur; 27. சுரபுன்னை, which see.

நாகப்பாம்பு, 5 விதம், 1. கருநாகம், 2. பரநாகம், 3. கல்நெஞ்ச நாகம், 4. ஊமை நாகம், 5. கண்ணெரியனாகம், In Indian Mythology there are snake Gods and these have human heads and bodies of serpent. They are supposed to in habit the நாகலோகம்) under world.

நாகப்பூ, ஓர் மருந்து, a kind of prepared medicine; 2. பூப்போன்ற துத்தநாகம், flower of zinc.

நாகம்போல் படமுக்கி, அழு கண்ணி, which see also see நற்கள்ளி.

நாகரகம், see நாகரங்கம்.

நாகரங்கம், கமலா, கிச்சிலி, sweet orange — Citrus a urantum; 2. நாரத்தை, bitter orange; 3. தேன்றோடை, கிச்சிலி a kind of sweet orange.

நாகரங்கம், தேன்றோடை, a kind of sweet orange.

நாகரசகந்தகம், see நாகரசச் செந்தூரம்.

நாகரசச்செந்தூரம், நாகம், இரசம் இவ்விரண்டையும் முதன்மை யாகக் கொண்டு, கந்தகம் முதலிய மற்ற சரக்குகளையும் சேர்த்துச் செய்யும் ஓர் புடமிட்ட செந்தூரம், இது வாத முறைக்கும், காய கற்பத்துக்கும் உதவும், an alchemical preparation consisting of zinc, mercury as chief ingredients mixed with sulphur and other drugs by process of calcination.

நாகரசவிந்து,

நாகரசவூஞ்சல், நாகரசத்தை அண்டத்தில் வார்த்துப்பிறகு, புடத்துக்குமேல் ஊஞ்சலிட்டு எரித்தெடுத்த மருந்து, an alchemical preparation consisting of zinc and mercury which are secured in a fowl's egg and then placed in a vessel suspended over the fire and burnt till the required medicine is obtained.

நாகரஜஸ், சமீபத்தில் ருதுவான பெண், a girl recently menstruated or attained maturity.

நாகரத்தம், கபிலப்பொடி, karmela dye —Mallotus philippinensis.

நாகரமத்தகம்,.

நாகரம், சுக்கு, dried ginger — Zingiber officinale; 2. நாகர வண்டு, which see; 3. அறுபத்து நான்கு லீலைகளி லொன்று, one of the 64 kinds of coitus or sexual embrace; 4. ஓர் விதக்கிச்சிலி, a kind

of sweet orange; *5.* ஆத்ம ஞானம் அடையும் விருப்பம், a desire for final beatitude; *6.* கோரை, straight sedge — Cyperus pertinuis; 7. இளைப்பு, emaciation; *8.* தேன் றோடை, a kind of sweet orange.

நாகரம், ஓர் காமலீலை, இதில் மல்லாந்து படுத்துக் கொண்டி ருக்கும் பெண் இரு துடை களாலும் புருஷன் துடைகளை நெருக்கிப் பிடிப்பது, இவ்வித மாகவே புருஷனும் மாறித் தன் துடைகளால் பெண்ணின் துடைகளை புணர்ச்சியில் நெருக்கிப் பிடிக்கும் ஓர் நிலைமை, a posture consisting of two attitudes in which one of the couple lying on the back grapples with the thighs, the thighs of the other in the course of coitus It is known as urban attitude intended for equal fit unions.

நாகரவண்டு, பெண்வண்டு இது ஓர் உபரசச்சரக்கு, gold coloured beetle — Cantharides. One of the natural substances according to Tamil Medicine; 2. ஓர் வகை நத்தை, a kind of snail; *3.* சிறு குழந்தை, baby.

நாகரவண்டுத்தூள், பாம்புப் புத்துகளில் சிதைந்து கிடக்கும் வண்டுகளின் உடம்பிலுள்ள தோல், the wings of insects usually found on the ant hills.

நாகரவிந்தாதி லேகியம், உண்ட வுணவு கிரமம்படி சீரணித்து உடம்பிலுள்ள அவயவங் களுக்குப் பூரண சக்தியை உண்டாக்கும் ஓர் லேகியம். இதனால் இந்திரியம் கெட்டிப் படும். an electuary which causes good appetite and digestion, and gives energy and strength to the body and binds the semen.

நாகராதி, சுக்கு நாகரம், which see.

நாகராதித் தைலம், சுக்குத் தைலம், அதாவது சுக்குடன் மற்றக் கடைச் சரக்குகளும் சேர்த்துக் காய்ச்சிய தைலம், oil prepared with dry ginger as chief ingredient.

நாகரி, குருக்கத்தி, Hiptage madablota; *2.*தவசி முருங்கை, see நாகரிசம்.

நாகரிசம், தவசி முருங்கை, Tranquebar gendarussu — Justicia tranquebarensis.

நாகரிபு, கருடன், brahmini kite.

நாகரீகெசெம்பு, தண்டு, ஆண்குறி, penis — Membrum virile.

நாகருகம், தேன்றோடை, a kind of sweet orange.

நாகருடப்பூடு, சிரிப்பூண்டு, mungoose plant — Ophiorrhiza mungoos.

நாகரேணு, செவ்வியம், root of black pepper plant *2.* மிளகு, black pepper — Pipper *nigrum.*

நாகரேணுவம், See நாகரேணு.

நாகரை, கறிப்புடோல், அதாவது புடலங்காய் snake gourd — Trichosanthus anquina *2.* நாகரவண்டு,which see.

நாகரொட்டிபெலும்பு, மார் பெலும்பு, chest-bone — Starnum.

நாகலதை, ஆண்குறி, male genital — Penis.

நாகலிங்கம், ஆவுடையார் மரம், இது ஓர் உயர்ந்த மரம், சிவப்பு வாசனையுள்ள பூ. இப்பூவின் மத்தியில் இலிங்கத்தைப் போன்ற முளையும், நாகப் படத்தைப் போல் இதழுமுள்ளது. இது ஆவுடையாரைப் போலிருப் பதாலிப்பெயர். இது சூரியன் சாயுங்காலத்து இலிங்கத்தைச் சுற்றியுள்ள பாகம் நாகப் படத்தை ஒத்த மேலிதழோடு பிரிந்து விழுந்துவிடும், canon ball tree — Couroupita ginanensis. It is a tall big tree, flowers dark red and fragrant. In the centre of this flower will be found a protruberance just like the shape of 'Avudaiyar'- the phallic emblem of Siva representing the male and the female organ. After sun set this portion will be found separated from the rest of the flower portion and dropped on the ground.

நாகல், நாவல் which see.

நாகவங்கம், நாகவங்கமணல், an ore consisting of lead and zinc or more correctly zinc blende

and galena; 2. வங்கமணல், sand mixed with lead graphite.

நாகவம், திருகுகள்ளி, tursted spurge — Euphorbia tortilis; 2. பாம்பு கரணம், onion of two snakes.

நாகவல்லரி, வெற்றிலை, betel leaf.

நாகவல்லி, வெற்றிலைக் கொடி, betel vine; 2. நாகவல்லியிலை, betel leaf; 3. ஓரிதழ்த் தாமரை, one petal lotus; 4. பாம்புக் கொடி, snake creeper — Bacchinia anguina; 5. கீரி புரண்டான், mungoose plant — Ophiorrhizo mungose.

நாகவல்லித்தழை, நாகவல்லிச் செடியின் இலைகள், leaves of நாகவல்லி which see.

நாகவள்ளி, ஓர்வகை வள்ளிக் கிழங்கு, a kind of sweet potato.

நாகவள்ளித்தளம், வெற்றிலை, betel leaf.

நாகவாடை, துத்தநாகப் பிடிப்பு, a disease due to exposure to zinc fumes; 2. செம்பூறல், verdigris.

நாகவாதி, நாகத்தைக் கட்டியாடும் வாதி, an alchemist handling consolidated zinc; 2. பாம்பு பிடாரன், snake charmer.

நாகவாரிகம், மயில், peacock;2. கருடன், brahminikite.

நாகவாயு, நாகன், தசவாயுக்களி லொன்று, one of the ten vital airs in the human body supposed to assist in extending and contracting the body and in speaking.

நாகவாலெலும்பு,மார்பு எலும்பு, breast bone — Sternum. Title probably from its resemblance to cobra tail.

நாகவி, வெட்டிவேர், Khuskhus root — Andropogn muricatus.

நாகவிஷபாகம், துத்தநாகத்தினால் ஏற்பட்ட விஷம், zinc poisoning.

நாகவிஷம், துத்தநாகக் களிம்பு, verdigris of zinc; 2. நாகப் பாம்பின் விஷம், cobra poisoning; 3. துத்தநாகம் சேர்ந்த மருந்தினாலேற்பட்ட விஷபாக நோய், chronic zinc poisoning due to medicines

consisting of zinc compounds as ingredients — Zinc alism.

நாகவுப்பு, துத்தநாகவுப்பு, zinc salt.

நாகவெள்ளி, வாதத்திலும், சிவ பூசையிலும் உபயோகிக்கும் ஓர்வித வெள்ளி, an alloy of zinc and copper used in alchemy and the worship of Siva.

நாகவெள்ளை, நாகபற்பம், an Indian preparation of zinc oxide prescribed for gonorrhoea, see நாகபற்பம்.

நாகவேதம், மருது, winged myrobalan — Termenalia tomentosa.

நாகனழைத்தான்வேர்.

நாகனவல்லி, வெற்றிலை, betel leaf.

நாகனாதி, தேட்கொடுக்கி, scorpion sting plant — Heliotropium indicum.

நாகனாய், இலைக்கள்ளி, leaf spurge — leafy milk hedge — Euphorbia nerifolia.

நாகனி, திருகுகள்ளி, tursted milk hedge — Euphorbia tortilis.

நாகன், நாகவாயு, கொட்டாவி, விக்கல், வாந்தி முதலிய குணங்களையும் இலிங் கத்தின் எழுச்சியையு முண்டாக்கும். See நாகவாயு, one of the ten vital airs in the human system which is said to be responsible to cause yawning, hiccups, vomitting and erection of penis.

நாகன்சண்பகம், நாகேசுரம், which see.

நாகாகுயம், சிறுநாகப்பூ, Ceylon iron wood — Mesua ferrea.

நாகாங்கம், ஆடாதோடை, Malabar winter cherry — Adadhota vesica.

நாகாசம், அசோகு, asoka tree — Uvaria longifolia.

நாகாசனன், கருடன், brahmini kite; 2. கருடன் கிழங்கு, sky root — Bryonia epigaea.

நாகாசி, காய்ப்பாகல், spiked bitter cucumber — Momordica charantia.

நாகாஞ்சனம், துத்தம், white vitriol.

நாகாதோரம், கருப்பத்திலேற் படும் பிண்ட அழிவு, a kind of decay of the foetus in the womb, See நாகோதர கர்ப்பம்.

நாகாந்தகன், see நாகாராதி.

நாகாமஸ்தா, ஓர் வகைக் கோரை, a species of cyperus grass.

நாகாராதி,

நாகாரி, கருடன், brahmini kite.

நாகிதசரம், நாகிதம்,

நாகியந்தம், பால், milk.

நாகினி, வஞ்சிக்கொடி, common rattan of S. India — Calamus rotang;2. வெற்றிலை betel leaf.

நாகினிப்பாலை, வெட்பாலை, oleander rosebay — Wrightia tinctoria.

நாகு இளமரம், tender tree; 2. சங்கு, conch; 3. நத்தை snail; 4. பசி, hunger; 5. மீன், fish 6. பெண் எருமை, she buffalo; 7. சங்கஞ்செடி, smooth volkameria — Cleodendron incrame; 8. பெண் மீன், female fish; 9. கடல்நத்தை, sea snail.

நாகுதாளிலை, See நாகுதாளிலை.

நாகுராசிகம், சீயக்காய், soap pod — Acacia concianna.

நாகுருவேர், உஷாமூலம், dhobies earth soil.

நாகுலி, அரத்தை, galangal — Alpinia galanga; 2. கிரி புரண்டான், mungoose snake root — of black — pepper creeper — Piper nigrum; 4. பேரரத்தை, greater galangal.

நாகுலி, ஒரு வகை அரத்தை, said to be a variety of galangal or Rasna — Vanda Roxburghii which is substituted for it.

நாகுலிகம், சுக்கு, dried ginger — Zingiber officinali.

நாகுளறல், பேச்சுத்தடுமாறல், stammering.

நாகூர்ச்சல்லி, செம்பைப் பற்பமாகச் செய்ய வேண்டிய

தற்கு இச்சல்லி உபயோகப் படும். இது பழைய செம்பு நாணயம், ஆதலால் கூடிய வரையில் சுத்த செம்பு என்று கருதப்படும், an old copper coin made of pure copper; so fit for making medicine.

நாகூலகி, சிறுகாஞ்சொறி, climbing nettle — Tragia involucrata alias. T. cannabina.

நாகேசரம், see, நாகேசரப்பூ.

நாகேசர், யூனானி வைத்தியத்தில் நீரடைப்பு, மலச்சிக்கல் இவைகளைப் போக்க உபயோகப்படும் மருந்துப் பூடு. (in Unani medicine) a drug used for curing stranguary constipation etc; 2. சிறுநாகப்பூ, see நாகேசரப்பூ; 3. சுரபுன்னை, soorapoon — Ochrocarpus longifolius.

நாகேசரப்பூ, சிறு நாகப்பூ, இதற்கு நாகாசிப்பூ அல்லது நாகப்பூ என்றும் பெயர், இது மலையாளம், தென் கன்னடம் முதலிய மேல் சமுத்திரக் கரை யோரங் களிலும் உற்பத்தியாகும். இம்மரம் 40 அடி உயரம், பூக்கள் பெரியன, வெண்ணிறம், வாசனை யுள்ளது, பழம் கிச்சிலி அளவிருக்கும், இதன் வாசனைக்காகவே வீடுகளில் இதைப் பயிரிடுவார்கள், உலர்ந்த பூவை சந்தன முதலிய வாசனைச் சாமான்களுடன் சேர்ப்ப துண்டு, காய்சிவப்பு பழுத்தால் சுருக்க மடையும், உலர்ந்த பூவை, வாசனை யைக் கருதிக் கடைகளில் விற்பார்கள். இதன் வேருடன் இஞ்சியை அரைத்து உள்ளுக்குக் கொடுக்க வியர்வை உண் டாகும். இது உஷ்ணத் தையும் பசியையும் கொடுக்கக் கூடியது. இதைக் கஷாயமிட்டுச் செரியாமை, மூலரோகம், பலக்குறைவு, பசியின்மை முதலிய நோய்களுக்குக் கொடுக்கக் குணமாகும். இதைச்சாறு பிழிந்து கருப்பிணிகளுக்கு உண்டாகும் நீர்க்கட்டுக்கு உபயோகிப்பதுண்டு. ஆண் குறியில் விழும் வெள்ளை, காசரோகம் இவை விலகும். இதன் தனிச் சூரணத்தில்

தேன் அல்லது சர்க்கரை கலந்து குழைத்துக் கொடுக்க வயிற்றுவாயு, நீரடைப்பு, பெண்கள் உதிரச் சிக்கல் போம். சதாப்பிலையுடன் கலந்து அரைத்துக் கொடுக்க முறை சுரம் போம். தனிச் சூரணத்தை வெண்ணெய் அல்லது சர்க்கரையில் கொடுக்க சீதரத்தபேதி, இரத்தமூலம், பெரும்பாடு, பெண்களுக்குக் காணும் வெள்ளை இவைகள் குண மாகும். இதன் இலைகளைப் பாலில் கொதிக்க வைத்து நீர்த் தோஷத்திற்காகத் தலையில் வைத்துக் கட்டலாம். இலைகளைக் கஷாயமிட்டு உள்ளுக்குக் கொடுக்க கோழை, இருமல் நீங்கும். காய்ப்பிஞ்சிலிருந்து எண்ணெய் எடுத்து மேலுக்குப் பூச, கைகால் குடைச்சல், வாதப்பிடிப்பு இவைகள் குணமாகும். இதன் பட்டைவேர் இவைகளைக் கஷாயமிட்டுக் கொடுக்க பல விருத்தி யுண்டாகும். serpent Champak — Mesua ferrea. It is also known as iron wood of ceylon and cobra flower. It mostly cultivated in Malabar, South Canara and along the west coast. In the east along Coromandal coast. The tree is 40 ft. high, flowers large, white and fragrant fruit about the size of a small orange. It is mostly cultivated in houses and temples owing to its sweet fragrance. Dried flowers are mixed with other aromatics such as sandal etc and used as a perfume. The fruit is red and wrinkled when ripe, dried flowers are sold in bazaars being much esteemed for their fragrance. The root rubbed up with fresh ginger is given internally as a sodorific and also both internally and externally in snake bites. It is a stimulant and stomachic. Decoction of flowers is prescribed for indigestion, piles debility loss of appetite, suppression of urine occuring in pregnant woman and also for gonorrhoea and asthma in males. Powdered flowers mixed with honey or sugar from an excellant remedy in cases of wind in the stomach,

stranguary and dysmenorrhoea; mixed with the pulverised leaves of Ruta graveolens is given for intermittent fever, mixed with butter or sugar it is given with advantage for dysentery, hemorroides, menorrhagaea and leucorrhoea. A poultice is made from the leaves boiled in milk and in applied the catarrh, a decoction of them is given in cases of phlegm and cough. An oil extracted from the young fruits is applied externally for rheumatism and pain in the limbs. Decoction of root and bark is a good remedy as a tonic.

நாகேசுரம், see நாகேசுரப்பூ.

நாகேசுவரம், நாகபற்பம், இளங்கம் மனோசிலை, கந்தகம் ஆகிய இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து பழச்சாற் றால் அரைத்து ஆயுள் வேத முறைப்படி புடமிட்டெ டுத்த ஓர் வகைப்பற்பம், இதை தாது விருத்திக்காக உபயோகப் படுத்துவதுண்டு, a calcined powder prepared as per process of Ayurveda grinding flower zinc, vermilion, red arsenic or realgar, and sulphur with the juice of lime fruit. It is given for increasing the vitality.

நாகேசுவரரசம், சுத்தி செய்த ரசபற்பம், நாகபஸ்பம் இவை களோடு தாம்பிர பஸ்பம் சங்கு பஸ்பத்தைச் சேர்த்து எருக்கின் இலைச் சாற்றாலரைத்து ஆயுள் வேத முறைப்படி புடமிட்டெ டுத்து சயம், சோகை, மூலம், கிராணி சுரம், குன்மம் முதலியவை களுக்கு கொடுக்கு மருந்து, an Ayurvedic preparation given for curing consumption, anaemia, piles, diarrhoea fever etc. It is prepared according to the text by grinding and calcining the calcined powders of mercury zinc, copper, and conch with the juice of the leaves of madar.

நாகேந்திரன், சார்வளை, shaurvalai Trianthema decandra.

நாகை, வெற்றிலைக்கொடி, betel vine; 2. ஓர் வகை நாவல், tail leaved black plum — Eugenia rostrata; 3. நாவல் common black plum — Eugenia Jambolina, 4. சிறுநாவல் small jaumoon — Eugenia arnottima; 5. வெள்ளை நாகை — Anogeissus latifolia.

நாகைமேல், வெண்கலம், bronze an alloy of zinc copper and tin.

நாகோதரகருப்பம், (நாக+உதர+கருப்பம்) சையோகத் தினால் உண்டான சுக்கில சுரோ ணிதம் பெண்கள் கருப் பையில் விழ, கருப்பை வாயுவினால் சரிவர கருமுதி ராமல் பெண் சிலநாள் கருப்பிணியா யிருந்து பிறகு அல்குலின் வழியாய் ஓயாமல் இரத்தம் வடிந்து கடைசியாக மறைந்துவிடும் ஓர் வகைத் தோஷநோய், இத்தகைய சூலுக்குக் காரணமான வஸ் துக்கள் கருப்பையில் தங்கி நிற்கும் பொய்க் கர்பத்திற்கே நாகோதரம் என்று பெயர், இதை சிலர் அறியாமல் கிரகசேட்டை என்று சொல்வ துண்டு, false or ampullar pregnancy. A combination of ovum and semen arising from sexual intercourse may not give rise to a successful fecundation due to deranged vayu in the womb, but leads to the distension of the abdomen as in pregnancy which again at any time may disappear of itself. Such impregnated matter sometimes lying concealed in the uterus is known as Nagodara. This ascribed by the ignorant to the influence of malignant spirits or stars.

NOTE: by C.D. This, in my opinion, is tubal pregnancy i.e. Pregnancy development of the ovum in the fallopian or uterine tubes giving rise to the commonest variety of ectopic gestation. In such cases though amnion and chorion are formed true decidua is never present, the gestation usually ends by extrusion of the ovum through the obdominal opening. It is not uncommon for the tube to rupture into the peritoneal cavity, giving

rise to severe haemorrhage and necessitating surgical interference.

நாகோதரம், கருப்பையில் உண்டாகும் கருவின் கேடு, tubal abortion occuring in the oviduct; 2. கருப்பம் விருத்தி யடையாது மெலிந்து நடமாட்டமின்றி வயிற்றில் தங்கி விடுதல், abortion of the ovum in the tubal pregnancy into the abdomen where it gets absorbed slowly; 3. பாம்புவயிறு, belly not bulging out — Flat belly.

நாக்கசப்பு, பித்தாதிக்கத்தினால் ஏற்படும் வாய்கசப்பு, bitterness of taste experienced when the bile is excited.

நாக்கடு, நாக்கின் பின்புறத்தின் மேற்காணப்படும் முள் போன்ற சிறுசிறு முளை, small elevations found on the back (upper) surface of the tongue — Fusiform papilla.

நாக்கடுகு, see நாய்க்கடுகு.

நாக்கடைப்புரட்டி, see நாகபாஷாணம்.

நாகட்சரம், நாக்கில் காணும் சிறுசிறு கொப்புளங்கள், ulceration of the tongue — Ulcerative stomatilis.

நாக்கப்பாம்பு, நாக்குப்பூச்சி, round worms in the intestines - Ascaris; 2. மண்புழு earth worm.

நாக்குப்பூச்சி, நாக்கப்பாம்பு, which see.

நாக்கரளை, நாவில் கரளையைப் போற் காணுமோர் நோய் an epithelial tumour of the tongue — Perhaps pappilloma.

நாக்கரிக்கிரந்தி, கிரந்தியினால் நாக்கிலெழும்பும் சிறுசிறு கொப்புளங்கள் நாளா வட்டத்தில் நாக்கை அரிக்கும். ulceration of the tongue due to syphilitic causes. It is followed by cutaneous lesions and necrosis.

நாக்கரிப்பு, (நாக்கு + அரிப்பு) நாக்கு அரித்தல், see நாக்கரிக்கிரந்தி; 2. (நா + கரிப்பு) வாதாதிக்கத்தினால் நாக்கில் உப்புக்கரித்தல் saline taste in the mouth when the wind is excited in the system.

நாக்கழற்சி, நாக்குவெந்துகாணல் inflammation of the tongue — Glossitis.

நாக்காளப்பூச்சி, see நாகப்பூச்சி.

நாக்களின் கற்பம், காக்கை, கரிச்சான், செந்தலைக்கருடன், கழுகு ஆகிய இவைகளின் நாக்குகளை வாங்கி எடுத்து லர்த்தி வஸ்திரகாயம் செய்து ஒரு மாவிடை மண்டலம் தேனிற் கொள்ள உடம்பை வச்சிரகாயத்தைப் போற் செய்யும். இது சித்தருண்ணும் கற்பவகைகள் 108ல் ஒன்று, a rejuvenating powder prepared by drying and then pounding the tongues of crow, black bird, red brahmini kite and vulture. The fine powder is obtain by sifting it through fine muslin 1/20Pw of this is taken with honey for 40 days the body will become very strong. This is one of the 108 kinds used by the Siddhars for rejuvenating the body.

நாக்கறுத்தல், நாக்கை கத்தியா லறுத்தல், incision or excision of the tongue — Glossotomy.

நாக்கறுத்தான், தர்பைப்புல், இதன் இலை கூர்மையாக விருக்கும். ஆகவே இதின் மேலிருக்கும் தேனைப் பாம்புகள் ஆவ லோடு கொள்வதற்காக வந்து நக்கும்போது நாக்கு அறுப் புண்டு போவதா லிப்பெயர் உண்டாயிற்றென கதையாகச் சொல்வதுண்டு. sacrificial grass or kusa grass — Erogrostis cynosurioides. The blades of this grass are generally sharp. It alludes to a legend that serpents which greedily lick the honey or amrita fallen on this grass get their tongue forked. Hence the name.

நாக்கறுப்பு, (நாக்கு + அறுப்பு) நாக்கையறுத்தல், cutting or incision of the tongue; 2. (நா + கறுப்பு) நாக்கில் உண்டாகும் கறுப்பு நிறம், இது சாதாரணமாக நாக்கில் ஏற்படும், கண்ணுக்கெட்டாப் பூச்சிகளினால் உண்டாகு மெனக் கருதப்படும், the dark colour of the tongue. It is a condition in which the dorsum (upper surface) of the tongue has a blackish discolouration due to the presence of microphites — black tongue — Glossophytia.

நாக்கனிடும்கூர்மை, கெந்தியுப்பு, அதாவது கெந்தியுடன் மற்ற சரக்குகளைச் சேர்த்துச் செய்யும் ஓர் உப்பு, a prepared salt from sulphur mixed with other ingredients.

நாக்காம்பூச்சி, see நாக்குப்பூச்சி.

நாக்கி, அலம்புசா என்னும் ஓர்வகை நாடி. இதுவே அலம்புடை, இது தசநாடிகளி லொன்று, இது ஆசனவாய் தொட்டுக்காது வரை பரவி நிற்கும், one of the ten tuberous vessels of the human body extending from the anal region to the level of the ears.

நாக்கியாக்கிரம், கருஞ்சுண்டி, என்னும் ஓர் முள் செடி, bipinnate sensitive tree — Mimosa rubicaulis.

நாக்கிரந்தி, நாக்கிலுண்டாகும் கிரந்திப்புண், இது நோய் கொண்ட பெண்களைப் புணருவதால் உண்டாகும், syphilitic ulcers formed on the surface of the tongue. It is chiefly due to veneral causes.

நாக்கிலாம்பூச்சி, see நாக்களாப்பூச்சி.

நாக்கிழுப்பு, நாக்குத் தடிப்பினால் ஏற்படும் நோய், இதற்கு கடுகு கஷாயத்தில் காடி அல்லது தேன் சேர்த்து வாய்க் கொப்புளிக்கப் போம், a disease of the tongue marked by the thickness of the tongue. By gorgling the decoction of mustard (black) mixed either with honey or vinegar, the disease will disappear.

நாக்கு, இது உடம்பில் ஓர் சிறந்த உறுப்பு, ஏனெனில் இது நமது உடம்பின் பாதுகாப்பிற்கும், போஷணைக்கும் இன்றியமை யாதது, உணவுப் பொருள் களின் சுவையை அறிந்து உடம்பிற்குள் செலுத்து வதுமன்றி, மனத்திற்கு களிப்பையும் உண்டாக்கும். உடம்பிற்கு உதவாத உணவுப் பொருள்களை விலக்கவும், எச்சுவையையும் நாக்கின் எப்பாகமும் உணரும்படி அதன் மேற்புறம் அமைக்கப் படவில்லை, ஆனால் நாக்கின் மேலுள்ள மூன்று தானங்கள் மட்டும்தான் சுவையை அறியக் கூடிய சக்தி

யுடையவை, ஒவ்வொன்று அதற்குரிய சக்தியினால் ஒவ்வொரு சுவையையும் அறியக்கூடும். நுனி பாகம் இனிப்பு, பின்புறம் கசப்பு, சுவையை அறியலாம். நாக்கின் இருபுறமும் புளிப்பு சுவைகளை அறியும் சக்தியுண்டு, இனிப்பு, புளிப்பு சுவையறியும் பாகங்களுக்கு நடுவில் உப்பு சுவையறியும் பாகமுள்ளது. நாக்கின் கீழ்ப்பாகம் வெண்ணெய் கொழுப்புப் பண்டங்களின் சுவையையும், பொதுவாக நாக்கின் மேற் பரடை அடைந்தால் தான் ருசி ஏற்படும் tongue is a muscular organ of speech and taste. It is an important organ of the body for the reason that it acts as an agent subserving the special sense of taste and assisting to thrust the food down below into the gullet and as such it plays an important role in the protection and upkeep of the body.

The tongue is made up of three elements — epithelium, muscles and glands. Two types of special structures — Papillae and taste buds are seen on it. Taste buds are the end organs of taste. Sweet taste is felt at the tip, salt on the dorsum arteriorly, sour at the sides and bitter at the back of the tongue. Mid — dorsum has got no taste sensation. One of the eight special examinations (அஷ்டஸ்தான பரீக்ஷை) tongue is one. The eight are நாடி, நா, நிறம், சப்தம், பரிசம், கண், மலம், மூத்திரம், (by C.D).

நாக்குக்கறுத்தல், see நாக்கறுத்தல்.

நாக்குக்குளறல், பேச்சுத் தடுமாறல், faltering; 2. நாவுக் குளறல், having tongue unable to move freely — tongue tacked or tongue tied.

நாக்குச்சப்பல், நாக்கைச் சப்புக் கொட்டல், making a sharp noise with the tongue as is done by a child when sucking.

நாக்குச்சாதல், நாக்கின் சுவை யுணர்ச்சியறல், loss of sensation of taste in the tongue.

நாக்குச்சூலை, நாக்கில் உண்டாகும் ஓர் குத்தல் நோய், pricking or gouty pain of the tongue — Glossagra.

நாக்குச்சொறசொறப்பு, நாக்குமுள் பாய்தல், roughness of the surface of the tongue, furrowed tongue.

நாக்குட்டிநகசம்வேர், probably நாய்க்குட்டி மரம், which see.

நாக்குண்ணி, நாக்கை தின்று கொண்டே போகும் ஓர்வித ரணநோய், cancer of the tongue.

நாக்குத்தட்டல், நாக்கினால் ஒலியுண்டாக்கல், making a sharp sound with the tongue when tasting.

நாக்குத்தம்பனம், நாக்கெழாமல் செய்தல், (In sorcery) arresting of the movements of the tongue and there by rendering one unable to talk; 2. நாக்கின்பலவீனம், pull of the tongue.

நாக்குத்தடிப்பு, நாக்குப் பருமன், இதற்கு மருதம் பட்டைக் கஷாயம், வாய் கொப்பு ளிக்கத் தீரும், tongue getting thick. This is cured by gorgling the decoction of the bark of Terminalia arjuna.

நாக்குத்தவறு, தவறிப் பேசுதல், slip of the tongue — Lapsus linquae.

நாக்குத் தள்ளல், நோய் அல்லது வேறு காரணங்களைக் கொண்டு நாக்கு வெளியே தள்ளல், protrusion of the tongue from disease or other extraneous causes — Glossocele.

நாக்குத்திமிர், நாக்கின் உணர்ச்சி யறல், loss of sensation of the tongue — Glossoplegia.

நாக்குத்துடிப்பு.

நாக்குத்தேய்த்தல், நாக்குவழித்தல், cleaning of the tongue.

நாக்குத்தொங்கல், நாக்கு வெளிக் காணும்படி கீழ்த்தள்ளல்,

paralytic protrusion of the tongue — Glossoptosis.

நாக்குநீளம், உணவின் மேல் விருப்பம், craving for food.

நாக்குநோய், இது 6 வகை, disease of the tongue. It is of six varieties.

நாக்குப்பிடிப்பு, நாக்கின் அடிப்புறம் ஏற்படும் சதைப் பிடிப்பு, a defect at the inferior surface of the tongue — Tongue tied.

நாக்குப்பிரளாமை, நாக்கைப் புரட்ட முடியாமை, limitation of the movement of tongue — Tongue tie.

நாக்குப்பிளவை, நாக்கில் தோன்றும் கட்டி, carbuncle of the tongue —Glossanthrox.

நாக்குப்புண், நாக்கில் உண்டாகும் விரணம், ulceration of the tongue, application of borax with honey is beneficial.

நாக்குப்புற்று, நாக்கில் கொப்புளங்களால் ஏற்படும் விரணம், sore characterised by fungoid granulations on the surface of the tongue.

நாக்குப்பூச்சி, நாக்கில் ஏற்படும் பூச்சிகள், micro organisms found on the surface of the tongue — Tongue worm — Linguatula; 2. குடற்புழு, இதில் 4 பேதங்களுண்டு, அவற்றுள் மூன்று குடலிற் காணப்படும், இது உடம்பின் சத்தினால் உயிர் பிழைக்கும். ஆகவே மனிதருக்கு வயிற்று வலி, இழுப்பு, சோகை முதலிய நோய்களுக்கு இதுவே காரணமாகும்.round worm in the intestines. There are four varieties and of these three are found in the intestines. They are parasitic in man and as such will produce several diseases as colic, anemia, convulsions etc. 3. மிருகங்களின் உறுப்புகளில் காணப்படும் பூச்சி, a genus of worm found in the organs of animals as monkeys, lions etc — Porocephalus. 4. see நாகப்பூச்சி.

நாக்குப்பூர்த்தல், see நாக்குமா.

நாக்குமம், சுக்கு, dry ginger.

நாக்குமறுத்தல், நாக்கில் உணர்ச்சியில்லாமை, see நாக்குத்திமிர்.

நாக்குமா, நாக்கில் படரும் ஊத்தை, white layer on the surface of the tongue.

நாக்குமாபடிதல், நாக்கின் மேல் மாவைப் போல் வெண்மையாகப் படரும் ஊத்தை, tongue covered with a whitish layer — Coated tongue.

NOTE: Coated tongue indicates disease whether in adult or child.

நாக்குமீன், எருமை நாக்குமீன் அல்லது கடல்நாக்குமீன், இது பார்வைக்கு நாவைப் போல் மெல்லியதாகவும், தட்டையாகவுமிருந்ததால் இப்பெயர். India sole flat fish — Pleuronictus solea. It is a sea fish and is so called from its resemblance to the tongue which is flat and soft.

நாக்குமுடிச்சு, நாக்குப் பிடிப்பு, tongue tie — Ankyloglossia.

நாக்குமுள், நோயினால் நாக்கில் காணப்படும் முள்ளைப் போன்ற எழுச்சி, roughness of the tongue due to some diseases — Furred tongue, See களகண்டி.

நாக்குமூக்கு, மூக்கிரட்டை, spreading hog weed — Bochaevia repens alias B. procumbens.

நாக்குமூக்குசாதல், நோயினால் நாக்கிலும், மூக்கிலும் உணர்ச்சியற்றுப் போதல், loss of sensation of taste and smell of the tongue and nose due to sickness.

நாக்குமூக்குச்சுடல், சூட்டுக்கோலினால் நாக்கையும் மூக்கையும் சுடுதல், இப்படிச் செய்வதினால் உடம்பு சுத்தியாகும் என்ற பூர்வீகக் கொள்கை, இதற்குப் பிராயச்சித்தம் என்று சொல்வதுண்டு, branding the tongue and the nose which is considered by

the ancients as a purification of the contaminated body of an out caste.

நாக்குமூக்குநடுவெறுத்தான், மூக்கி ரட்டை, see நாக்குமூக்கு.

நாக்குரோதம், காட்டாமணக்கு, bronze leaved physic nut — Jatropha gossypifolia.

நாக்குவரி, நாக்கு வெடிப்பு; cracked tongue, fissure of the tongue.

நாக்குவலி, நாக்கில் ஏற்படும் வலி, pain in the tongue — Glossalgia.

நாக்குவழு, நாக்கின் மேற்காணும் வளவளப்பு, white or yellow slimy matter deposited on the surface of the tongue.

நாக்குலரல், நாக்குப்பசையறல், parchedness of the tongue.

நாக்குவாங்கல், நாக்கையிழுத்து நீட்டல், stretching the tongue; 2. நாக்கையிழுத்தல், paralysis of the tongue.

நாக்குவாதம், வாயுவினால் நாக்கெழாது பேச முடியாமை, when the excited vayu affects the nerves supplying the voice box and tongue paralysis of the tongue may occur rendering the patient unable to eat, drink or speak — Paralysis of tongue.

நாக்குவிப்புருதி, நாக்குண்ணி, cancer of the tongue; 2. நாக்கில் எழும்பும் கட்டி, abscess of the tongue.

நாக்குவிரணம், நாக்கழற்சியாற் காணும் விரணம், inflammation of the tongue; 2. நாக்குப்புண், ulceration of the tongue; 3. நாக்கில்வரும் சிவப்புத் தழும்புகள், red patches on the tongue — Psoriasis linguae.

நாக்குவிழல், நாக்குச் சோர்வடைதல் paralysis of the tongue — Glossolysis.

நாக்குவீக்கம், நாக்கிலுண்டாகும் வீக்கம், swelling of the tongue — Glossoncus.

நாக்குவெடிப்பு, நாக்கின் சளி சவ்வுக்கு அழற்சி கண்டு வெடித்தல், see நாக்குவரி, fissure in the mucous membrane marked by white thickened patches— Leukoplakia.

நாக்குழறல், நாக்குக் குழறுதல், aphasia with utterance of meaningless phrases.

நாக்குழிஞ்சான்,ஓர் செடி, a plant — Capparis maxima.

நாக்குளிப்பாம்பு, பூ நாகம், இது பாம்பைப் போல் நீளமாய் இருக்கும், earth worm resembling a small snake; 2. குடற்புழு, long intestinal worm — Teresworm; 3. நாக்குள்ளிருக்கும் கண்ணுக் கெட்டாப்பூச்சி, micro organism of the tongue.

நாக்குளிப்பூச்சி, see நாக்குளிப்பாம்பு.

நாக்குள்ளிழுத்தல், நாக்கு உள்ளுக்கு வாங்கல், retraction of the tongue — Glossocoma.

நாக்கூறல், நாவில் தண்ணீர் கசிதல், salivation.

நாக்கெடுத்தல், நாக்கை அறுத்து எடுத்துவிடல், removing of the tongue — linguation.

நாக்கெரிச்சல், குன்மநோயினால் நாக்கிற் காணும் எரிச்சல், burning sensation of the tongue as in cases of dyspepsia — Glossopyrosis.

நாக்கேணி, பெருமருந்துப்பூடு, Indian birthwort — Aristolochia indica.

நாக்கை, see நாக்குளிப்பூச்சி.

நாக்கைப் பிடுங்கல், சாதல், dying.

நாக்கைப்புரட்டல், அடிநாக்கை அண்ணாக்கிற்படும்படி மேலெழச் செய்தல், இது யோகாப்பியாசப் பழக்கம், turning the tongue upwards to reach the palate. This is one of the several postures adopted in yoga practice.

நாக்கொட்டி, நாக்கு எழாமல் அடிப்பக்கம் ஒட்டிக்

கொள்ளல், adhesion on the tongue at the bottom — Ankylo glossia.

நாக்கொட்டுதல், (நாக்கு + ஒட்டுதல்) நாக்கு வறளுகை. dryness or parchedness of the tongue.

நாக்கொட்டுதல், (நா + கொட்டுதல்) உருசி மிகுதியால் நாக்கைத் தட்டுதல், sounding with the tongue from excessive taste.

நாக்கொப்பளம், நாக்கில் புறப்படும் கொப்பளங்கள் இதற்கு மருதம்பட்டை வெள்ளைக் காசுக்கட்டி இரண்டையும் தூள் செய்து நாவில் கொஞ்சமாய்த் தெளித்து விட தீரும், ulceration of the tongue. Dusting of the mixture of powders of the bark of Terminalia arjuna and white catechu.

நாங்கல், நாகசம்பங்கியின் ஓர் இனம், இதில் இரண்டு விதம் உண்டு. *1. மண்ணை நாங்கல், 2. நீர் நாங்கல்,* a species of white champak. It consists of two kinds viz land borne and water borne plants — Mesua genus.

நாங்கில்மரம், சிறுநாங்கில், பெருநாங்கில் see நாங்கு.

நாங்கு. Ceylon ironwood — Mesua ferrea.

1. கருநாங்கு, long pointed broad leaved ceylon iron wood — Mesua ferrea (typica).

2. தாடி நாங்கு the same as No.1

3. மலை நாங்கு, large flowered Ceylon iron wood — Mesua ferrea (speciosa).

4. நீர்நாங்கு, same as No.3.

5. மண்ணை நாங்கு, narrow leaved Ceylon iron wood — Mesua ferrea coromandelina.

நாங்குழு, see நாங்கூழ்.

நாங்கூழ், see நாக்குளிப்பாம்பு, 2. பெருங்குடலின் துவக்கத்தில் வெளிப்படத் தொங்கும்

நாகப்புழுப் போன்ற சவ்வு, a worm shaped process of the coccum — Vermiform appendix.

நாங்கூழ்கோளாறு, நாங்கூழின் நோய், disease of the Vermiform appendix.

நாசகாரி, நோய்களைக் கண்டிக்கு மருந்து, an infalliable remedy.

நாசகாரி வாயு, nitrogen.

நாசகேரளம், சிவதைவேர், India rhubarb; Indian jalap — Ipomaea turpethum.

நாசப்பழக்கம், கெட்ட பழக்கம், pernicious habits.

நாசம், அழிவு, destruction; 2.சாவு, death.

நாசவக்கணை, காகதும்புரு, kanjilals' mottled ebony — Diospyros kanjlali.

நாசவாயு, see நாசகாரி வாயு.

நாசனம், see நாசம்.

நாசனி, அழிக்கக் கூடியது, anything capable of destructing.

நாசகிராவம், மூக்கிலொழுகும் இரத்தவொழுக்கு, bleeding from the nose — Epistaxic.

நாசாக்கிரம், மூக்கு நுனி, tip of the nose.

நாசாதக்கணம், வலது நாசி, right nostril.

நாசாபாக்கரோகம், ஓர் மூக்கு நோய், a nose disease.

நாசாபுடம், மூக்குத் துவாரம், nostril.

நாசாரிசம், மூக்கில் வளரும் மாமிசம், polypus of the nose.

நாசாவாமம், இடது மூக்கு; 2. மூக்கு, nose.

நாசி, மூக்கு, nose, 2. வஞ்சி, rattan of S.India — Calamus rotang; 3. மூக்குத் துவாரம், nostril.

நாசிஉக்கிரமம் மூக்கு நோய், disease of the nose.

நாசிஉதிரம், மூக்கில் இரத்தம் வடிதல், bleeding from the nose — Epistaxis.

நாசிஉயிர், சுக்கிலம், யோகாப் பியாசத்திற்கு இது முக்கிய மான தாலிப் பெயர். இது வன்றி மூச்சடக்க முடியாது. semen which is considered important for suppressing the

breath in the yoga practice and hence the name.

நாசிக சுரோத்தம், நாசித்துவாரம், nostril.

நாசிகதமம், மூக்குச் சிந்தல், blowing the nose.

நாசிகமலம், மூக்குப் பீ, nose dirt; 2. மூக்குச்சளி, mucous from the nose, snot.

நாசிகாக்கிரம், see நாசாக்கிரம்.

நாசிகாசர்ப்பம், பசுவின் மூக்கினின்று உற்பத்தியாகி வெளி வரும் எனச் சொல்லும் ஓர் வகைப்பாம்பு, a kind of snake said to take its birth in the cow, and came out from its nose.

நாசிகாசிராவம், மூக்கினின்று அதிகமாய் நீர் வடியும் ஓர்வகைப் பீனசம்,catarrh of the nose.

நாசிகா சூரணம், நாசிவழியாக ஏற்றும் அல்லது இழுக்கும் மருந்துப் பொடி, a medicinal powder sniffed; 2. மூக்குத்தூள், snuff.

நாசிகாபீடம், மூக்கிற்குள் சதை வளரும் நோய், polypus of the nose.

நாசிகாபீடை, மூக்கழுக்கு, rheum; 2. மூக்குச் சளி, mucous from the nose snot.

நாசிகாமலம், see நாசிகமலம்.

நாசிகாரோகம், பொதுவாக மூக்கில் வரும் நோய்கள், diseases in general of the nose.

நாசிக்கனப்பு, மூக்கில் வீக்கம், swelling of the nose.

நாசிக்கிரந்தி, மூக்கையரிக்கும் கிரந்தி, a kind of syphilitic ulcer eating away or otherwise affecting the nose.

நாசிம்சவேதனை, பாகல், bitter cucumber — Momordica charantia.

நாசிசிந்தல், மூக்குச்சிந்தல், blowing the nose.

நாசிச்சளி, மூக்குச்சளி, mucous from the nose.

நாயச்சுரம், மூக்கில் வருமோர் நோய், a disease of the nose.

நாசித்தாரு, மேல் வாய்தற்படி.

நாசித்தாரை, மூக்குத்துவாரவழி, passage of the nose.

நாசித்துவாரம், மூக்குத்துவாரம், nostril.

நாசித்துளை, see நாசித்துவாரம்.

நாசிநீரோட்டம், மூக்கின் வழியாய் நீர் வழிதல், catarrh of the nose.

நாசிநீர்ப்பாய்ச்சல், மூக்கினின்று நீர்வழிதல், see கண்ணீர்ப் பாய்ச்சல்.

நாசிநீர்வர்த்தினி, மூக்கு நீரொழுகச் செய்து தும்மலை யுண்டாக்கும், Errhinc.

நாசிபங்கம், மூக்கழிவு, decaying or destruction of the nose.

நாசிபாகம், மூக்கிலுண்டாகும் அழற்சி, inflammation of the nose. 2. a purulent inflammation and presence of pimples in the nostrils owing to the vitiated condition of the local pittam (bile humour) attended with slimy secretion and fetid odour.

நாசிப்பரிசோஷம், மூக்கடைப்பு, இது மூக்கின் வறட்சியினால் சளி திரண்டு மூச்சுவிட முடியாமல்படி மூக்கை யடைத்துக் கொள்ளும், இது வாயு, பித்த சம்பந்தத்தினால் இவ்விதம் நேருமெனக் கருதப்படும், difficulty of respiration caused by the drying up and consequent thickening of mucous accumulation in the passages of the nostrils through the action of deranged Vayu and bile.

நாசிப்பரிச்சிராவம், ஓர் மூக்கு நோய், இதனால் இராக் காலங்களில் மூக்கினின்று சதா சளி நீர் வழியச் செய்யும், a disease of the nose in which there is a transparent water like secretion of Kapha through the nostrils more particularly at night — Fluent Coryza.

நாசிப்பிணி, பீனசம் முதலியவை, various diseases of the nose.

நாசிப்பிரதிநாகம், மூக்கடைப்பு, சிரசில் நிற்கும் உதான வாயு, கோளாறடைந்து சளியோடு கூடி மூக்கின் துவாரத்தை அடைக்கும், the condition under which the upcoursing Udhana Vayu of the region of the head is deranged in its passaged by a surcharge of kapha stuff the nasal passages.

நாசிப்பீனசம், மூக்கின் சளி சவ்வுக்குத் தாபிதங்கண்டு அதனால் மூக்கின் வழியாய் நீர்ச்சளியாய் வடிதல், a catarrhal affection of the nasal mucous membrance attended with a ropy discharge from the nostrils — Coryza.

நாசிப்புண், நாசியில் தோன்றும் புண், ulcer in the nose.

நாசிப்பூடு.

நாசிப்பொடி, மூக்குத்தூள், snuff; 2. மூக்குச் சூரணம், powder for snuffing.

நாசிமரியாதா, மூக்குத் துவாரங் களின் நடுவே நிற்கும் முருந்து பாகம்.

நாசிமலம், மூக்குப்பீ, see நாசிமலம்.

நாசிமாந்தம்.

நாசியடைப்பு, மூக்கடைப்பு, obstruction of the nostrils through cold. see அபிநாசி.

நாசியிரத்தபித்தம், மூக்கினின்று இரத்தம் வடிதல், bleeding from the nose — Epistaxis.

நாசியிலுறையைப் பிழிதல், மூக்கில் உறைக்கும்படி பிழிதல்.

நாசியுக்கிரமம், see நாசி உக்கிரமம்.

நாசியெலும்பு, மூக்கெலும்பு, nasal bone.

நாசியோனி, பெண் யோனியை மூக்கினால் முக ராது சம்போகம் செய்ய முடியாத, காமவிச்சை யில்லாத பலவீனன், a weak or passionless man who has no desire for cohabitation without smelling the genital of a female.

நாசிரந்திரம், மூக்குத்துவாரம், nostril nose aperture.

நாசிரோகம், மூக்குநோய், disease of the nose.

நாசிவால், மணத்தக்காளி, black berried solanum — Solanum nigrum.

நாசிவிரணம்போக்கி, see சக்கிரவர்த்தி.

நாசினி, திப்பிலிமூலம், root of long pepper.

நாசுகம், see நாசுகாதீதம்.

நாசுகாதீதம், பீர்க்கு, gourd plant, strainer vine — Cucurbita acutangularis; 2. விழி, அதாவது விழுதி, chilli fruited capper — Cadaba indica alias Stromeria tetrandra (Rox).

நாசுடம், கட்டுமருந்து, இது நாட்டு வைத்தியர்கள் உபயோ கிக்கு மருந்து, a quack patent or secret remedy — Nostrum.

நாச்சநார், நஞ்சா, spurge laurel — Lasciosiphon eriocephalus.

நாச்சிநார், see நாச்சநார்.

நாச்சூலை, see நாக்குசூலை.

நாச்செவி.

நாடகம், தேரையர் செய்த ஓர் தமிழ் வைத்தியநூல், மருத்துவ பாரதம், a medical science by Therayar.

நாடக்கரிவாள், வெள்ளாடு, goat.

நாடன் பருத்தி, பெரியபருத்தி Indian cotton, Indian lint — Gossypium herbaceum.

நாடன்பூ.

நாடன்மஞ்சள், ஓர்மஞ்சள், a kind of turmeric.

நாடாப்புழு, நீண்ட தட்டையான பூச்சி, tape worm; 2. பெரிய நாடாப்புழு, the largest tape worm of man — Broad tape worm.

நாடாப்பூச்சி, நாடாப்புழு, tape worm, see நாடாப்புழு.

நாடி, ஆண்மயிர், tuft of hair of a male; 2. உட்டுளை, a tube tubularity; 3. நரம்பு, an artery 4. மூக்கு, nose; 5. மணிக்கட்டின் மேல் நிற்கும் தாது, pulse at the wrist or ankle; 6. 24-நிமிஷங் கொண்ட காலவளவு, a period of 24-minutes; 7. செவ்விரத்தம் செல்லும் குழல், vessel conveying pure red blood, artery; 8. வளையலுப்பு a kind of salt — Glass gall; 9. நஞ்சுக்கொடி, navel cord; 10. நாடி நரம்புகள் சுருங்கும் விரியும் தன்மை, the expansion and contraction of an artery which is generally felt by the finger; 11. வடமொழியில் பொதுவாக துவாரம், (in Sanskirt) sinus; 12. பூண்டுகளின் துவாரம் வாய்ந்த தண்டு, (உ-ம்) நாணல், தாமரை, tubular stalk of any plant as reed, lotus etc; 13. விநாடி, Indian minute; 14. இரத்தத்தை இருதயத்தி லிருந்து உடம்பின், ஒவ் வொரு பகுதிக்கும் செலுத்து கிற திரண்ட வடிவுள்ள குழல்கள், tubes or tubular

organs as veins and arteries of the body; *15.* *பவுத்திரப்புண்*, fistulous sore; *16.* *ஓர்வகைப்புல்*, a kind of bent grass; *17.* *சுழிமுனை நாடி*, the nerve passing the 6 regions of the body. see *தசநாடி*; *18.* *வாதபித்த சிலேட்டுமங்களைக் குறிக்கும் தாதுநரம்பு*, vital nerves indicating the humours of the human body; *19.* *பூவின்தாள்*, flower stalk.

நாடிஅழுந்தல், *நாடி நடைக் குறைவு*, sinking of pulse.

1. *அற்று நிற்றல்*, scarcely felt.

2. *சிதறிஓடல்*, vibrating and excessively unsteady.

3. *சுழன்றுகாணல்*, whirling.

4. *அழுந்தி நிற்றல்*,sinking.

5. *உதறி நிற்றல்*, agitated.

6. *கதிப்பொடு துடித்து நிற்றல்*, rapid pulse with strong vibrations.

7. *தணித்துத் தளரல்*, becoming weak.

8. *துரிதமாய் ஓடல்*, rapid or abrupt pulse.

9. *மாறிஓடல்*, irregular pulse.

10. *நடுங்கி ஓடல்*, small, feeble tremulous pulse.

11. *இரண்டுற ஓடல்*, two beats following each other.

12. *அடுத்தடுத்தோடல்*, beating intermittently.

13. *விரிந்து ஓடல்*, hawing expansion in the beat.

14. *கூர்மையாய் ஓடல்*, becoming sharp.

15. *புழுப்போலூர்தல்*, hawing a worm like movement.

16. *வலித்துஓடல்*, hawing a stretching movement.

நாடிகம், *பொட்டிக் கீரை*, bristle leaved jew's mallow — Corchorus olitorius; *2.* *தொண்டை*, wind pipe throat.

நாடிகரணம், *தண்டைப் போன்ற கால்களுடைய பறவை*, stalk legged bird.

நாடிகளின் தொகைகள், *சிரசில், 7000: இரண்டு செவிகளில் 310, இரண்டு விழிகளில் 4000, மூக்கில் 3330, இரு கன்னங்களில் 5000, தோள்*

களில் நாடி 1000, கண்டஸ்தானத்தில் 1000, இரண்டு கைகளில் 3000, தொண்டை கொப்பூழ் 916, பிடரியின் கீழ் 8000, விலாவில் 3000, லிங்கம், யோனி, அடிவயிறு இவை களில் 7000, மூலத்தில் 3000, இடைசந்தில் 2000, பாதங்களில் 1000, (In Philosophy) சுழிமுனை நாடி, அன்னநாடி, இடைகலை நாடி, பிங்கலை நாடி, முதுகுநாடி, கரநாடி, பாதநாடி, நாசிநாடி, நேத்திரநாடி. தசநாடி — இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, புருடன், அத்தி, சிங்குவை, அலம்புடை, சங்கினி, குருநாடி.

நாடிகுடிலம், வளைந்து அல்லது குறுக்காக ஓடும்நாடி நடை, a bent or crooked movement of the pulse.

நாடிகெற்பம், மரமஞ்சள், tree turmeric.

நாடிகேரளம், தென்னை, cocoanut palm.

நாடிகேளம், see நாரிகேளம்.

நாடிகை, சுத்த அல்லது அசுத்த இரத்தக் குழல், any lubular organ as artery or vein.

நாடிக்கட்டி, நாடிவித்திரதி, abscess of vessel.

நாடிக்கதிப்பு, நாடிக்குழல்கள் தடித்தல், அல்லது தடிப்பதினால் குழல்கள் வாய் சிறுத்தல், the undue augumentation or abnormal preponderance of the connective tissue and other elements in the walls of capillaries and arteries — Arterio capillary bibrosis; 2. நாடிநடையின் விரைவு, rapid pulse.

நாடிக்கபாடம், இரத்தம் பின்னிட்டு ஓடாதபடி தடுக்கும்படி நாடிக் குழாய்க்குள் அமைந்த பூட்டைப் போன்ற வஸ்து a fold in the vessels preventing the reflux of the contents — Semilunar valves of the vessels.

நாடிக்கமலம், மூக்கினின்று வடியும் நீர், the watery discharge from the nose.

நாடிக்கவசம், நாடிச்சுவரின் உள், நடு, வெளி ஆகிய மூன்று பகுதிகள், the three coats of the walls of an artery 1. inner coat lunica intima, 2. middle coat — lunica media, 3. outer coat lunica adventia.

நாடிக்காயம், நாடிக்குழல்களுக்குக் காணும் காயம், injury or wound to blood vessels.

நாடிகுணம், மூன்றுவித நாடியின் குறி அல்லது தன்மைகள், அதாவது வாதம் கைகால் உளைச்சலையும், பித்தம் வாய்க் கசப்பையும், ஐயம் இருமல், கோழை, இளைப் பையும் உண்டாக்கும். the characteristic symptoms of the three kinds of humours in the system viz. Vatha (wind)boring pain in the limbs, Pitham (bile) bitterness of taste, Kapham (phlegm) cough mucons fatigue.

நாடிக்குழல், சுத்தஇரத்தம் கொண்டு செல்லும் குழல், arterial tube conveying the bright red blood.

நாடிக்குறிப்பு, see, நாடி நிதானம்.

நாடிக்கேள்வியந்திரம், நாடியோடும் சப்தத்தைக் கேட்கும்படி யமைக்கப்பட்ட யந்திரம், an apparatus for rendering audible the vibrations of the pulse— Sphpgm ophone.

நாடிசங்கம், காக்கை, crow; 2. ஓர் நாரை a fabulous crane.

நாடிசந்திதாத்தோமம், Glyoma.

நாடிசலனம், நாடியடித்தல், beating of the pulse.

நாடிசளைத்தல், இரத்தவோட்ட வேகம் குறைதல், decrease in the rapidity of the circulation of blood; 2. நாடியோட்டம் குறைவு படல், lowering of the pulse.

நாடிசுத்தம், நாடிக்குழல்களின் இரத்தத்தை சுத்தியாக்கல், the process of making the blood arterial, changing the dark venous blood into a bright arterial blood — Arterialization.

நாடிசுத்தி, சித்த நூலின்படி காயசித்தி செய்வதற்கு முன் உடம்பினில் நாடிகளின் சுத்தியைப் பற்றி கூறு முறைகள், the processes or principles to be adopted in the purification of blood in the system before rejuvenation as contemplated in Tamil Siddhars Science.

நாடிசுருக்கம், நாடிக்குழலின் சுருக்கம், constriction of an artery — Arteriarctia; 2. நாடிக் குழலைச் சிறுக்கச் செய்தல், narrowing the calibre of an artery.

நாடிசுவேதம், மருந்துப்புகையைக் குழலின் வழியாகவிட்டு நோயுள்ள விடங்களில் காட்டல் application of medicated fumes through a pipe to the affected parts of the body.

நாடிசோதனை, கைபிடித்துப் பார்த்து நாடியின் நடையை சோதித்தல் examination of pulse; 2. நாடிக்குழல்களைப் பரிசோதித்தல், (in Anatomy) examining the walls of an artery or of a vein.

நாடிச்சக்கரம், உடம்பின் அனேக பகுதிகளில் காணப்பட்ட நரம்பிழையின் கூட்டங்கள், தமிழ்யோக நூற்படி உடம்பில் மேற்கண்ட பகுதிகளில், முக்கியமாய்த் தேர்ந்து எடுக்கப்பட்டவை ஆறு இடங்கள் இவற்றையே, ஆறாதாரம் எனப்படும், an interlacing or a network of various kinds of nervefibres — Nerve plexus. According to yoga philosophy referred to in Tamil Medical Siddhars' Science, six such nerve-plexus are selected for yoga practice.

நாடிச்சமநிலை, see நாடியளவு.

நாடிச்சிதைவு, நாடி சிதைந்து ஓடுதல், irregular pulsation due to disturbances of rhythum and force Sinus Arrythemia.

நாடிஞானம், நாடி நிதானத்தை அறியுமறிவு knowledge of pulse.

நாடிதயம், குழலின் வழியாக இழுத்தல் அல்லது குடித்தல், sucking or drawing through a tube.

நாடிதரங்கம், ஓர் விதபாஷாணம், a kind of poison.

நாடிதாது, nervous tissue.

நாடிதாரணை, see நாடி நடை.

நாடிதித்தம், ஓர் வகை வேம்பு, a kind of margosa tree.

நாடித்தடிப்பு, அழற்சியினால் செவ்விரத்தக் குழாயின் தடிப்பு, a condition of thickening of the coasts of the arteries with inflammatory changes — Avteriosclerosis.

நாடித்தபம், நாடியழற்சி, அதாவது செவ்விரத்தக் குழாய்க்குக் காணும் அழற்சி, inflammation of an artery — Artiritis.

நாடித்தமம், நாளம் தடிப்பது அல்லது வீங்குவதினால் நாடி துரிதமாக அடித்தல், swelling of veins causing a quicker pulse agitation.

நாடித்தலம், வாதம் மலத்திலும் பித்தம் சலத்திலும், ஐயம் விந்துவிலும் அடங்குவதால் மூன்று நாடியும் சஞ்சரிக்கு மிடம், the three places where the three humours in the system are subservient. viz — wind in faeces, bile in water i.e. urine, phlegm in semen; 2. நாடி அடிக்குமிடம், the place where the beating of the pulse is noted c.f. நாடித்தானம்.

நாடித்தனித்தலம், உடம்பில் நாடி நடையைக் குறிப்பிடக்கூடிய இடங்கள், அதாவது குதிக்கால், உந்தி, மார்பு, கைம்மூலம், சந்து, கண்டம், காதடி, இருகை, கவின் துண்டம், the places in the human body where in the pulsation is perceivable viz — Heel, navel, chest or breast, elbow, limbfold, neck, earlobe, arms and temples.

நாடித்தானம், மூன்று நாடிகளின் இடங்கள், அவையாவன; the seat of the three pulses in the system; 1. உந்தியில் வாதம், vatha in the navel region; 2. மார்பில் பித்தம், bile in the chest region; 3. சிரசில் சிலேட்டுமம், phlegm in the head and neck.

நாடித் துடிப்பு, இரத்த வோட்டத்தினால் உடம்பில் பலவிடங்களில் காணும் படபடப்பு. the beating of the pulse felt at several parts of the body owing to the circulation of blood — Arterial beat; 2. நாடி வேகமாய் அடித்தல், rapid pulsation.

நாடித்தூக்கம், நாடியொடுக்கம், sinking of the pulse.

நாடித்தொகுதி, பல நாடிகள் சேர்ந்த கூட்டம், group or network of arteries or capillaries — Anastomosis.

நாடித்தொந்தம், மூன்று நாடிகளும் ஒன்றுடன் மற்றொன்று கலக்குந்தன்மை அதாவது வாதபித்தம், வாத சிலேட்டுமம், பித்த சிலேட்டுமம், the combination of two humours, or interchanging of the three humours.

நாடித்தோற்றம், 96 அங்குல உடம்பில் காணப்படும், 72,000 நரம்புகள், there are 72,000 nerves in the 96 inches body.

நாடிநடை, உடம்பில் இரு தயத்தின் இடது சடரம் குவியும்போது கண்டரையின் வழியாகச் சென்று சகல நாடிகளுக்கும் இரத்தம் பரவும், அப்போது நாடிகள் விரியும், மறுபடியும் இடது சடரம் விரியும்போது நாடி நரம்பி லிருக்கும் இரத்தம் குறைந்து நாடி சுருங்கும். இவ்விதமாக இருதயம் விரியவும், சுருங்க வுமாக இருத்தலால் அதனுடன் சேர்ந்த நாடி நரம்புகளுக்கும் இவ்விரண்டு தன்மையுமுண்டு. இச்செய்கைக்குத்தான் நாடி நடை என்று சொல்லப்படும், ஆகவே நாடிநடை என்பது செவ்விரத்தக் குழல்களின் துடிப்பே யொழிய வேறல்ல, இத்துடிப்பு,குழாயின் நெடுக அலையைப் போல் மேன் மேலும் விரிந்துமுலும் விம்மலே உடம்பில் பலவிடங் களில் காணலாம், எவ்வெவ் விடங்களில் எலும்பை ஒட்டி சர்மத்திற்கு அடுத்தாற்போல் நாடி குழல்கள் ஓடுகின்றனவோ அவ்விடங்களிலெல்லாம் இதன் துடிப்பை எளிதில் அறியலாம்; குழல் கனத்தில் குறையக் குறைய நாடி நடையும் குறையும். இது ஒரு இமைப் பொழுதில் 30 அடி தூரம் வீதம் பாய்ந்து ஓடும். வைத்திய முறைப்படி நாடி நடையை சரியான படி அறிய வேண்டின் கணுக்கை யண்டை மணிக் கட்டில் தான் பார்க்க வேண்டும். ஏனெனில் இவ்வி டத்தில் தான் நாடி நன்றாய் அறிவதற்குத் தகுந்த படி அமைந்திருக்கிறது. விரல் களினால் அழுத்திப் பார்க்க நாடித்துடிப்பு தெளிவாக விளங்கும், 1. வாத நாடி, 2. பித்த நாடி; 3. சிலேட்டும நாடி; 4. சாத்திய நாடி; 5. அசாத்திய நாடி; 6. வாதபித்த நாடி; 7. பித்த சிலேட்டும நாடி; 8. சன்னிநாடி; 9. மரண நாடி.

1. வாலிபருக்கு நிமிஷம் ஒன்றுக்கு 70-74 தரந் துடிக்கும்.
2. பெண்களுக்கு நிமிஷம் ஒன்றுக்கு 76-80 தரம் துடிக்கும்.
3. ஒரு சிலருக்கு நிமிஷம் ஒன்றுக்கு 50-60 தரம் துடிக்கும்.
4. அபூர்வம் நிமிஷம் ஒன்றுக்கு 80 தரம் துடிக்கும்.

இதற்குக் குறைந்தால் தேக நிலைமை சரியல்ல வென்று

கருதவேண்டும், நாடியின் வேகம், மெதுவு இருதயத்தின் வலிவையும், பலவீனத்தையும் ஒட்டியிருக்கும், ஒழுங்கின நாடி உடம்பிற்கு அபாயமெனக் கருத வேண்டும், அசிரணநாடி, மத்திரிதய நாடி, ஸ்திரிசங்கை நாடி, மலபந்த நாடி, சன்னிவாத நாடி, in the human body, when the left ventricle is contracted the blood is forced out into the great artery Aorta. The walls of the artery and its branches will then dilate and like wise when the left ventricles dilates the blood in the arteries will be decreased and so the walls of the arteries contract. As heart dilates and contracts, the arteries also take up these two functions.

Therefore the pulse is in fact nothing but that distention and contraction of the arterial walls travelling in the form of a wave. This wave movement is carried through the several parts of the body and where ever the artery runs beneath the skin and close to the bone, there the pulse is clearly perceptible. When the thickness of the arterial wall is lessened the pulse movement will likewise will be found decreased. It is said that the pulse wave runs 30 feet per second. According to Medical Science the pulse is usually felt in the radial artery at the wrist for the reason that it is favourably situated so as to be felt distinctly and without difficulty.

The pulse rate or the number of pulsations per minute in the human body is as follows:

1. In an adult per minute is varied from 70—74.
2. In a woman per minute is varied from 76—80.
3. In some persons per minute is varied from 50 — 60.
4. Rarly per minute is varied from 80. less than these considered not satisfactory. Pulsation much depends upon the strength or otherwise.
5. In healthy persons the rate varies from 60—75 (per minute).
6. In old persons from 65—80.
7. In foetus the rate is from 110—120.
8. In new born child is from 130—140.

NOTE:1. In healthy persons it is sometimes so low as 50 or so high as 90. The number of beats varies according to age. If in a man the rate is more than 120 his condition is critical, if it is more than 150 he is sure to die.

NOTE:2. For different kinds of Nadi see introduction to this book Vol-1 page 38.

நாடிநரம்பு, இரத்தக் குழலும் நரம்பும், blood vessels and nerves.

நாடிநாளம், செவ்விரத்தக் குழலும், காரிரத்தக் குழலும், artery and vein.

நாடிநிதானம், இரத்தவோட்ட நிலைமை, the state or condition of the circulation of blood in the arteries; 2. நாடியின் நிச்சயம், the certainty of pulse; 3. நாடி ஓட்டத்தின் ஆதிகாரணம், the elementary principles of pulsation.

நாடிநிலை, நாடியின் நிலைமை, the state of pulse.

நாடிநிறம், மூன்று வகை நாடிகளின் நிறம், அதாவது வாதம்- கருப்பு, சிவப்பு; பித்தம்- மஞ்சள், பச்சை; ஐயம்- வெள்ளை, the different colours of the three humours in the human body viz—Vatha (wind) black and red; Pitha (bile) yellow and green; Kapha (phlegm) white.

நாடிநூல், நாடி நிலைமையினால் உடம்பின் திரிதோஷ இலட்சணங்களைக் குறிக்கும் நூல், a treatise on pulse and pulsation referring to the three humours in the human system.

2. அகஸ்தியர் தமிழில் செய்த நாடியைப் பற்றிய ஓர் நூல், Agastiyar's work in Tamil on pulse and pulsation.
3. நாடிகளைப் பற்றிய விஞ்ஞான நூல், the science of arteries — Arteriology.
4. பொதுவாக நாடியைப் பற்றிக் கூறும் நூல்; the sum of what is known regarding the pulse — Sphygmology.

நாடிநோய், செவ்விரத்தக் குழல்களுக்கு ஏற்படும் நோய்கள், diseases of an artery or arteries — Arteriopathy.

நாடிநோவு, நரம்புவலி, pain in the nerve.

நாடிபடபடப்பு, நாடிதுரிதமாய் அடித்தல், frequency of pulse.

நாடிபதுங்கல்.

நாடிபத்திரம், ஓர்வகைச் சேம்பு, cocoa root — Colocasia antiquoram.

நாடிபத்து, see தசநாடி.

நாடிபயிலுதல், நாடி நூலிற் கூறியுள்ள தாதுக்குறிகளை நோயாளிகளிடம் கண்டு தேர்தல், undergoing the practical course in pulse by examining patients directly.

நாடிப்பார்த்தல், நாடியின் நிலையைப் பரிசோதித்தல், தாது பார்த்தல், feeling the pulse; 2. நாடிக்குறியறிதல், ascertaining the symptoms by the indication of the pulse.

நாடிப்பார்த்தல், நோயாளிகளின் கையைப் பிடித்து நாடி நடையைச் சோதித்தல், examination of pulse of a patient.

நாடிபேதம், நாடியின் வேறுபாடு, variation in the beating of the pulse.

நாடிப்பஞ்சை, செவ்விரத்தக் குழலின் சுவர் பஞ்சு போல் மெதுவடைதல், abnormal softness of arterial coats — Arterio malacia.

நாடிப்பயிற்சி, தாது அறியும் அறிவு, practice of feeling the pulse and knowing its indications.

நாடிப்பரிட்சை, நாடியைச் சோதித்தல் அதாவது நோயாளியின் வலது அல்லது இடது கையைப் பிடித்து நெட்டை வாங்கி அனல் பிறக்கத் தேய்த்து, பெருவிரல் பக்கமாக ஆரையெலும்பின் மேலோடும் நாடியை மணிக் கட்டுக்கு ஓரங்குலம் மேலாக மூன்று விரல்களால் சமமாக மெதுவாக அழுத்தியும் விரல்களை மாறிமாறி

அழுத்தியும், தளர்த்தியும் பார்த்து, பின்நாடி நடையின் முறை கிரமமாக விருக்கிறதா வெனத் தெளிதல், நோயின் மாறுபாடுகளையும், விருத்தி யையும்; நாடிப் பரிசோதனை யினால் அறிய வேண்டும், அதுதான் தகுந்தமுறை. ஆகவே, மணிக்கட்டு மேலோடும், நாடிக்குழல் தான் நாடி நடையை கிரமமாகக் காட்டும், கைபிடித்து நாடிபார்க்கும் போது வைத்தியன் நாடியின் அழுத்தமும் விரைவும் கிரமமும் மற்றுமுண்டான வேறுவித இலட்சணங் களையும் விரல்களில் காணப்படும் உணர்ச்சியைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்; ஆட்காட்டி விரல் உணர்வது வாதம், நடுவிரல் உணர்வது பித்தம்; மோதிரவிரலில் உணர்வது ஐயம்; பலவித நாடி ஓட்டங்களாவன, 1. எலி வாலைப் போல குறைந்து கொண்டே போகும் நாடி; 2. எறும்பூருவதைப் போல் அறியக்கூடாத நாடி; 3. வெள்ளாடு துள்ளுவதைப் போல் துள்ளக்கூடிய நாடி; 4. எழும்பியும், அழுந்தியும் காணப்படும் நாடி, examination of the pulse and the method adopted by physicians is as follows: He should get hold of the patient's right hand if male and left hand if female stretch the knuckles to cause a crackling noise and rub the hand, over and over again till warmth is produced. To feel the pulse in the right hand, he must use his left hand, and to feel the pulse in the left hand the right hand must be used. In feeling the pulse, he had to touch with the tips of his middle three fingers — ring finger, middle finger and forefinger, the radial artery just about one inch above the wrist in such a way that the forefinger, remains nearest to the wrist, and the ring finger further from the wrist, then press gently with equal pressure and relax alternately until he satisfices as to the regularity of the pulse or other wise. The space between the two adjoing tips of the fingers must be about

half a centimeter. He must be able to appreciate the rise of the pulse wave under each finger simultaneously and learn their proportious pulse felt by the distal finger — forefinger is Vatham, by the middle finger is Pitham, by the proximal finger — ring finger is Kapham. He can also note if there is retrograde pulsation. He must be able to learn the rate of the pulse, rhythm indicating whether the beats are equidistant or not and tension. The approximate measure of the systolic pressure. It is determined by nothing the amount of pressure required to obliterate the pulse wave. Examination of pulse is of great clinical importance. From it not only the condition of the heart of the arteries the extent of blood pressure, but the cause of the disease, the present condition of the disease and the disease itself can be known.

The different kinds of pulsations best described by Galen the great physician of Greecc are as follows: 1. Sharptailed pulse — so called as it sinks progressively and becames smaller and smaller like a mouses tail — Pulses myurus; 2. Ant-like pulse being scarcely perceptible like the motion of the ant — Pulsus formicans; 3. Goat leap pulse as it seems to leap like a goat — Pulsus dercadisans; 4. Undulating pulse—Pulsus fluctuosus.

நாடிப்பிடிப்பு, இரத்தக் குழாய்க்கு ஏற்படும் தடதடப்பு, sudden movements caused by spasm to blood vessels — Vasospasam.

நாடிப்புண், நரம்புச்சிலந்தி,see நாடி விரணம்; 2. இரத்தக் குழல்களுக்கு ஏற்படும் புண், local lesions found on the walls of the arteries.

நாடிப்பேதாபேதம், நாடிநடையின் வித்தியாசம், variations in the beatings of the pulse.

நாடிப்போக்கு, இரத்தக் குழல் களுக்குண்டாகும் அலை யைப் போன்ற அலைவு, movements like waves of the blood vessels especially arteries — Pulse wave.

நாடிமண்டலம், நரம்பு மண்டலம், nervous region; 2. நிரட்சம், (in Astronomony) terrestrial equator equinoetial; 3. ஆகாசச் சக்கரம், celestial equator; 4. See நாடித்தனித்தலம்.

நாடிமர்மம், ஓர் விரணநோய், an ulcer.

நாடிமூங்கில், குழாய் மூங்கில், hallow bamboo — Bambusa arundinacea;

நாடிமூன்று, இடகலை, பிங்கலை, சுழிமுனை, which see; 2. வாத பித்த, ஐயம் அல்லது கபம், Vatha, Pitha, Kapha pulses.

நாடியடங்கல், நாடித்துடிப்பு குறைவுபடல் sinking of the pulse; 2. ஓர் மரணக்குறி, a death symptom.

நாடியடித்தல், நாடியோடல், beating of the pulse — Pulsation.

நாடியந்திரம், குழாவைப் போன்ற யந்திரக்கருவிகள், tubular cylinderical instruments like syringe etc; 2. நாடி நடையைப் பரிசோதிக்கும் யந்திரம், an instrument for finding out the movements and force of the arterial pulse — Sphygmograph.

நாடியழற்சி, see நாடித்தபம்; 2. இரத்தக்குழலுக்கு ஏற்படும் தாபிதம், inflammation of an artery — Arteritis.

நாடியளவு, நாடிநடையின் வேகத்தினளவு, அதாவது வாதம் 1. பித்தம் 1/2, ஐயம் 1/4 இவ்வளவே யிருக்கில் உடம்பில் நோயில்லை எனக் கொள்ளப்படும், இதற்குத் தான் சமநிலை யென்று சொல்லப்படும், Vatham, Pitham and Kapham in normal state must be in the proportion of 1: 1/2:1/4 any difference in the proportion indicates disease.

நாடியாதீதம் நாடியளவு மீறித் துடித்தல், pulse which is faster in rate than normal — frequent pulse.

நாடியிங்கு, கம்பிலிப்பிசின், cumby resin tree — Gardenia gummifera.

நாடியியக்கம், நாடிநடை, beating of the pulse.

நாடியியங்கல், நாடிநடத்தல், movement of the pulse found in any one of the ten centres in the body.

நாடியியங்குமிடம், நாடி நடையைத் தெரிந்து கொள்ளும் உடம்பிலுள்ள 10 இடங்கள், அதாவது மணிக்கட்டு, குதிகால், கழுத்து, கைம்மூலம் முதலியன, pulse beat centres in the human body as wrist, heel, neck, ellow etc., see நாடித்தனித்தலம்.

நாடியிரைச்சல், இரத்தக் குழல்களில் உண்டாகும் ஒலி, arterial murmur.

நாடியிலக்கணம், பொதுவாக நாடியைப் பற்றியும் நாடிநடையைப் பற்றியும் கூறும் நூல், the sum of what is known regarding the arteries, the science or study of the arteries — Arteriology.

நாடியுதைத்தல், முன்னாக எழும்பிய நாடி பிறகு எழும்பிய மட்டத்திற்கு வந்து சேர்தல், pulse springing and then rebounding or receding to the original position.

நாடியுப்பு, வளையலுப்பு, which see.

நாடியேற்றம், see நாடியாதீதம்.

நாடியோடுக்கம், தாது விழல், waning or sinking of the pulse; 2. இரத்தக் குழலின் ஒடுக்கம், narrowing of the lumen of arteries and capillaries.

நாடியோடல், see நாடியோட்டம்.

நாடியோடுதல், நாடியியங்குதல்.

நாடிரம், செவ்விரத்தக் குழாய்க் கேற்படும் அழற்சி, inflammation of the artery, see நாடித்தபம்.

நாடிராவம், நாடியிரைச்சல், which see.

நாடிவகை, see introduction pages 37 and 38. Vol-1.

நாடிவலுத்தல், மெலிந்த நாடிநடை மீண்டும் பழைய நடையைப் பெறுதல், waning pulse becoming improved in its movements and resumes its original force.

நாடிவிசை, நாடி நடையின் வேகம், the rapidity of the pulse.

நாடிவிதி, நாடி திட்டம் அறிவிக்கும் நூல், science of pulse.

நாடிவித்திரதி, செவ்விரத்தக் குழாயின் புரைகள் விரிந்து கட்டியைப்போற் காணப் படும் ஓர் நோய், இது ஓர் அபாயகரமான நோயெனக் கொள்ளப்படும்; இதனால் வலி, மயக்கம் பாரிசவாயு முதலிய குணங்கள் உண்டாகும், as abscess like formation due to the dilatation of the walls of an artery marked by pain, giddiness, paralysis etc. It is a dangerous ailment.

நாடிவிரணம், ஆயுள்வேதப்படி சீழ் கொண்டு வீங்கிய கட்டியைக் கவனிக்காது முழுதும் சீழ்கொள்ளும்படி விட்டு அதனால் புரையோடி அனேக கண்களைவிடும், சீழ் வெளிவர அனேக துவாரங் களை யுண்டாக்குவதால் இதற்கிப் பெயர். இதனால் சுரம், எரிச்சல், மேல் மூச்சு, வாயுவரல், மூர்ச்சை முதலிய குணங்களேற்படும். இத்த கைய பயங்கர நிலைமை ஆவிகொள்ளும் தன்மையதே என்று கருதப்படும். (In Ayurveda) an abscess in which the pus or swelling burrows into the affected part, if the patient neglects it in its fully supurated stage. It is so called owing to the presence of a large number of receses or cavities in its side. It is attended with fever, burning sensation, difficulty in breathing, dryness of the mouth and syncope. An attack of this type should be regarded as dreadful and fatal casting around the gloom of death.

நாடிவிரணம், குழிவிரணம், deep seated ulcer, or abscess; 2. நரம்புச் சிலந்தி, guinea worm; 3. உட்டுளையேற்பட்ட பௌத்திரம். fistula; 4. புரையோடிய புண், sore with a sinus; 5. புரையோடிய கட்டி, abscess with a sinus or sinuses; 6. நரம்புகளில்

உண்டாகும் கட்டி, abscess of the arteries or other vessels.

நாடிவிரிதல், செவ்விரத்தக் குழலின் சுவர் விரிந்து காணல், distension of an artery.

நாடிவிழுதல், see நாடி ஒடுங்கல்.

நாடிவிழுதல், தாதுவின் ஒடுக்கம், sinking of the pulse.

நாடிவேகம், நாடி நடையின் துரிதம், rapidity of pulse.

நாடீகம், ஓர் வகை சேம்பு, see நாடிபத்திரம்.

நாடீமர்மம், see நாடிமர்மம்.

நாடு, உள்ளூர், referring to our country as opposed to சீமை foreign as for example நாட்டுச் சர்க்கரை x சீமைச்சர்க்கரை indigenous or country sugar x foreign sugar or white sugar.

2. பூண்டின் முதற்பெயர், plants first term as நாட்டு வாதுமைக்கொட்டை, country almond.

3. உள்நாடு, as opposed to வெளிநாடு as country liquor as opposed foreign liquor.

4. விளைவுநிலம், agricultural land or rural tract as opposed to forest tract (உ-ம்) நாடுபடுதிரவியம், country products as opposed to காடுபடுதிரவியம், forest products as honey sandal, teak etc.

5. நிலம், land as opposed to கடல், sea (உ-ம்) நாடுபடு திரவியம், products of land as opposed to கடல் படுதிரவியம், products of sea as fish, salt. coral etc.

6. ஊர், city as opposed to மலை mountain or hill (உ-ம்) ஊர்க்குருவி x மலைக்குருவி.

NOTE:- It is a term generally indicating Indian as opposed to English or European. It also means country in the oblique form.

நாடுபடுதிரவியம், 1. செந்நெல்; 2. செவ்விளநீர்; 3. சிறுபயறு; 4. கரும்பு; 5. வாழை, country products red paddy red tender cocoanut. green gram, sugarcane; and plantain, These five are important products of the country.

நாடோடித்தனம், வீட்டில் தங்காது ஊர்சுற்றும் பிரியமேற் கொள்ளும் ஓர் வகைப்பித்து, a morbid dislike of home life but with a desire or mania for wandering — Apodemialgia.

நாட்காலம், விடியற் காலம், early morning.

நாட்குணம், நறுங்குறிஞ்சி, conchead — Stobilanthus genus.

நாட்கூறு, முற்பகல், fore noon.

நாட்சோறு, காலை உணவு, morning meal.

நாட்டகத்தி, அகத்தி, West Indian sesbane — Sesbania grandiflora as opposed to சீமையகத்தி foreign agatti — Cassia alata.

நாட்டக்றோட்டு, வங்காளத்தில் விளையும் அக்ரோட்டுக் கொட்டை, இதன் பருப்பு தின்பதற்குதவும். இதினின்று எண்ணெய் எடுத்து விளக் கெரிப்பார்கள். பிண்ணாக்கு எருவாகக் கொள்ளப்படும், Bengal wall nut — Aleuritis triloba alias A. mollucaua, Kernels are eaten and oil extracted is used for burning lamps. oil cake is used as a manure.

நாட்டமிலி, குருடன், blind man.

நாட்டமைதி, ஊரில் நோயின்மை, state free from epidemics.

நாட்டம், கண், eye; 2. விருப்பம், desire, liking.

நாட்டவரை, அவரை, country bean as opposed to சீமை அவரை, French beans.

நாட்டா, (நாட்டு+ஆ) ஊர்ப்பசு, country cow as opposed to காட்டுப்பசு, wild cow or சீமைப்பசு, foreign cow.

நாட்டாமணக்கு, ஆமணக்கு, Castor oil plant — Ricinus communis as opposed to காட்டாமணக்கு, common physic nut — Jatropha cureas;

சீமையாமணக்கு, foreign castor J.montana; மலை யாமணக்கு, hill physic nut — J.multifida.

நாட்டாரஞ்சி, நாட்டுக்கிச்சிலி, country orange — Citrus aurantium as opposed to காட்டுக்கிச்சிலி, wild orange or lime — Atlantia monophylla.

நாட்டாவாரை, ஆவாரை, tanner's senna — Cassia ariculata as opposed to மலையாவாரை அல்லது காட்டாவரை, six leaved senna — Cassia tomentosa;2. பேயாவாரை, wild cassia — Cassia occidentalis, சீமையாவாரை, Sumitra senna — Cassia siamia.

நாட்டிகம், வெண்முத்துச் சோளம், white guinea wheat — Zesmays.

நாட்டிஞ்சி, இஞ்சி, Ginger — Zingiber officinale as opposed to காட்டிஞ்சி, wild ginger — Z.capitulum.

நாட்டியெடுத்தல்.

நாட்டிலந்தை, இலந்தை, Indian plum — Zizyphus jujuba as opposed to காட்டிலந்தை, jungle jujube — Z.rugosa.

நாட்டிலவு, இலவு, silk cotton — Bombox mallabaricum as opposed to காட்டிலவு, falsetraganth — Cochlospermum gossypium.

நாட்டிலுப்பை, இலுப்பை, mahwa of S.India — Bassia longifolia as opposed to காட்டிலுப்பை, forest or wild mahwa — Bassia latifolia alias Carysophyllum Rox burghii. It is distinguished from சீமையிலுப்பை, mohwah — Achras sapota.

நாட்டுருள்ளி, see நாட்டு வெங்காயம்.

நாட்டு, ஊருக்குரிய relating or referring to country; 2. சுதேசிய indigenous as opposed to பரதேசத்திய foreign.

நாட்டு அக்ரோட்டு, நாட்டக் ரோட்டு, இம்மரம் வெகு அழகாகவிருக்கும், தென்னிந் தியாவில் அனேக பிரதேசங்களில் காணலாம், இது கோடைகாலத்தில் செழித்துப் புட்பிக்கும். இதன் கொட்டையிலிருந்து ஓர்வித எண்ணெய் எடுக்கலாம். இதற்கு ஆமணக்கு எண்ணெ யைவிட விசேஷக் குணம் உண்டு, குமட்டல், வயிற்று வலி முதலான குற்றங்க ளில்லாமலே உடம்பைக் குளிரும்படி செய்யும், It is a large and hand-some tree, In S.India it is found grown in several provinces. It flowers in the rainy season. From the nut is extracted a large proportion of fixed oil which is pronounced to be superior to castor oil. Its medical properties will be found that it acts as a mild and sure purgative being unattended either by nausea, or colic and other ill effects. It cools the system.

NOTE: It is distinguished from English walnut or European walnut tree — Juglaus regia and white walnut — Juglaus cinerea.

நாட்டு அதிமதுரம், அதிமதுரம், country liquorice, Indian liquorice — Glycirrhiza glabra, see அதிமதுரம். It is distinguished from English liquorice root cultivated in England.

நாட்டுஅதிவிடயம், அதிவிடயம், which see.

நாட்டுஅமுக்கார கிழங்கு, அசுவகந்தி, as opposed to சீமை அமுக்காரக் கிழங்கு, withania somnifera.

நாட்டுஇரேவேல்சின்னி, see நாட்டுமஞ்சட்சீனக் கிழங்கு.

நாட்டுஈச்சை, சாதாரண ஈச்சமரம், common date — Phoenix dactylifera as opposed to காட்டீச்சை, wild date — Phoenix sylvestris.

நாட்டுஊமத்தை, ஊமத்தை, Indian datura in comparison with Europe datura — Datura stramonium cultivated in Britain.

நாட்டுஎரிவண்டு, எரிவண்டு, Telimifly — Indian cantharides — Mylabris chicarii in comparison with Blister beetle or Spanish fly collected in

II-41

Russia. Sicily and chiefly in Hungry.

நாட்டுக்கஞ்சா, Indian hemp as distinguished from Canadian hemp — Apocynum cannabinum.

நாட்டுக்கடலை, கடலை, Bengal gram — Cicer aurictinum as opposed to காட்டுக்கடலை, wild Bengal gram — Mulua rotundifolia.

நாட்டுக்கடுகு, கடுகு, mustard — Brassia juncea as opposed to காட்டுக்கடுகு, wild mustard and சீமைக்கடுகு, black mustard.

நாட்டுக்கடுகு ரோகனி, கருப்புக்கடுகு ரோகனி, black hellebore — Helleborus niger compared with the English white hellebore — Helleborus foetidus.

நாட்டுக்கடுக்காய், கடுக்காய், Indian gall nut — Terminalia chebula as compared with white gall nut from which, gallic acid and tannic acid are prepared in Europe.

நாட்டுக்கத்தரி, கத்தரிக்காய், common brinjal as opposed to காட்டுக்கத்திரி, wild brinjal — Capparis sepiaria.

நாட்டுக்கதலி, நாட்டுவாழை.

நாட்டுக்கந்தம், பேராமுட்டி, fragrant pavonia — Pavonia odorata.

நாட்டுக்கமுகு, கமுகு, areca nut palm — Areca catechu as opposed to காட்டுக்கமுகு, Ceylon betel palm — Areca concinna.

நாட்டுக்கரு, ஐங்காய மெழுகு, a medicine prepared from the foetus by a secret process and used in magic; 2. வழலையின் பெயர், salt found on the soil of fuller's earth.

நாட்டுக்கருணை, கருணைக் கிழங்கு, elephant foot yam — Typhonium trilobatum alias T. orixeuse as opposed to காட்டுக்கருணை, forest kachvu and மலைக்கருணை, mountain elephant yam — Amorpho phallus campanulatus.

நாட்டுக்கருவா, கருவாப்பட்டை, country cinnamum as opposed to காட்டுகருவா, wild cinnamum — Cinnamomum wightis.

நாட்டுக்கருவாழை, ஓர்வகை வாழை,a kind of country plantain.

நாட்டுக்கருவேல், கருவேல், black babool, Indian gum — Acacia arabica distinguished from சீமைவேல், black wattle - Acacia decurrens or Australian black wood — Acacia melanoxylon.

நாட்டுக்கல்நார், see கல்நார், as distinguished from சீமைக்கல்நார், a fibrous mineral substance — Asbestos which is in combustible.

நாட்டுக்கறிவேப்பிலை, சாதாரண கறிவேப்பிலை, curry leaf tree — Murraya Koenigii as opposed to காட்டுக்கறிவேப்பிலை, common shruby wampee tree — Clausena indica.

நாட்டுக்கற்பூரஇலை, கற்பூர இலை, camphor leaf as opposed to சீமைக்கற்பூர இலை, sagetea plant — Salvia genus.

நாட்டுக்கற்பூரவல்லி, கற்பூரவல்லி, country lavender — Lavendula carnosa as opposed to சீமைகற்பூரவல்லி, common lavender — Lavendula veera.

நாட்டுக்கற்றாழை, கற்றாழை, Indian aloe — Aloe vera (typica)as opposed to சீமைக்கற்றாழை, foreign aloe or fetid aloe — Foureroya gigantea.

நாட்டுக்கிச்சிலி, உள்ளூர்க் கிச்சிலி,Indian country orange as distinguished from வெளியூர்க் கிச்சிலி, one of foreign countries as Ceylon Portugal, Batavia, China etc.

நாட்டுக்கிச்சிலிக் கிழங்கு கற்பூரக்கிச்சிலிக் கிழங்கு, orange root — curcuma zeoloaria as opposed to சீமை or சீனக்கிச்சிலிக் கிழங்கு, camphor zedoary Hedycharum coronarium.

நாட்டுக்கிளுவை, கிளுவை, Indian balsam tree — Balsmodendron berriyi as opposed to மலைக்கிளுவை, hill balsam — Protium caudatum.

நாட்டுக்கீழாநெல்லி, feather foil — Phyllanthus poly phyllum as opposed to காட்டுக் கீழாநெல்லி, forest feather foil — P.reticulatis.

நாட்டுக்கெந்தி, கௌரி பாஷாணம், a kind of prepared arsenic — yellow oxide of arsenic.

நாட்டுக்கொடி முந்திரிகை, கொடிமுந்திரிகை, common grape vine — Vitis vinifera as opposed to காட்டுக் கொடி முந்திரிகை, jungle grape vine — Vitis latifolia.

நாட்டுக்கொட்டைக்களா, கொட்டைக்களா, Sweet thorn — Flacourtia rammtchi as opposed to சீமைக் கொட்டைக்களா, Ceylon sweet thorn — F.inermis.

நாட்டுக்கொய்யா, கொய்யாப் பழம், common country guava — Pisidium guava (pyriferum) as opposed to காட்டுக்கொய்யா, wild guava of Ceylon — Myrtus canescens or சீமைக்கொய்யா — Chinese guava — Psidium cattleyianum.

நாட்டுக்கொழுஞ்சி, சிறுகிச்சிலி, small orange — Glycomis penta phylla compared with சீனக்கொழுஞ்சி, musk lime — Triphasia trifoliata.

நாட்டுக்கொன்றை, சரக் கொன்றை, common cassia—Cassia fistula as opposed to காட்டுக் கொன்றை, wild kondray — Pithecolobium bigeminum.

நாட்டுச்சடாமாஞ்சி, சடாமாஞ்சி, Indian spikenard — Nardostachya jatamansi as compared with விளைத்தி சடாமாஞ்சி, foreign spikenard — Patrinia jatamansi.

நாட்டுச்சடாமாஞ்சி வெண்ணெய், தலைமயிர் வளரவும், நரைத்தமயிர் கருப்பாகவும் உபயோகிக்கு மெண்ணெய், இது சடாமாஞ்சிலோடு மற்றச் சரக்குகளையும்

சேர்த்துத் தயாரிக்கும் எண்ணெய், a medicated oil prepared from valerian root as a chief ingredient along with other drugs for luxuriant growth of hair and for turning grey hair into black.

நாட்டுச்சணச்சி, பேய்த்தும்பை, Leucus linifolia.

நாட்டுச்சண்பகம், சண்பகம், golden champak — Michelia nilagirica as opposed காட்டுச்சண்பகம், white champak — Michelia genus.

நாட்டுச்சதகுப்பை, சதகுப்பை, dill plant — Anethum sowa distinguished from சீமைச் சதகுப்பை, dill plant — Anethum gravelons cultivated in England and middle Europe, and opposed to சதகுப்பிசிக்களவன் which is காட்டுச்சதகுப்பை, a wild plant akin to common dill — Anethum graveolens.

நாட்டுச் சந்தனம், சிவப்பு சந்தனம், red sandal wood — Pterocarpus santalinus; 2. வெண்சந்தனம், white sandal wood — Santalinum album as opposed to காட்டுச் சந்தனம், bastard sandal — Erythroxyon monoxynum.

நாட்டுச்சரக்கு, உள்ளூர்ச் சரக்கு,country produce as opposed to வெளியூர்ச்சரக்கு, foreign produce.

நாட்டுச்சர்க்கரை, உள்ளூர் கரும்பினின்று காய்ச்சி யெடுக்கும் சிவப்பு சருக்கரை, இது மருந்துகளுக்கு உதவும், Indigenous country brown sugar, prepared from sugarcane, it is useful in Medicine as vehicle, and to prepare some medicines as syrups, electuary etc; 2. சுத்தி செய்த வெள்ளைச் சருக்கரை, white sugar purified from brown sugar. It is distinct from சீனி or சீமைச் சருக்கரை which is beet root sugar imported from foreign countries.

நாட்டுச் சர்க்கரை வள்ளி, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, sweet potato — Ipomaea batatas as opposed to மலைச்சக்கரை வள்ளி, mountain sweet potata

— Manihot utilissimia, இதுவே ஆள்வள்ளிக் கிழங்கு, Tapioca plant.

நாட்டுச்சலம், கீழ் பூமித்தண்ணீர், water of low level countries as distinguished from மேல்பூமிசலம் அதாவது சுனைநீர், மலைநீர், water of high land countries as mountain water or hill water.

நாட்டுச்சவுக்காரம், உழமண், fuller's earth; 2. சுண்ணாம்புச் சவுக்காரம், country soap — Soap indica. It is opposed to சீமைச்சவுக்காரம், soap imported from Europe.

நாட்டுச்சவுண்டல், தகரை, பெருந்தகரை, west Indian bead tree — Leucena glanea.

நாட்டுச்சாதிக்காய், ஊரில் பயிராகும் சாதிக்காய், common nutmeg cultivated in countries — Myristica fragrans alias M.aromatica. It is distinct from காட்டுச் சாதிக்காய், wild nut meg Myristica laurifolia and from மலைசாதிக்காய், ... malabarica.

நாட்டுச்சாமந்தி, சாதாரண சாமந்தி, Indian chamomile —Chrysanthemum indicum as opposed to சீமை சாமந்தி, Europe chamomile — Anthemis nobilis and காட்டுச் சாமந்தி, wild chamomile — Matricuria chamomile.

நாட்டுச்சாம்பல், சம்பு, common jamoon — Eugenia jambulina as compared with காட்டுச் சாம்பல் or சம்பு, water jaumoona — Eugenia munronii.

நாட்டுச் சாம்பிராணி, குந்துருக்கம் பிசின், Indian olibanum, Indian frankincense — Boswellia serrata alias B.glabra. It is quite different from மலாக்கா சாம்பிராணி. Mallaca benzoin (Eastern Archipelago) — Styrox benzoin.

நாட்டுச்சாரி, சுடலையாவாரை a kind of senna — Cassia genus.

நாட்டுச்சேவல், உயர்தரமில்லாச் சேவல், country cock.

நாட்டுச்சிமிக்கி, சிமிக்கி, passion flower — Passiflora buonapartea as opposed to மலைச்சிமிக்கி, mountain passion flower — P.leschenaulties.

நாட்டுச்சிவதை, சிவதை, Indian Rhubarb Indian jalap Ipomea turpethun as opposed to சீமைச்சிவதை, Rhubarb root — Rheum officinal.

நாட்டுச்சீயக்காய், நல்ல சீயக்காய், soap pod tree — Acacia concinna as opposed to காட்டுச்சீயக்காய், sensitive tree Mimosa rubicaulis.

நாட்டுச்சீரகம், சீரகம், common cumin — Cuminum cyminum as opposed to காட்டுச் சீரகம், wild cumin — Vernonia anthelmintica.

நாட்டுச்சீரகவல்லி, சீரகவல்லி, common yam — Dioscorea sativa as opposed to காட்டுச் சீரகவல்லி, prickly yam — Dioscorea pentaphylla.

நாட்டுச்சீனி, சிவப்புச் சர்க்கரை, brown sugar See நாட்டுச்சருக்கரை.

நாட்டுச்சுண்டெலி, வீட்டுச் சுண்டெலி, common mouse as opposed to காட்டுச் சுண்டெலி, forest mouse, Musrodentia used in unani medicine.

நாட்டுச்சுண்டை, சுண்டை, unarmed night shade — Solanum pubescens as opposed to காட்டுச் சுண்டை or மலைச்சுண்டை, wild brinjal — Solanum verbacifolium alias S.torvum.

நாட்டுச்சுரை, பெருஞ்சுரை, large bottle gourd as opposed to காட்டுச்சுரை, false calabash — Cucurbita lagenarius.

நாட்டுச் சேங்கொட்டை, பெரிய சேரான் கொட்டை, glabrous marking nut — Semicarpus anacardium (typica) as opposed to காட்டுச் சேரான், jungle marking nut — Holigarna arnottiana or தேன்சேங் கொட்டை, Malabar marking nut Semicarpus travancorica.

நாட்டுச்சோளம், சோளம், great millet — Sorghum vulgare as opposed to காட்டுச் சோளம், wild cholum — Lantana indica.

நாட்டுத்தமரத்தை, *தமரத்தை*, coramandal goose berry — Averrhoa carombola as opposed to *காட்டுத்தமரத்தை*, hill carombola — Avorrhoa genus.

நாட்டுத்தாமரை, *நீர்த்தாமரை*, Lotus — Nelumbium speciosum as opposed to *காட்டுத்தாமரை*, wild lotus and *மலைத் தாமரை*, hill lotus Similax macro phylla.

நாட்டுத்துவரை, *துவரை*, common dholl — Cajanus indicus as opposed to *காட்டுத் துவரை*, jungle dholl — Atylosia candollei.

நாட்டுத்துளசி, *துளசி*, holy basil — Ocimum sanctum as opposed to *காட்டுத்துளசி*, wild basil — Ocimum adscendens.

நாட்டுத்தேவதாரி, *தேவதாரி*, Deccany deodar — Erythroxylon monogynum as opposed to *சீமை தேவதாரி*, English deodar Pinus longifolia.

நாட்டுத்தேன், *ஊரில் கிடைக்கும் தேன்*, country honey collected in town as opposed to *காட்டுத் தேன்*, honey collected in the forests.

நாட்டு நவாச்சாரம், *தமிழ்வைப்பு முறைப்படி தயாரிக்கும் நவாச்சாரம்*, salammoniac prepared according to Tamil pharmaceutical method as distinguished from *சீமை நவாச்சாரம்*, the one prepared by English method.

நாட்டு நன்னாரி, *நன்னாரி*, country sarsaparilla Hermi desmus indicus as opposed to *சீமை நன்னாரி*, Jamaica sarsaperilla.

நாட்டு நாரத்தை, *நாரத்தை*, bitter orange — Citrus aurantium distinct from *காட்டு நாரத்தை*, wild bitter orange — Atlantia monophylla.

நாட்டுநாவல், *நாவல்*, jaumoon — Eugenia jamboo as opposed to *காட்டுநாவல்*, wild jaumoon — E. acquea and *மலைநாவல்*, black plum Eugenia caryophyllum.

நாட்டு நிலவாகை, see *நாட்டு நிலாவிரை*.

நாட்டு நிலாவரை, see *நாட்டாவாரை*.

நாட்டு நிலாவிரை, *நிலாவிரை*, Tinnevelly Senna — Cassia lanceolata alias Cassia angustifolia as compared with *சீமை நிலாவிரை*, foreign senna — Cassia acutefolia.

நாட்டு நூக்கு, *சாதாரணநூக்கு*, Indian black wood — Dalbergia latifolia as opposed to *சீமை நூக்கு*, West Indies Mahogany — Soymiah mahogany.

நாட்டுநொச்சி, *நொச்சி*, five leaved chaste tree — Vitex negundo as opposed to *காட்டுநொச்சி*, tall chaste tree — Vitex altissima.

நாட்டுப்பஞ்சு, see *நாட்டுப் பருத்தி*.

நாட்டுப் பயறு, *பயிரிட்டப்பயறு*, cultivated green pulse as opposed to *காட்டுப்பயறு*, pulse growing in forests of its own without cultivation.

நாட்டுப்பருத்தி, *பருத்தி*, country cotton — Indian cotton — Gossypium herbaceum as opposed to *காட்டுப்பருத்தி அல்லது மலைப்பருத்தி*, golden silk cotton — Cochlospermum gossypium and *சீமைப்பருத்தி*— Barbadoss cottón — Gossypium berbadense.

நாட்டுப்பலா, *ஊர்ப்பலா*, common jack — Artocarpus integrifolia as opposed to *சீமைப்பலா*, foreign jack — Artocarpus incisa and also *காட்டுப்பலா*, wild jack — A.hirsuta and *மலைப்பலா*, mountain jack — Navelea purpurea.

நாட்டுப்பன்றி, *ஊர்ப்பன்றி*, country pig as distinguished from *காட்டுப்பன்றி*, wild boar or *வெள்ளைப்பன்றி*, white pig (English pig).

நாட்டுப்பாதாம், see *நாட்டு வாதுமை*.

நாட்டுப் பிரண்டை, *பிரண்டை*, adamant creeper — Vitis quardrangularis as opposed to *காட்டுப்பிரண்டை*, Iguana's foot vine — Vitispedata.

நாட்டுப்பிராய், *பிராய்*, demon tree — Streblus as per as opposed

to காட்டுப்பிராய், elliptic leaved mercury — Coelodepas calycinum.

நாட்டுப் புகையிலை, புகையிலை, tobacco — Nicotiana tobacum as opposed to காட்டுப் புகையிலை, wild tobacco — Lobelia nicotianafolia.

நாட்டுப்புளி, புளி, tamarind, Tamarindus indica as opposed to காட்டுப்புளி, Manilla tamarind — Pithecolobium dulce and மலைப்புளி, hill tamarind — Garcinia Xanthochymus.

நாட்டுப்புறா, வீட்டுப்புறா, home pigeon — Columba livia as opposed to மலைப்புறா, rock pigeon — Columba intermedia and காட்டுப்புறா, wood pigeon — C.haviala.

நாட்டுப்பூரா, நாட்டுச்சருக்கரை, see நாட்டுச்சீனி.

நாட்டுப்பூவரசு, பூவரசு, portia tree — Thespesia papulnea as opposed to காட்டுப்பூவரசு, false fern tree — Filicium decipicus.

நாட்டுப்பூனை, வீட்டுப்பூனை, cat as opposed to காட்டுப்பூனை, wild cat.

நாட்டுப்பேய்ப்புடல், see நாட்டு மாதரை, as opposed to காட்டுப் பேய்ப்புடல், forest devil gourd — Trichosanthes lacinosia.

நாட்டுப் பைத்தியம், எப்பொ ழுதும் ஊரிலிலேயே வசிக்க மனங்கொள்ளல், a mania for living in the country — Citymania as opposed to காட்டுப் பைத்தியம், எப் பொழுதும் தனித்துக் காட்டிலேயே வசிக்க மனங் கொள்ளல், insane passion for solitude — Agromania.

நாட்டுமகிழம், மகிழம்பூ, ilanji — Mimusops elengi as opposed to சீமை மகிழம்பூ, foreign ilanji — Sydoroxylon incrine.

நாட்டுமஞ்சள் சீனக்கிழங்கு, இது ருஷியா, சீனம் துர்க்கி இவ்விடங்களில் விளையும், இந்தியாவில் விளைவது அவ்வளவு சிறந்ததல்ல, ஆகவே இப்பெயர், இதன்

பச்சைவேரில் புளிச்சத்தும், சுண்ணாம்புச் சத்தும், உண்டு. கசப்பும் ஓர் விதமான வாசனையும், வாய்ந்தது, இதற்கு துவர்ப்புக் குணமுள் ளதால் பேதியாகும் குணம் குறைவாகவே யிருக்கும். ஆகவே, இது மலபந்தம், பாண்டுரோகம் உடைய வர்களுக்கும், கர்ப்பிணி களுக்கும் சிறந்தது, பிரசவப் பெண்கள், குழந்தைகளின் மலபந்தம், பெண்களின் சோகை, சூலைப்பிடிப்பு, இவைகளுக்கு மிகச் சிறந்தது, பழைய மலத்தை வெளி யாக்கி மலத்தைக் கட்டி விடும், இதை தனியாக வாவது மற்றச் சரக்குகளுடன் சேர்த்தாவது குன்மத்திற்குக் கொடுப்பதுண்டு. இதற்கு மற்ற விரேசன மருந்து களைப்போல் வேக மில்லாமல் அமைதியான குணமுண்டென்பதே ஒரு சிறந்த வித்தியாசம், வழக்கமாகவே மலபந்தம், உடையவர்கள் மற்ற பேதிமருந்துடன் கலந்து சாப்பிடுவது உத்தமம். Indian rhubarb — Rheum emodi. It is less active than that grown in China. Turkey and Russia and hence its name. In fresh root oxalic acid exists in the juice and crystals of oxalate of lime give gritliness to the roots. The dried roots taste bitter and faintly astringent and aromatic with a peculiar odour So it is primarily a mild and efficient cathartic and secondarily astringent. It is generally prescribed in constipation, dropsy and also for pregnant women. In the puerperal state of women, in the constipation of, children, anemic females and gouty subjects it is especially recommended owing to the mildness in its operation. It proves highly useful in diarrhoea depending upon the presence of crude and irritating ingesta. In some forms of dyspepsia it is a remedy of great value either alone or combined with other drugs or agents. It differs from many cathartics is not causing irritation of the alimentary

canal. If prescribed in cases of habitual constipation, it should be combined with some other laxative.

NOTE: 1. It is also called Himalayan rhubarb. The root or this plant in the elevated portion of the Himalayas. There are two principal varieties. The large one — Rheum emodi, occurs in twisted and cylenderical pieces of various sizes and shapes. It is of a dark brown colour, feeble odour and bitter astringent taste and the powder of a dull brownish yellow colour. The small variety — Rheum webbianum, consists of short transverse segments of the root branches and is of a dark brownish colour, odourless, with a bitter astringent taste. Both varieties are liable to considerable variation in physical characters. The indigenous rhubarb procured in the bazaars is an inferior variety and is not so good as the Chinese or Turkey rhubarb.

NOTE: 2.Rhubarb acts as a stomachic and slight astringent in small doses, as a purgative in large doses. Its purgative action is generally followed by constipation dependant on its astringent constituents. In consequence of its purgative properties, it is often used at the commencement of diarrhoea depending on the presence of irritent matter in the canal which is thus expelled and the subsequent astringent effect proves very valuable. It is frequently combined with magnesia when given to children. In scrofulous children, it is sometimes useful, if combined with a mercurial alterative aiding and giving tone to the digestive organs. Externally it is applied to indolent ulcers Hakeems use this more often than the Vaidyans. The peioles are used in cooking.

நாட்டுமஞ்சள் சீனக்கிழங்கு, see இரேவல் சீன்னிக்கிழங்கு.

நாட்டுமண், செம்மண், red ochre.

நாட்டுமந்தாரை, மந்தாரை, mountain ebony — Bauhini a varigata as opposed to காட்டு மந்தாரை, wild mountain ebony — B.tomentosa.

நாட்டுமரவட்டை, ஓர்வகை அட்டை, இது கடித்தால் உடம்பில் தடித்துப் பொடி சிரங்குகள் எழும்பும், wood louse. Its fluid is poisonous and so its bite gives rise to elevated swelling patches — Scabilis.

நாட்டுமருக்காரை, மருக்காரை, common emetic nut — Randia dumetorum as opposed to மலை மருக்காரை, hill emetic nut — Randia candolleana.

நாட்டுமல்லிகை, மல்லிகை, jasmine — Jasminum sambuc as opposed to காட்டுமல்லிகை wild jasmine — J.angustifolium and மலை மல்லிகை, tree jasmine — Millingtonia hortensis.

நாட்டுமாசிபத்திரி, மாசிபத்திரி, Indian alsinth — Artemesia vulgaris, Madras absinth — A madra patana as opposed to English absinth — Artemesia absinthium. Both are useful as stimulent and powerful bitter tonic. See மாசிபத்திரி.

நாட்டுமாதரை, பேய்ப்புடல், devil's gourd — Trichosanthes cucumerina. See நாட்டுப் பேய்ப்புடல்.

நாட்டுமாதளை, மாதளை, common pomegranate — Punica granatum as opposed to சீமை மாதளை,common guince — Cydonia vulgaris.

நாட்டுமிளகாய், மிளகாய், common chilly — Capsicum fruitescens as opposed to சீமை மிளகாய். Nephane chilly c f nepalense.

நாட்டுமிளகு, மிளகு, common black pepper — Piper nigrum as opposed to காட்டு மிளகு, wild black pepper — Piper sylvestore.

நாட்டுமீன், குளம் அல்லது ஆற்றுமீன், fresh water fish — Trout as opposed to கடல்மீன், sea fish.

நாட்டுமுள்ளங்கி, முள்ளங்கி, country radish — Rappanus sativus as opposed to காட்டு முள்ளங்கி, forest country radish — Sonchus oleraceous.

நாட்டுமுயல், முயல், hare as opposed to காட்டுமுயல், jungle hare — Oddicnemus crepitaus.

நாட்டுமுருங்கை, முருங்கை, country horse radish — Hyperinthera moringa as opposed to காட்டுமுருங்கை, jungle moringa — Ormocarpum sennoides.

நாட்டுமூங்கில், குழாய் மூங்கில், hollow country bamboo as opposed to காட்டு மூங்கில், stone bamboo or solid bamboo.

நாட்டுரூமிமஸ்தகி, பூனைக்கண் குங்கிலியம், mastich tree Pistacia lentiscus. It is a resinous exudation from the tree. see பூனைக்கண் குங்கிலியம்.

நாட்டுரேவல்சின்னி, see நாட்டுமஞ்சட் சீனக்கிழங்கு.

நாட்டுரோஜா, வங்காள அல்லது சீனரோஜா Bengal or China rose — Rosa indica.

நாட்டுவசம்பு, வசம்பு, sweet flag — Acorus calamus as opposed to மலைவசம்பு, mountain sweet flag — Costus speciosus.

நாட்டுவள்ளி, சர்க்கரை வள்ளி, sweet potato — Ipomea batatus as opposed to காட்டுவள்ளி, Goa potato — Dioscorea aculeata.

நாட்டுவறியாள், பெருங்குறிஞ்சா, vomitting swallow root — Secamone emetica.

நாட்டுவாகை, வாகை, common sirissia — Albizzia lebbek as opposed to காட்டுவாகை, jungle sirissa — Acacia lebbek and மலைவாகை, hill sirissa — Albizzia procera and சீமைவாகை, rain tree —Enterolobium saman.

நாட்டுவாதுமை மரம், இது மலாக்கா மரமாயிருந்தாலும் இந்தியாவில் எங்கும் விளையும், இம்மரம், உயரம் 50 அடி, இலைகள் கிளைகளை ஒட்டியிருக்கும், காம்புகள் சிறியன, பூக்களும் சிறியவை, மங்கலான வெண்மை, இதன் கொட்டை தித்திப்பு, பாதாம் கொட்டையைப் போலிருக்கும். பருப்பினின்று பாதிக்கு மேலாகவே எண்ணெய் எடுக்கலாம். இவ்வெண்ணெயைப் பாதாம் எண்ணெய்க்குச் சமமாகவே சொல்லலாம்; இதை நாட்பட வைத்திருந்தால் காறலடிக்கும், இதன் பட்டை, இலை பல்லுக்குச் சாயமேற்றவுதவும், இதன் பருப்பைப் பாதாம் பருப்பைப் போல் தின்னலாம். It is Molucean cultivated all over India. Country almound — Terminalia catappa. Tree 50ft. leaves about the extremities of the branchlets, short petioled, flowers small, dull white, the nut is almost the same as sweet almond. The kernel yields more than 50% of pure bland oil similar to sweet almond oil. It is apt to become turbid by keeping long; the root and bark are used to dye teeth.

நாட்டுவாழை, நாட்டுக்கதலி, வாழை, common plantain — Musa paradisiaca as opposed to காட்டு வாழை, wild plantain — Musa superba

நாட்டு வாதுமை, வாதாமரம் country almond — Terminalia catappa as opposed to சீமை வாதுமை, sweet almond — Amygdala communis alias A. dulcis of S.Europe and Persia.

நாட்டுவாறிகம், நெருஞ்சில், caltropes — Tribulus terrestris.

நாட்டுவெண்டை, வெண்டை, lady's finger — Hibiscus esculants as opposed to காட்டு வெண்டை wild musk mallow — Hibiscus ficulneus and மலை வெண்டை, hill rose mallow — Hibiscus collinus.

நாட்டுவெள்ளரி, முள் வெள்ளரி, common ucumber — Cucumis sativus.

நாட்டுவேங்கை, வேங்கை, common kinotree — Pterocarpus marsupium as opposed to மலைவேங்கை அல்லது முள்வேங்கை spinous kino tree — Bridelia retusa.

நாட்டுவேம்பு, வேம்பு,country or common margosa — Azadirracta asindica opposed to மலைவேம்பு, hill neem — Melia composita சீமைவேம்பு, foreign neem — Melia azaderach.

நாட்டுவேல், வேலமரம், common babool — Acacia genus as opposed to காட்டுவேல், umbrella thorn babool — Acacia plani frons or சீமைவேல் அல்லது பரங்கிவேல், foreign solah — Parkisona acubaata.

நாட்டுவைத்தியம், உள்நாட்டுக் குரிய ஆயுள் வேதம் அல்லது சித்த வைத்தியம் அல்லது யூனானி முறைகளைக் கொண்டு செய்யும் வைத்தியம், practice of indegenous systems of medicine as Siddha, Ayurveda and Unani as opposed to சீமை வைத்தியம் Allopathic medicine.

நாட்டுவைத்தியன், உள்நாட்டு வைத்தியன் Native physician as apposed to சீமை வைத்தியன், English doctor.

நாட்டெரிவண்டு, கொப்பளிக்கச் செய்யும் ஓர் வண்டு, telinifly.

நாட்டையலைத்தான்,

நாட்டோட்டரிசி வெள்ளைப் பூண்டு, garlic/.

நாட்பட்ட கழிச்சல், கிராணி — chronic diarrhoea.

நாட்பட்ட சரக்கு, சத்து நீங்கிய சரக்கு, an old drug without effect.

நாட்பட்டநோய், தீராத நோய் long standing or chronic disease.

நாட்பழக்கம், தினப்பழக்கம், daily practice.

நாட்பு, வலிமை, strength.

நாட்பூ, அப்போது மலர்ந்த பூ, flower blossmed a fresh.

நாட்போது, see நாட்பூ.

நாணங்கப்புல், கஸ்தூரி நாறிப்புல், musk grass.

நாணமாலை, தேரையர் செய்த ஓர் வைத்திய நூல், a medical treatise by Teraiyar.

நாணயத்தங்கம், செம்பிட்டு, காசடிப்பதற்கு தகுதியான பொன், gold suitable to mint coins with a proportionate quantity of copper.

நாணல், நாணற்புல், buffalo reed — Saccharam spontanoum. It is generally found grown on banks of rivers and hedges; 2. பெருநாணல், large reed — Phragmites karka; 3. எழுதும் நாணல், pen reed grass — S.amndinaceum.

நாணல்தட்டை, நாணற்புல்லின் அடித்தண்டு, the stalk of reed grass.

நாணவந்தான், புதரில் வசிக்கும் ஓர் வகை மைனாப் பறவை, a maina bird frequenting bush — Bush maina — Maina cristatelloides. see நாகண வாய்ப்புள்.

நாணற்கரும்பு, ஓர் வகைத் தட்டைக் கரும்பு, இதன் இரசத்தால் வமனம், வயிற்று நோய், அதிதூலம், இரைப்பு, பாண்டு சாந்தமாகும். reedy sugar cane — Saccharum amndinaceum — its juice alleviates vomitting, stomach ache, anemia, obesity and athma.

நாணற்குளம், நாணற்கற்கண்டு, sugar candy prepared from reeds.

நாணற்கோரைக்கட்டை, clansena indica.

நாணற்புதர், reed grass bush.

நாணற்புல், நாணல், which see.

நாணற்பூ, பழுத்தவெள்ளை நிறமான நாணற்பூ, the yellowish white flower of reed grass figuratively used for grey hairs.

நாணற்றாது, pollen grains of the reed grass.

நாணாங்கள்ளி, see நாணுக்கள்ளி, 2. இலைக்கள்ளி, leaf spurage — Euphorbia nirulia.

நாணி, தொடை நரம்பு, nerve of the thigh.

II-42

நாணுக்கள்ளி, குதிரைச் செவிக்கள்ளி, a kind of hedge spurge the leaves of which resemble the ears of the horse, horse's ear kalli — Euphorbia genus.

நாணுகம், குதிரை, horse; 2. நறுஞ்சோந்தி which see.

நாணுவத்தான், see நாணுவம்.

நாணுவம், see நாகணவாய்ப்புள், maina bird, a bird called Martinho in Portugal — Gracula tristis.

நாணுவான், see நாணுவம்.

நாணொளிப்புளி, ஓர்வகைப் புளியமரம், a kind of tamarind — Tamarindus (genus).

நாண், தேள், scorpion; 2. தலைச்சுருளிவேர், root of Indian birth wort — Aristolochia indica.

நாண்மலர், see நாட்பூ.

நாண்முதல், அதிகாலை,dawn of the day.

நாதகம், பூரகம், inhalation; 2. சினைப்பை, ovary.

நாதகலை, தொனிச்சவ்வு, the membrane of the larynx.

நாதகிங்கணம், வெள்ளெருக்கு, white flowered giant swallow wort — Calotropis gigantea (albiflora).

நாதகுருத்தைலம், அகஸ்தியர் கல்லாடத்தில் சொல்லியுள்ள ஓர்வகைக் குழித்தைலம், a medicated oil prepared by the process described in the Tamil medical work — Kalladam — by the Saint Agastya.

நாதகோதகம், கர்ப்ப கோளாறினால் ஏற்படும் காமாலை; jaundice arising from disorder in pregnancy — ovarian dropsy.

நாதகோளச்சூல், நாதகோளம், கருக்கொள்ளல், ovarian pregnancy.

நாதகோளத்தபம், சினைப்பையின் அழற்சி, inflammation of the ovary — Ovaritis.

நாதகோளம், சினைப்பைக் கோளம், the female sexual gland in which the ova are formed — Ovary.

நாதக்கரு, மஞ்சட்கரு, yolk.

நாதக்கல், மாக்கல், pot stone which is soft and of a grey bluish colour; 2. வெள்ளைக்கல், white stone referring to guartz.

நாதக்குடம், சங்கு, chank or konch.

நாதக்குமிழ், நாதாசயத்தின் கோளத்தில் அடங்கியுள்ள சினைப்பை, the small sac holding the ovum in the ovary — Grafian vesicle.

நாதக்குவடு, செம்புமலை, mountain containg copper ore.

நாதக்குழல், நாதம் கருப்பப் பைக்குச் செல்லும் பாதை, oviduct — fallopian tube.

நாதக்குழல், பெண்களின் சினைப் பைகளுக்கும், கருப்பப் பை யின் மேல் முனைக்கும் இடையே பக்கத்துக் கொன் றாக அன்னதாரையைப் போல் நீண்டவுறுப்பு இது 2,3 அங்குல நீளமுள்ளது. see நாதக்குழல்கள்.

நாதக்குழல்கர்ப்பம், கருப்பையில் ஏற்படாது நாதக்குழலில் உண் டாகும் கர்ப்பம், pregnancy or gestation taking place with in an oviduct or failopian tube — Tubal pregnancy. See நாகோதர கருப்பம்.

நாதக்குழல்கள், 2,3 அங்குல நீளம் கூபகத்தின் குறுக்காய்ச் செல்லச் செல்லப் பருத்துப் பாம்பைப் போலாகி, இதன் முனைகள் அந்தரத்தில் அசைந்து கொண்டிருக்கும், நாதாசயத்திற்கும், கருப் பாசயத்திற்கு மிடையே யுள்ளவை. muscular tubes 2 or 3 inches long running across the pelvis. They become larger and more serpentine in their course. The extremities float loosely in the pelvis. They are the media of communication between the uterns and the ovaries — Fallopian tubes.

நாதக்குழற்குஞ்சம், நாதக் குழாயின் சுருக்கங்களுடைய ஓரம், fringes of the fallopian tube — Fimbria.

நாதக்குளம்,சுரோணிதம் தங்கும் தடாகம், அதாவது யோனி, Vagina — the seat of reservoir of the menstrual blood.

நாதக்கோளங்கள், சினையடங்கியுள்ள கோளங்கள், egg glands.

நாதங்கட்டுதல், பெண்களின் நாதம் சீர்குலைதல், மரவிழிக் கிழங்கைப் பாலில் அரைத் துண்ண கட்டிப்போகும், காமம் அதிகரிக்கும், நாவில் அமுதமூறும்.

நாரியர்பால், see நாரிபால்.

நாரிரோகம், பொதுவாக பெண்களுக்கு ஏற்படும் நோய்கள், diseases in common of a female, diseases peculiar to women.

நாரிவலி, see நாரிக்குத்து.

நாரிவல்லபம், ஞாழல், which see.

நாரிவிரசு, see நாய் நறுவிலி.

நாரிவெருட்டி, புலிநகக்கொன்றை, a species of cassia tree with branches and petioles, armed with recurved prickles like tiger's claws — Caesalpinia

ligulata; 2. நன்னாரி வேர், root of Indian sarsaparilla.

நாரிவேர், சென்னநாரி, which see.

நாரீசம், பிண்ணாக்குச் செடி, pat fibre — Corchorus capsularis.

நாருடும்பை, ஓர்வகை உடும்பை மரம், sage leaved Indian linden tree — Gravia salvifolia.

நாருபுன்னம், சொற்பனம், dream.

நாரை, கொக்கைப் போன்ற ஓர் நீர்வாழ் பறவை, இது மீன்களைத் தின்று வளரும், இப்பட்சியைச் சுட்டுத் தின்பதுண்டு, இது அடியிற் கண்டபடி பல வகைப் படும். crane, heron, It is classified under ibis genus. It lives on fish and serves as human food. There are several varieties viz:-

1. கரு நாரை, black heron or ibis — Germticus papullasis.
2. பெரு நாரை, large heron or ibis — Gragulus carbo.
3. செங்கால் நாரை, felicon ibis — Tantalus gangeticus.
4. வெள்ளை நாரை, white heron or ibis — Ibis macci.
5. நத்தைக்குத்தி நாரை, Shell ibis — Anastomas osciteus.
6. நெடலை நாரை,
7. சாம்பான் நாரை, pariah heron — Herodias alba.
8. அகத்திப்பூ நாரை, crested heron.
9. கொய்யடி நாரை,
10. குருட்டு நாரை, blind heron — Ardeola leucopetra.
11. கரண்டி மூக்கு நாரை, spoon bill ibis — Platalea leucorodia.
12. கருமூக்கு நாரை, black bill heron — Herodias garzetta.
13. சிறு நாரை, small cormorant — Graculus javanica.

நாரை, நாரைப்புள் பொது, stork, crane in common — Ardea niveda; 2. ஓர்விதப் பசு, a kind of cow.

நாரைப்பசு, ஓர் பசு, a kind of cow.

நாரைப்பசும்பால், நாரை என்னும் ஓர் வகைச் சாதி பசுவின் பால், the milk of a species of cow known as 'Narai'.

நாரைப்பதி,

நாரைமூலி, see நற்கள்ளி and அழுகண்ணி, இது ஒரு பூடு.

NOTE: due to research by R.Kumarasami M.A.it is identified as a carnivoras plant — Drosera peltata.

நாரொடுப்பை, நார் + ஒடுப்பை, ஒடுப்பை = ஒடுவை.

நார், நாரிழை, fibres of any sort; 2. கல்நார், Indian asbestos; 3. நாற்றம், stink offensive smell; 4. மேற்றோல், rind; 5. அழுகல், decay, rotteness; 6. தூக்கம், (பரிபாஷை) sleep; 7. நார்க்கயறு, string, rope.

நார், சாதாரணமாய் தாவரம், தாது முதலிய வஸ்துக்களினின்று மயிரிழையைப் போலும் நூலைப் போலும், பிரித் தெடுக்கும் வஸ்து, ஆகவே இது அடியிற் கண்டபடி பலவகைப் படும். பலவகை யாகவும் உபயோகப்படும், a fine slender substance which is separated or extracted from the constituent part of plants, animals minerals etc. resembling any fine hair or slender thread. Fibre, filament. It consists of various kinds as mentioned and their uses are many vegetable fibres:

1. சணல் நார், hemp fibres from which fine ropes and strings are made.
2. பூண்டு நார், plant fibres.
3. காய்கறி நார், vegetable fibres used for making fine flexible strings etc.
4. பட்டை நார், bark fibres.
5. தேங்காய் நார், cocoanut fibre used for mattres, and used to get materials for cordage etc.
6. வித்து நார், seed fibres.
7. கற்றாழை நார், aloe fibres for manufacturing threads.
8. முள்ளி நார், nettle fibres.
9. பருத்தி நார், cotton fibres for making cloths — Yarn.
10. வாழை நார், plantain fibres used to plait flowers.
11. எருக்கு நார், madar fibres to make waist thread for infants.
12. செம்புளிச்சை நார், fibre of red sorrel — Hibiscus subdariffa.
13. வக்கை நார்.

நார்வகை, (in Physiology) Fibre is an elongated thread like structure of organic tissue animal fibres

1. நரம்பு நார், nerve fibre.
2. உப நார், accessory fibre.
3. தசை அல்லது நரம்பிணைக்கும் நார், anastomaic fibre

4. மூளை இடை நார், commisural fibres.

5. மயிர் நார், hair fibres.

6. பாவை நார், lens fibre.

7. பாசி நார், moss fibre.

8. தசை நார், muscle fibre.

NOTE:- The above are the principal fibres obtained from the indigenous plants of S.India. Besides there are many miscellanious substances from which fibres are extracted by different methods from barks, stems, leaves, stalk, seeds etc.

நார்வகை சம்பந்தத் தசை, சம்பந்தத்தசையின் நார், connective tissue fibre.

நார்ச்சிலந்தி, ஓர்வகைப் புழு, a worm; 2. நரம்பு நார்ச்சிலந்தி ஓர் விரணநோய், a disease.

நார்த்தங்குருவி, ஓர் வகைக் குருவி, a kind of sparrow.

நார்த்தந்தகரை, பேயாவரை, occidental cassia — Cassia occidentalis.

நார்ப்பூடு, நன்னாரி, which see.

நார்மூலம், நார் உற்பத்திக்கு காரணமாயிருப்பது, the elementary substance forming the basis of the structure of a fibre.

நார்வகை, நார்த்தொகுதியின் கிரமம், fibre system; 2. நார்களின் பேதங்கள், the differences in their structure.

நார்வெண்டி, ஓர் வெண்டி, kydia calycina.

நார்வேர், நெல், கம்பு, சோளம், பயிர்களின் வேர், the root of the green crops as poddy millet etc; 2. நாரோடு கூடிய வேர், fibrous roots of plants.

நாலம், தாமரை முதலிய பூவின் காம்பு, pedicles of flowers like lotus.

நாலறிவுயிர், நண்டு, வண்டு முதலியன, animals with four senses.

நாலாங்காண்டம், கொடி மாதுளை, lemon citron — Citrus medica (limoni — medica).

நாலாங்காய்ச்சலுப்பு, நான்குதரம் காய்ச்சித்தெளிவிறுத்த வெடியுப்பு, nitre boiled and filtered four times i.e. four times purified nitre; 2. நான்குமாத கருப் பிண்டத்தை பனிக்குடத்து நீர்விட்டு நான்கு தரம் எரித்து

வடிகட்டி தெளிவிறுத்த ஓர்வகைப் பிண்டவுப்பு, a salt prepared from four months foetus by boiling it with amiotic fluid four times and filtering the same.

நாலாங்காய்ச்சல், நான்குதரம் காய்ச்சி எடுத்தது, that which is boiled and filtered four times; 2. வெடியுப்பு, nitre.

நாலாட்டுயா படிலம், ஏலரிசி, cardamon seeds.

நாலாதிசிலம் மேல் பூமிசலம் water from the hills and mountains above the sea level.

நாலாமாறல், நான்காமுறைக் காய்ச்சல், a form of malarial fever which causes the paroxysm to recur every third day — Quartan fever. It is infitrated into bones and as such is considered very dangerous as it often terminates fatally.

நாலாமுறைக் காய்ச்சல், see நாலாமாறல்.

நாலாவிததட்சணி, தலைச்சுருளி, flame flower — Gloriosa superba.

நாலி, கார்த்திகைக் கிழங்கு அல்லது பூ; root or floor of November flower plant — Gloriosa superba 2. முத்து, pearl; 3. தகரை. ring worm plant — Cassia tora.

நாலிகம், எருமை, buffalo;2. தாமரை, lotus; 3. காக்கை, crow.

நாலிகாடி, காட்டாமணக்கு purging nut, physic nut — Jatropha curcus.

நாலிகை, மூங்கில், bamboo

நாலிக்கம், தராபித்தளைதகடு, alloy of copper and spelter.

நாலிலைப்புன்னை, நான்கு இதழ் களுடைய புன்னை, four leaved poon, rhomb leaved poon — Calophyllum trapezifolium.

நாலிலைப்பைரவி, சதையொட்டி, a plant consisting of four leaves said to have the virtue of uniting the fleshy portions in the human system.

நாலிலொன்றாய்க் காய்ச்சல், கஷாயங்களை நாலில் ஒரு பங்காகும்படி சுண்டக் காய்ச்சல், boiling down any decoction to one fourth of its original quantity.

நாலிவாடி, கருங்குளவி, black beetle or wasp.

நாலுகண்சட்டி, அடியில் நான்கு துவாரமிட்ட மண்சட்டி, an earthern ware or pot with four holes underneath.

நாலுகண்மீன், சாதாரணமாக இரண்டு கண்ணும், வாலுக்கு முன்பக்கத்தில் பக்க மொன்றுக்கு ஒவ்வொரு பெரிய கண்ணைப் போன்ற புள்ளிகளும் அமையப் பெற்ற ஓர் வகை காக்கை சேல் மீன், a kind of sea fish of carp family ;with two dark eye marks on the lateral line of the tail and along with the two natural eyes — Crow carp — Chae todon meaulatus.

நாலுகாற்பாய்ச்சல், இரண்டு காலினாலும், இரண்டு கையினாலும் தவழ்ந்து செல்லுதல், man walking like a quadruped with his two hands on the ground.

நாலுகாற்பிராணி, நான்கு கால்களையுடைய மிருகம், four footed animal — Qudruped.

நாலுகாற் புணர்ச்சி, மிருகங் களைப்போற் பெண்களுடன் சம்போகித்தல், இது 64 லீலைகளி லொன்று, having sexual union with females like qudripeds. It is one of the 64 postures described in the Erotic Science of Kokkogamuni — See பசு கரணம்.

நாலுசாதிப் பூ, see நால்வகைப் பூ, (கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப் பூ, நிலப்பூ), four varieties of flowers.

நாலுசாதிப் பெண், கொக்கோகத்திற் சொல்லியுள்ள நான்கு வகைச் சாதிப்பெண்கள், அதாவது பத்மினி, சங்கினி, சித்தினி, அத்தினி, four kinds of woman classified according to their lust and described in the Erotic Science by Kokkogamuni.

நாலுசீலைமண் செய்தல், மருந்துப் பாண்டங்களைப் புடமிடு வதற்குமுன் 4 தரம் சீலையால் சுற்றி மண் பூசுதல், luting the medicinal pots four times with clay and piece of cloth before subjecting it to calcination.

நாலுதல், கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கல், suicidal hanging.

நாலுதலையிலை, see நாலிலைப் புன்னை.

நாலுநாள் வட்டம், நாலுநாள் சுற்று, a cycle of four days.

நாலுவித்தை, தமிழ் சித்தர் நூலிற் சொல்லியுள்ள வாதம், வைத்தியம், யோகம், ஞானம் அல்லது 1. வாதம், 2. வசியம், 3. மாற்றம், 4. அஞ்சனம், the four kinds of arts or magic such as Alchemy, Medicine, Yoga and wisdom or Alchemy, magical enchantment, transformation and cyrstal gazing.

நாலைங்கள்ளி, இலைக்கள்ளி, leafy spurge — euphorbia neirii folia.

நாலொன்றாக்கல், see நாலொன்றாய்க் காய்ச்சல்.

நாலொன்றாய்க் காய்ச்சல், நான்கு பங்கை ஒரு பங்காகும்படி காய்ச்சுதல், boiling down to 1/4 ofthe original quantity.

நாலோடகம், ஆடாதொடை, Malabar winter cherry — Adhatoda vesica.

நால், பிரம்பு, cane.

நால்கண்ணடி, கோரோசனை, cow's bezoar.

நால்சாதிக்கரு, See நால்சாதி விஷக்கல்.

நால்சாதிப்பூ, see நாலுவகைப்பூ.

நால்சாதிவிஷக்கல், நான்குவகைச் சாதிப்பெண்களின் கருப் பிண்டம், the foetuses of four kinds of women divided according to their lust as referred to in the Tamil Erotic Science.

நால்தலையன், கரிக்குருவி, black bird.

நால்மித்திரம், நான்குமித்துருச் சரக்குகள், அவையாவன, சாரம், வெண்ணெய், இந்துப்பு, மெழுகு, (in Alchemy) four friendly drugs viz—Salammoniac, butter, rock salt and wax.

நால்வகைப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ (நிலப்பூ) என நான்குவகைப் பூக்கள், the four kinds of flowers viz—flowers of creepers, 2.those of branches, 3. water flowers, 4. flowers of bushes and thicket.

நால்வகைப்பொன், ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூ நாதம், the four varieties of gold, 1. Adagam, 2. kilichirai, 3. Satharuppam, 4. Sambunatham.

நால்வகைமருந்து, 1. சல்லிய கரணி, 2. சந்தானக்கரணி, 3. சமனிய கரணி, 4. மிருதசஞ்சீவினி, four varieties of medicine.

நால்வகையுணவு, the four kinds of food; 1. உண்பன, that which is eaten; 2. தின்பன, which is nipped with teeth and masticated; 3. நக்குவன, which is licked; 4. பருகுவன, which is drunk.

நால்வகையோனி, நான்கு வித யோனிகள், the four varieties of vagina.

நால்வலங்கம், see நால் வெள்ளங்கு.

நால்வரோதயம், மணித்தக்காளி, black berried solanum — Solanum nigrum.

நால்வாய், யானை, elephant.

நால்வாசகி, சிறுவிழுதி, chilli fruit caper — Cadaba Indica.

நால்வெள்ளங்கு, கல்வெள்ளங்கு, bastard rosewood — Dabergia lanceolaria, See நல் வெள்ளங்கு.

நால்வேதியன், கல்லாரை, an unidentified creeeper of the Marsella genus found grown at the foot of the hills. It is said to be a rejuvenating plant used by Siddhars.

நாவகம், பாம்புக் கரணம், copulation of snakes.

நாவக்கலப்பூர்வசத்து, பலகல்லின் சத்து, essence of several kinds of stones.

நாவசிகரம், வில்வம், Indian bael — Aegle marmelos.

நாவச் சென்னை, செந்தினை, red italian millet.

நாவடக்கம், மருக்காரை, common emetic nut — Randia dumetorum; 2. மௌனம் சாதித்தல், pursuing silence; 3. நாக்கு ருசியை அடக்கல், suppressing the sense of taste; 4. நாவெழாமற் பண்ணுதல், renrendering one incapable of moving the tongue through sorcery.

நாவடங்கணம், தேத்தான் கொட்டை, water clearing nut — Strychnos potatorum.

நாவடமஞ்சள், திகைப்பூச்சி, a hypnotic insect inducting in men when treated upon, perplexity of mind.

நாவடிக்கோளம், நாக்கின் அடிபா கத்திலுள்ள சிலேட்டும கோளங்கள், the smallest of the salivary glands placed beneath the tongue on either side — Sublinguai gland.

நாவடைசலம், மேல்பூமி தண்ணீர், water of an elevated place as hill, mountain, plateau etc., which are above the sea level.

நாவடிவீக்கம், நாக்கினடி வீங்குதல், swelling below the tongue — Glossitis. If this assumes an intense form the tongue which swells and suppurates becomes paralysed.

நாவடைத்தல், பேசக்கூடாமை, being unable to speak.

நாவட்சரம், நாக்கில் சிறுசிறு கொப்புளங்கள் காணும் ஓர் நோய், a form of stomatitis characterised by shallow ulcers on the tongue — Ulcerative stomatitis.

நாவணம், உண்ணாக்கு, the pendulam of the palate — Uvula.

நாவதாரு, வீரம், corrosive sublimate or mercuric chloride.

நாவறட்சி, நாக்கு வறளல், parched ness of the tongue;2. தாகவிடாய், thirst for water.

நாவரணை, நாக்குப்புற்று, cancer of the tongue.

நாவரனை, see நாவரனை.

நாவறட்சிக்கஷாயம், வட்டத் திருப்பி, ஓமம், கருஞ் சீரகம், மிளகு, நிலப்பூச்சி, வசம்பு, நிலவேம்பு, இவைகளைச் சட்டியிலிட்டுக் கருக்கிக் காய்ச்சும், கஷாயம், இதனால் காய்ச்சலில் கண்ட தாகம் தீரும்.the above drugs are slightly fried, and a decoction is prepared as per rules. This is given to arrest thirst in fever.

நாவறட்சிக் காய்ச்சல், நாக்கை வறளச் செய்யுமோர் வகைக் காய்ச்சல், a kind of malarial fever marked by dryness of the tongue.

நாவவலர்க்காந்தம், சந்தி காந்தம், moon flower see நாகமுக்கொற்றி.

நாவல், நாவல்பழமரம், இதுவே நாகப்பழம், இம்மரம் விசால மாக அநேக விடங்களிற் தாணலாம்; மைதானம், தோப்பு வழிப் பாதை, இவ்விடங்களிற் சாதார ணமாய் விளையக் கூடியது. இம் மரம் 70 - 80 அடி உயரம், இலைகள் 3, 6 அங்குல நீளம், அண்டவடிவு, பூக்கள் சிறியன வெண்மை நிறம், மாசி பங்குனியில் பூக்கும்; 40 வருஷத்தில் பூரணமாய் விளையும்; பழம் சிறியது, ஊதா நிறம், துவர்ப்பு, பட்டைக்கும் இதே

குணம், பழம் மிருதுவாயும் பளபளப்பாயு மிருக்கும்; இதை நசுக்க கற்பூரவாசனை வரும்; இதை வாலையி லிறக்க பச்சை நிறமான எண்ணை யெடுக்கலாம்; இதன் பழத்தினின்று இறக்கிய காடி குடற் கோளாறைப் போக்கி, சீரண சக்தியை யுண்டாக்கும், நீரைவடிக்குங் குணமுண்டு. இதன் சாற்றை வாலுகையில் வைத்துச் சாம்பவும், இறக்குவதுண்டு, இப்பட்டையைத் தனியாக வாவது மற்றச் சரக்குகளோடு சேர்த்தாவது துவர்ப்புக் கஷாய மிறக்கி வாய்ப் புண்களை ஆற்றுவதற்கு, கொப்பளிக்கவும் கழுவு நீராகவும் உபயோகிப்ப துண்டு. இதன் பட்டைச் சாற்றை வெள்ளாட்டுப் பாலிற் கலந்து, குழந்தை களின் அதிசார பேதிக்குக் கொடுக்கலாம், பழத்தைத் தின்னலாம், பஞ்சகாலத்தில் கொட்டையையும் தின்ப துண்டு. இப்பழத்தை உப்பி லிட்டு ஒரு மணி நேரம் வைத்திருந்து பிறகு குலுக்கிச் சாப்பிட அதிக ருசியா யிருக்கும். மரத்தினின்று பிசின் எடுக்கலாம், அன்றியும் இப்பட்டையின் சாறு பாஷாணத்திற்கு சுருக்கு கொடுக்கவுதவும்.

மரம் முழுவதுக்குமே துவர்ப்புக் குணமுண்டு, இலையும், பட்டையும் வைத்தியத்திற் குதவும்; பட்டையைக் கஷாயமிட்டு அல்லது சூரணித்து, சீத பேதிக்கு கொடுப்பதுண்டு, பழக் கொட்டையைச் சூரணித்து நீரிழிவுக்குக் கொடுக்கலாம், கொட் டையை கஷாயமாக வைத்துக் காப்பியைப் போல் மது மூத்திர ரோகத்திற்கும், சூதகப் பெருக்கிற்கும் கொடுப்பதுண்டு. பழத்தி னின்ற சர்பத் செய்து குடிக்க பசியை யுண்டாக்கும்; அசீரண முதலிய வயிற்றுப் போக்குகளையும் நீக்கும்; இதன் புல்லுருவி இந்திரி யத்தைக் கட்டும், பட்டையை நிழலிலுலர்த்திச் சூரணித்து வயிற்றுளைச்சல், கிராணி, மூலம், கடும்பித்தம் முதலிய நோய்களுக்கு வெள்ளாட்டுப் பாலில் வெருகடிப்பிரமாணம் கொடுக்கலாம்; இச் சூரணத்தை இரத்தம் சொரிகின்ற புண்ணின் மேல் தூவ இரத்தம் நின்று ஆறச் செய்யும்; அன்றியும் இச் சூரணத்தைக் கருங்குருவை

அரிசி மாவுடன் சேர்த்து பிட்டவியலாக வேக வைத்து சர்க்கரைச் சேர்த்துச் சாப்பிடப் பெரும்பாடு இரத்தக்கழிச்சல் முதலியவைகள் போம், மேலும் வாயில் பிறக்கும் நோய்கள், இருமல், ஈளை பிள்ளைகளின் கிரக தோஷங் கள், வியங்கம், இலாஞ்சனம் என்னும் மச்சபேதங்கள் முதலி யவைகள் தீரும், இதன் வேரால் கரப்பான் புண், மச்சை மேகம் இவைகள் விலகும். பழம் தொண் டையைக் கட்டும்; கருப்பிணி களுக்குதவாது, இதன் கொட்டையை ஆடுதின்னாம் பாளை விட்டு அரைத்து மாத்திரைகளாகச் செய்து சாப்பிட மது மேகம் சாந்தமடையும், common jaumoon — Eugenia jambolina. This tree is found almost every where in abundance. It is grown in plains topes, avenues. The tree is 70, 80 ft. high, leaves 3-6 inches long oval shaped flowers small, white, flowering in March; it attains its full size in 40 years, fruits round and small, purple and astringent, kernel and bark are also astringent, fruits smooth and shining, when crushed it has a comphor odour and on distillation yields a bright green oil. A vinegar prepared from the juice of the ripe fruits is an agreeable stomachic, carminative, and diuretic, a sort of spirituous liquor called 'jambuva' is prepared by distillation from the juice, the bark is astringent and is used alone or in combination with other drugs of its class in the preparation of astringent decoction for gorgles and washes, the fresh juice of the bark is given with goats milk in diarrhoea of children; the expressed juice of the leaves is used alone or in combination with other astringents in dysentery. Fruit is eaten, in times of famine the kernels are also eaten, fruits well mixed with a small quantity of common salt and kept for an hour will be found much improved in taste, and prevents the increase of phlegm humour and cold which the fruit is liable to cause. The bark yields a good gum.

The whole tree has astringent properties; leaves and bark are used in Indian Medicine. The bark as a decoction or powder is used as an efficient astringent in dysentery. The kernel or stone

of the fruit is used as a remedy in diabeties; it is also powdered and used as a coffee for diabetes and menorrhaegia; the syrup prepared from the juice of the fruit is an effective remedy for promoting appetite, arresting motions from disorder of stomach. The parasite of the plant is said to arrest easy discharge of semen, the bark dried in the shade and powdered and mixed in goats milk is prescribed for diarrhoea, chronic dysentry, hemorrhoids etc; the powder when dusted over bleeding wounds arrests the bleeding and heals the wound; more over the said powder mixed with the flour of red rice *(காரரிசி)*and backed and eaten with brown sugar is found to be of great advantage in cases of menorrhaegia, hemorrhoides, aphthous diseases, cough asthma etc. It is also recommended in children's diseases due to Planetary influences and diseases of the skin marked by discoloured protuberances such as warts, moles etc; in the human body. The root of this tree is found to be useful in scabbies, eczema, diseases of the morrow of the bones etc. The stone in the fruit ground with the juice of the leaves of the ulcer plant (Aristolochia bracteata) and made into small pills is prescribed for diabetes mellitus.

The following are the different varieties:

நாவல் வகை:

1. சிறுநாவல், small jaumoon — Eugenia aruttiana alias, E. Rubicnnla.
2. பெரு நாவல், large fruited jaumoon — E.jambos.
3. சம்பு நாவல், Malacca jaumoon — Eugenia malaccensis.
4. வெண்ணாவல், white jamoon — Eugenia zeylanica alias E.hamisphericus.
5. கொட்டை நாவல், seed jaumoon — Eugenia jambolana.
6. நாட்டுசம்பு நாவல், country or malabar jaumoon — Eugenia malabarica.

7. நீர் நாவல், water jaumoon gardners black plum — Eugenia gardneri alias E.munronil.
8. சிவப்பு நாவல், red jaumoon— Eugenia aquea alias Jambosa aquea.
9. காட்டு நாவல், wild jaumoon — same as No.8.
10. மலை நாவல், clove like black plum — Eugenia caryophyllae.
11. கொர நாட்டு நாவல், coromandal jaumoon Eugenia bracteata.
12. ஜாவா நாவல், Java jaumoon — Eugenia javanica *(இதுவே குலாப்ஜாமு)*.
13. குழிநாவல், common myrtle — Myrtus communis.
14. நிழல் நாவல், கருநாவல்,same as No.16.
15. திப்பிலி நாவல், Indian mulberry — Morcas indica.
16. கரு நாவல், cherry jaumoon; cherry black plum — Eugenia opurculata.
17. கொடி நாவல்,
18. புளி நாவல்,
19. நரி நாவல்,
20. வெள்ளை நாவல், rose apple — Eugengia hemiospheric.
21. மலாக்கா நாவல்.
22. கரும்பு நாவல், black plum — Eugenia Rostrata.
23. ஈழத்து நாவல், Ceylon jaumoon — Eugenia zeylanica.
24. பூ நாவல், *(பூநாகை)* Nilgiri black plum — Eugenia montana.
25. பூமிஜம்பு நாவல், lowly jaumoon — See சிறு தேக்கு.
26. ஓரநாவல், alternate leaved black plum — Eugenia alternifolia.

NOTE:- 13, 15 and 25 come under different botanical group and as such they are of the species of நாவல், although they end with the same termination.

நாவல்நீர், நாவல் மரத்து வேரூறிய நீர், இதனால் கழிச்சல் நீரிழிவு நீங்கும்; ஐயம், சுரம், மந்தம் இவைப் பெருகும், உடற்குக் குளிர்ச்சியையும் ஆண்மையையும் தரும், water where in the root of the jaumoon tree is soaked. This cures diarrhoea and diabetes but causes fever, loss of appetite, and phlegm. It cools the body and gives manliness.

II-45

நாவழற்சி, see நாக்கழற்சி.

நாவழி, நாக்குவழிக்குங் கருவி, a blade for cleaning the tongue.

நாவழித்தல், நாக்கு வழித்தல், cleaning the tongue by scraping.

நாவழுக்கல், நாக்கில் மாசு படருதல், tongue being covered with a coat of pale matter; 2. நாக்குத் தவறல், slip of the tongue.

நாவழுக்கு, நாக்கின் மேலுண்டாகும் அல்லது படரும், வெள்ளை அல்லது மஞ்சள் நிறமான மாவைப் போன்ற அழுக்கு, the whitish or yellowish layer or coating on the surface of the tongue consisting of recently deposited matter or desquamated epithelium etc.

நாவழுவழுத்தல், நாக்கு வழவழப்பாயிருத்தல், a feeling of the tongue from mucous or slimy sceretion in the mouth owing to the irregular action of the liver.

நாவளநோக்கு, மட்சம், mole.

நாவளம், see தீவதாட்சி.

நாவறட்சி, நாக்குலர்வு, parchedness of the tongue; dryness of the mouth from lack of the normal secretion — Xerostomia; 2. தாகம், thirst.

நாவறட்சிக் காய்ச்சல், see நாவறட்சிக் காய்ச்சல்,

நாவறளுதல், நீர் விடாய்த்தல், feeling thirsty from dryness of the tongue.

நாவறளை, see நாப்புற்று.

நாவற்கோவை.

நாவாசீகம், சிற்றொடுவை, an unknown tree.

நாவாஞ்சகம், சிறுகாடை, common quail.

நாவாயெலும்பு, கைக்குழைச்சின் மேல் வரிசை யெலும்புகளில் ஒன்று. one of the bones in the proximal (upper) row of wrist — Scaphoid bone — the title due to its shape — boat shape (by C.D).

நாவாய்க்குழி, யோனியின் உதடுகள் விரிகிற உட்புறத்தே அடிப்பக்கமாகவிருக்கும் குழி, a groove or furrow seen on separating the labia between their inferior extremities, a boat shaped hollow or cavity behind the vaginal aperture — Fossa navicularis.

நாவி, ஓர் விஷவேர், aconite root, Aconitum ferox; 2. ஊமத்தை, dhatura plant — Datura

stramonium alias D. fastuosa; 3. கஸ்தூரி மிருகம், musk deer; 4. புனுகு பூனை, civet cat; 5. பச்சைக் கருப்பூரம், crude camphor; 6. கருநாபி, black aconite; 7. சவ்வாது, zibet.

நாவி, இதற்கே வடமொழியில் வசநாபியென்று பெயர், தமிழில் பச்சை நாவியென்றும் சொல்வதுண்டு, இது பச்சையாய் அகப்படுவது மிகவும் கஷ்டமும், அபூர்வமுமாகும். ஏனெனில் இது சாதாரணமாய் இமாலயத்திலும் அதன் சுற்றிலுமுள்ள விடங்களில் தானகப்படும்; இது ஓர் செடி, மேல்தண்டு 2-3 அடி உயரம், நேராகவுள்ளது, வேர்க்கிழங்கு 4 அங்குல நீளம், வெளிப்புறம் சிறிது கருப்பாகவும், உட்புறம் வெண்மையாயுமிருக்கும், கிளைகள் மொசு மொசுப்பு, இலைகள் ஐந்து பிரிவினையுடையன, பூக்கள் பெரியவை, நீலநிறம், வெண்மையோடு கூடிய சாம்பல் நிறம், இதழ்கள் சிறிது உள் வளைந்திருக்கும். பூமிக்கடியிலுள்ள சொர சொரப்பான வேர்க்கிழங்கு 3-4 அங்குல நீளம், 1/2 to அங்குல பருமன், கருப்பும் கபில நிறமும் கலப்பு, ஒடிக்கக் கூடியது. எளிதில் சூரணமாக்கலாம், இது வாசனையற்றதாயும், சிறிது கசப்பாயும், நாக்கில் விருவிருப் புண்டாகி, சுவர்ணையற்று, பார்வைக்கு வசம்பைப் போலிருக்கும், இதைப் பூச்சி அரிக்காதபடி பசுவின் மூத்திரத்தில் ஊறப்போட்டு எடுப்பதுண்டு, இக்கிழங்கை அரைத்துப் பூசவுதவும், விடாச் சுரங்களுக்கு இதை உள்ளுக்குக் கொடுக்கலாம், தேள்கடி, பாம்புக்கடி இவைகட்கு, பிராந்தி, சாராயம் முதலியவைகளில் இழைத்துத் தடவலாம். இது தாதுக்களின் கொதிப்பைத் தணிக்கும், அன்றியும் நோயைத் தணித்து தீட்சண வியாதிகளைச் சமனப் படுத்துந் தன்மையது. நமது நாட்டு வைத்தியர்கள் குட்டநோய்க்கும் உபயோகப் படுத்துவார்கள், இது சீமை நாபியை விட சக்தி வாய்ந்தது; மலை நாட்டார்கள் அம்பின் நுனியில் தடவவும், குளம், கேணி முதலியவைகளில் விஷம் கலக்கவும் உபயோகிப்பார்கள்; இவ்வேர்க் கிழங்கு அதிக விஷத்தன்மை பொருந்தியதால், உள்ளுக்குக் கொண்டாலும் அல்லது

இரணங்களுக்குப் பூசினாலும் மரணத்திற்கு ஏதுவாக்கும், தீராத வாத நோய்க்கும் இது உபயோகப்படும், இதை 10 வருஷத்திற்கு வைத்திருந்தாலும் இதன் விஷத்தன்மை மாறாது; இதைத் தனிப்பட உபயோகிக்கவே கூடாது; யூனானி வைத்தியர்கள் மற்ற சரக்குகளுடன் சேர்த்து வாந்தி, பேதி, முறை சுரம், பல்வலி, பாம்புகடி இவைகளுக்கு உபயோகிப்பார்கள், இதைக் கடையில் விற்பார்கள். நாட்டு வைத்தியர்கள் இதை சுத்தி செய்தே மருந்தில் சாக்கிரதையாக உபயோகிப்பார்கள். சன்னி பாதசுரம், பாண்டு, மகோதரம், வயிற்றுவலி, அஸ்தி சூடு, தலைநோய், பாம்புகடி இவைகளுக்குக் கொடுப்பதுண்டு. இதை பூசுந்தைலமாக நரம்புவலி, வாதப்பிடிப்பு, இவைகளுக்குபயோகிக்கக் குணத்தைத் தரும். இதைப் பாரிச வாயுவுக்கும் நரம்பு பல விருத்திக்கும் கொடுக்கலாம். ஆயுள்வேத வைத்தியர்கள் இத்துடன் மற்ற கடைச் சரக்குகளும் சேர்த்து மருந்துகள், தயாரித்து, சுரத்தினால் மூளையைப் பற்றிய கோளாறு களுக்கும், அசீரணம், பசியின்மை, தொண்டைக்கட்டு, இருமல், ஈளை, சரும வியாதிகளுக்கும் உபயோகிப்பார்கள்; இது அடியிற்கண்டபடி பல வகைப்படும், Indian aconite, Monk's hood, wolf's bane — Aconitum ferox. In Sanskrit it is known as poison root, and in Tamil green poison root. Green root can be found very rarely and with much difficulty for the reason. It grows only in the Himalayan regions. It is a plant, the stem of which is only 2-3 feet high, erect. The tuberous root 3,4 inches blackish outside and white inside, branches villus, leaves deeply five parted; flower large deep blue, hoary, petals slightly incurved. Simple tuberous roots 3,4 inches long and 1/2 — 2 inches in diameter; blackish brown, brittle readily reduced to a coarse powder, and in this state destitute of odour, slightly bitter to the taste, the tongue being subsequently benumbed wherever touched on, some what resembles the roots of sweet flag, it is steeped in cow's urine to preserve them from being eaten away by insects (the root is purified by steeping it in cows urine

for three days. (by C.D.)Roots much used medicinally as external application,being reduced to a paste and spread upon the skin (must be used only after purification). Internally is chiefly used for chronic intermittent fevers, used in large doses along with stimulants as brandy arrack in snake bites and scorpion stings. It is sedative, anodyne and antiphlogistic. Native doctors employ it in leprosy. This root is more powerful and potent than that of Europe, used in hilly districts for poisoning arrows and to poison tanks and wells. The root is highly poisonus and equally fatal whether taken internally or applied to wounds, it is used by Indian practitioners in cases of chronic rheumatism; by Unani doctors it is mixed with several other drugs and given for cholera, intermittent fevers, tooth ache, snake bites. The root maintains its effect even after ten years, it is never to be used singly (Alagalavisha thailam is prepared only with aconite and castrol oil and used externally for convulsions (by C.D,). It is comonly sold in bazaars. Native doctors are careful enough to use it only after cleaning it sufficiently and then prescribing it along with other drugs in cases of typhoid, dropsy, colic, diseases of bones, head ache snake bites etc. As alinement, it is used for neuolgia. Rheumatic affections, and paralysis. Ayurvedic doctors mixing it with other drugs use with great advantage in cases of fevers, complicated with cerebral symptoms, dyspepsia, with loss of appetite sore throat cough, asthma, andskin diseases.

It consists of several varieties as mentioned below.

நாவிவகை:-

1. வெண்ணாவி, white bachnag — Aconitum ferox.
2. கரு நாவி, black aconite root — Aconitum ferox.
3. சீமை நாவி, Europe aconite — Aconitm napellus (of Europe).
4. அந்தண நாவி, அல்லது பிரம நாபி, same as No.1.
5. சத்திரிய நாபி, அல்லது செந்நாபி red aconite — Aconitum palmatum.
6. வைசிய நாபி, blue aconite — Aconitum luridum.

7. சூத்திர நாபி, the same as No.2.

8. அரச நாபி, nepaul aconite — Aconitum napellus of Himalayas.

9. பச்சை நாபி, green, aconite.

NOTE:- The root is so very poisonous that it is even considered that its effluvia will poison the air where the plant grows. The active principle of the root is Aconitia. It is rarely used as tincture. The alkoloid aconitia is a white uncrystallizable solid. When an individual is fully under its influence the pulsations of the heart are diminished in number, as likewise the frequency of respiration. Aconite is said to cause contraction of the pupil, on account of its diuretic properties it is used with great advantage in dropsy. In hypertrophy and other diseases of the heart, it is prescribed to allay palpitation. It is stated to have marked antiphlogistic powers. In different forms neuralgia, its internal administration is often attended with marked relief, the same happens in sciatica, chronic rheumatism , muscular rheumatism as lumbago. After all, it is at best a dangerous remedy to make use of internally. Now, it is rarely used but only by a very limited practitioners. The root is generally mistaken for by horse radish and thus led to several cases of poisoning. In taste they differ — this one produces tingling and numbing sensation while the other is sweet and pungent, in shape this is conical and the other is cylinderical.

Symptoms of poisoning Burning and dryness in the throat, numbness of the tongue and the mouth, nausea, vomitting, pain in the epigastrium staggering while walking loss of power in the limbs, pupils dilated pulse irregular and gradually becoming imperceptible, skin cold and clammy. Delirium is present is some cases. Heart action is lowered.

நாவிகாக்கிழங்கு, கலப்பைக் கிழங்கு, plough root — Methonica superba.

நாவிகாக்குவளை, செங்குவளை, red nelumbo, red waterlily — Pontederia genus.

நாவிகாசங்கு, பீச்சங்கு, fetid smooth volkameria — Cleodendron inerme.

நாவிக்கிழங்கு, see நாவி.

நாவிகீ, கஸ்தூரி நாறிப்புல், musk grass — Andropogan genus.

நாவிக்குழம்பு, புனுகு, civet.

நாவிச்சட்டம், கஸ்தூரி, musk — Moschus moschiferus; 2. புனுகு, civet — Viverra civettina (product of); 3. சவ்வாது, zibet.

நாவிச்சூரை, see நாவிச்சூலை.

நாவிச்சூலை, வசநாவியினால் ஏற்படும் சூலை நோய், a kind of severe colicky pain in the abdomen arising from taking aconite iternally. This is a disease due to the complications attributed chiefly to over doses of the drug or by using the medicine where in this drug is added without proper purification.

நாவிடம், உடம்பின் நரம்பு, nerves in the body; 2. நாக்கின் விடம், the evil nature of the tongue noted in speech; 3. சாபம்,curse, utterance or speech devoted to destruction, pronounced curse — Anathema.

நாவித்தண்டை, ஒரு முட்டைப் பீநாறி, stinking plant — Ballota disticha.

நாவிநெய், மயிர்ச்சாந்து, a perfumed pungent or compound or composition used for dressing the hair — Pomatum; 2. நாவிக் கிழங்கினின்று வடிக்கும் ஓர் பச்சை நிறமான எண்ணெய், a bright green oil extracted from aconite root; 3. புனுகு, civet.

நாவிப்பிள்ளை, புனுகு பூனை, civet cat — Viverra civettina; 2. சவ்வாது பூனை, zibet cat.

நாவிப்புருதி, see நாக்குவிப்புருதி.

நாவிப்புழுகு, புனுகு, civet; 2. மான்மதம், musk of deer.

நாவிப்பூனை, see நாவிப்பிள்ளை.

நாவிமிருகம், கஸ்தூரிமான், musk deer; 2. புனுகு பூனை, civet cat; 3. சவ்வாது பூனை, zibet cat.

நாவியப்பூ, கார்த்திகைப்பூ, november flower, superb lily — Methonica superba.

நாவியம், see நாவியப்பூ.

நாவிரணம், see நாக்குவிரணம்.

நாவிலட்சரம், see நாவட்சரம்.

நாவிலரணை, see நாவரணை.

நாவிலை, வெற்றிலை, betel leaf.

நாவில்லாவலரி, குப்பி அலரி, pagoda tree — Plumeria acutifolia.

நாவில்லான், நாக்கு இல்லாதவன், a person without a tongue — Aglossus; 2. ஊமை, the dumb.

நாவிழுதல், see நாக்குவிழல்.

நாவிழுப்பு, நாக்கு உள்ளே இழுத்துக் கொள்ளுதல், இதனால் பேச முடியாது. இது பாரிச வாயு, இழுப்பு முதலிய நோய்களினா லேற்படும், with drawal of the tongue there by rendering in capable of utterance. This occurs in some diseases as paralysis, convulsion etc.

நாவிற்கிதம், நாவிற்கு ருசி, pleasing to taste.

நாவிற்பசைத்தல், நாக்கில் ஈரமுண்டாக்கல், to make the tongue wet.

நாவின்கற்பம், நாக்களின் கற்பம்.

நாவின்மா, நாக்கில்படரும் மாப்போன்ற பசை, see நாவழுக்கு

நாவின் முடிச்சி, நாக்கு எழாதபடிக்கு நாக்கின் அடியிற்காணும் முடிச்சி, tongue tie.

நாவீங்கித் தொங்கல், நாக்கு வீங்கித் தொங்கல், swelling and protrusion of the tongue.

நாவு, நாக்கு tongue.

நாவுக்கிதம், நாவுக்கினிமை, உருசியாயிருக்கை, sweet and tasteful to the tongue.

நாவுப்புற்று, நாக்கிலேற்படும் புற்று, cancer of the tongue.

நாவுரி, ஒன்றரைப்படி, one and half measures ;or 6 ollocks.

நாவுலாச்சி, see நாவறட்சி.

நாவுழலை, see நாக்குளறல்.

நாவுவிழுத்தல்,

நாவுழற்றல், see நாவறட்சி; 2. தாகமெடுத்தல், feeling thirsty.

நாவுழற்றுதல், நாவறண்டு காந்துதல், tongue getting parched and dry.

நாவுப்புளித்தல், see நாப்புளித்தல்.

நாவுளறல், நாக்குளறல், indistinct utterance of the tongue; 2. பேச்சுத் தடுமாறல், faltering in speech.

நாவூறுபடுத்தல், நாவாற் சுடல், blight of the tongue.

நாவெலும்பு, ஓர் காலெலும்பு.

நாவெழுச்சி, tongue assuming elevated position accompanied by burning and itching sensation mucous discharge and salivery secretions, Ranula.

நாவேர்ப்பட்டை, ஓர் காட்டு மரத்தின் பட்டை, bark of a forest tree.

நாவேறு, நாக்குவிஷம், blight from the tongue supposed to produce evil; 2. சபித்தலினால் ஏற்படும் தோஷம், affection through curse.

நாவெடிப்பு, நாக்கு வெடிப்பு, fissures of the tongue.

நாவெழாமை, நாக்கிலேற்படும் பிடிப்பினால் பேச முடியாமை, a peculiar form of aphasia due to spasm of the muscles of the tongue — Aphthongia; 2. நாக்குவாதம், which see.

நாவொட்டிக் காய்ச்சல், ஓர் வகைக் காய்ச்சல், இதனால் சுரம் தோன்றி எலும்பில் தாக்கி, நுரையீரல் வெந்து கரைந்து, நாக்கிலும் வெந்து காணும், a kind of fever marked by fever, affection of the bones inflammation and wasting away of the lungs.

நாழல், cassia occident alis; 2. caesalpinia pulchetima; 3. மல்லிகை, Jasminum; 4. குமரிநாழல், which see.

நாழி, ஒரு படி, a measure; 2. 16 பலம் கொண்ட நிறை, 16 palams weight or about 560 gms; 3. இரண்டுரி கொண்ட அளவு, a measure consisting of two oories; 4. நாழிகை, அல்லது கடிகை, an Indian hour equivalent to 24 English minutes.

NOTE:- by C.D. நாழி என்றால் ஒருபடி என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இது எத்தனை ஆழாக்கு கொண்டபடி என்பது விளக்கப்படவில்லை.

இப்போதுகூட வியாபாரிகள் கிராமங்களில் பொருள்களை ஒரு தூக்கு என்கிற ஐம்பது பலம் எடை அளவாக வாங்கி, நாற்பது பலம் கொண்ட வீசையளவாக விற்று நான்கில் ஒரு பங்கு லாபம் அடைவதைக் காணலாம், அதுபோலவே முற்காலத்தில் ஐந்தாழாக்குக் கொண்ட படியளவாக வாங்கி நான்கு ஆழாக்கு கொண்ட படியளவாக விற்று நான்கில்

ஒருபங்கு லாபம் அடைந்தனர், இந்த ஐந்தாழாக்குக் கொண்ட படியைத்தான் நாழி என்றனர். அதில் பாதி உரியாகும். நான்கு ஆழாக்கு கொண்டபடி சிறியபடி அல்லது பழைய படியாகும். உழக்கு அதில் பாதியாகும். பட்டணம்படி பெரியபடி, இது எட்டாழாக்குக் கொண்டது.

'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' இந்த பழமொழியில் குறிப்பிட்டுள்ள 'நாழி' ஐந்தாழாக்கு கொண்ட படியேயாகும். ஒருவர் ஒரு தினத்திற்கு உண்ண வேண்டியது நாழியில் பாதி அரிசியும், மற்றபாதி பருப்பு வகை, மந்தம், வாதம் செய்யும் பொருள்களாகிய கிழங்கு, முதிர்ந்த காய்வகைகள், கீரை வகைகள், இளங்காய் வகைகள் என நான்கு மாகும்.

It is given here that Nazhi is a measure. Its exact volume is not mentioned. There is one Madras measure of eight ollocks and an old measure of four ollocks and a new measure litre.

Till recently in the rural parts merchants purchased articles by weight called Thuku *(தூக்கு)* which is equivalent to 50 palams and sold the same by weight called viss which is equivalent to 40 palams and thus had 1/4 or 25% gain. Similarly, in the olden days certain articles were purchased in measure — Nazhi and sold in the old measure of 4 ollocks making 1/4 or 25% gain. So, Nazhi is equivalent to five ollocks nearly equivalent to one kilo.

There is a proverb 'உண்பது நாழி' which means that one must eat one nazhi a day. Half of it being rice and the other half is made up of the following 1.pulses, 2. greens, 3. tender fruits, 4. root tubers and half riped fruits. Root tubers and riped fruits are clubed together because of their similar qualities of being slightly hard to digest and of rising the wind humour. (vatham) in the system.

நாழிகை, see நாழி

நாழிகைக்குள் காயசித்தி கருநெல்லி, a black variety of Indian gooseberry said to rejuvenate the system in one Naligay i.e. within a brief time of 24 minutes. This is unknown in the present day and so it should not be confused with black berried featherfoil or black honey shrub — Phyllanthus reticulatus which is quite different from that contemplated in Tamil Siddhar's Science.

நாழிகைவட்டில், பூர்வகாலத்தில் தென்னிந்தியாவிலுள்ள தமிழர்கள் கால அளவை நிர்ணயிக்கும் பொருட்டு ஒரு குறித்த பாத்திரத்தின் வழியாய் தண்ணீர் உட்புகுந்து, சில நேரத்திற்குப் பிறகு தண்ணீரில் மூழ்கி விடும். இதுவே நாழிகை கொண்ட கால அளவு, இது தற்காலத்திய இங்கிலீஷ் மணிப்படி 24 நிமிஷம் கொண்டது. ஆகவே, இத்துளையிட்ட பாத்திரத்திற் குத்தான் நாழிகை வட்டில் என்று பெயர். a contrivance used in olden days by the Tamilians of South India by which time (Naligay) was determined. It consists of an empty vessel of the shape of a plate of certain size made to float on water. There is a small hole at the bottom through which water enters. The size of both the vessel and the hole is so proportioned that if care be taken, the vessel sinks at the termination of every Naliga (24 English minutes).

நாழிபுரி, ஒன்றரைப்படி, a measured and a half.

நாழில், கொடிக்கொத்தான், moss creeper, air creeper — Cassytha filiformis.

நாளகம், இலாமிச்சு, fragrant grass — Andropogon muricatus.

நாளகி, சூழ்ந்து torch tree — Ixora parviflora.

நாளசம்பந்தம், நாளத்திற்குரிய, relating to veins, venous.

நாளஞ்சுருக்கி, இரத்த நாளத்தைச் சுருங்கச் செய்யு மருந்து, drug which contracts veins as alum.

நாளதபம், நாளத்திற்கு ஏற்படும் அழற்சி, inflammation of a vein — Phlebitis; 2. கருப்பையிலுள்ள நாளத்திற் குண்டாகும் அழற்சி inflammation of uterine veins following child birth — Puerperal Phlebitis.

நாளதாபனரோகம், நாளத்தின் அழற்ச்சியால் ஏற்படும் நோய்கள், அதாவது வீக்கம், நோய்கொண்ட பாகங்களில் விறைப்பு, வலி, பல கட்டிகள், காதுநோய், கருப்பை நோய்கள் disease such as edema, stiffness and pain in the affected part, multiple abscesse disease of the ear, uterine diseases due to inflammation of the veins.

நாளக்கபாடம், நாளக் குழலின் பூட்டு, valve of the vein.

நாளச்சுருட்டு, நரம்புச் சுருட்டு, varicose vein.

நாளதாரை, நாபி நாளத்திற்கும் ஈரல் இடது நாளத்திற்கும் மத்தியிலுள்ள குறுகிய பாதை, A canal which conveys blood from the vena portae of the liver to the ascending venacava in the foetus — Canalis venosus.

நாளத்தி, ஊதும் துருத்தி, bellows.

நாளத்தீகதம், இரட்டை ஊது துருத்தி, double bellows.

நாளத்தூதல், துருத்தியைக் கொண்டுதல், blowing with bellows.

நாளதைலம், கிரகணிக்காக தேரையர் கூறியவோர் சிறந்த தைலம், a superior medicated oil prepared as per process described in Theraiyer treatise and prescribed for chronic diarrhoea.

நாளந்தகம், தாமரை வளையம், coils of lotus stalk.

நாளம், உட்டுளை, tubularity; *2.* காம்பு, hollow stalk; *3.* குழாய், pipe; *4.* குழல், tube; *5.* பூந்தண்டு, tender stalk of flower; *6.* பொன்னரிதாரம், yellow orpiment; *7.* ஆண் குறி துவாரம், male urethra; *8.* உதிர நரம்பு, vein; *9.* தாமரை வளையம், hollow stalk of the lotus; *10.* நஞ்சுக்கொடி, navel string or cord; *11.* உடம்பின் குழல், any tubular vessel in the body; *12.* துருத்தி bellows; *13.* சரவுலை, an apparaties for melting metals.

நாளம், உடம்பிலிருக்கும் தந்துகிகள் எனப்படும், சின்னஞ் சிறிய குழல்களில் நிறைந்திருக்கும் இரத்தத்தை வாங்கிக் கொண்டு இருதயத் திற்கு கொண்டு போய்ச் சேர்க்கும் காரிரத்தக் குழல்கள், இது உடம்பு முழுவதிலும் நாடிகளைப் போலவே பரந்து நிற்கும், அமைப்பிலே இந்த நாளங்களின் சுவர்கள் நாடியைப் போல மூன்று சொக்காய்கள் பெற்றதாய் இருக்கும். ஆயினும் நாடியைப் போல் அவ்வளவு தடிப்பாயிராது, ஆகவே, நாளத்தைத் துண்டிக்க அதன் ரூபம் அழியும், நாளத்தின் மத்திய சொக்காய் மாத்திரம் நாடியிலிருப்பதைவிட மிக்க கனமானது. இந்நாளங்களுக்கு அனேகமாய்க் கபாடங் களுண்டு, இக் கபாடங்கள் நாளத்தைக் கவர்ந்து கொண்டிருக்கும் சவ்வின் மடிப்பினால் ஆக்கப் பட்டவை, பெரிய நாடிகளுக்கு ஆழ்ந்த நாளங்களுண்டு.

இரத்தச் சுழற்சியில் நாளங்களின் முக்கிய உபயோகம் என்னவென்றால் இவைகளின் உள்ளிருக்கும் கபாடங்களை, நாளங்கள் போகும் வழியிலுள்ள தசைகள் அங்கங்கே நாளங் களை அமுக்கு வதினால் இரத்த வோட்டம் உதவி பெறுகின்றது, அன்றியும் இரத்த வோட்டத்தில் இரத்தம் பின்னுக்குச் செல்ல வொட்டாமல் இக்கபா டங்கள் தடுக்கும்; அனேக நாளங்களில் கபாடங்கள் கிடையவே கிடையாது.

A vessel which conveys the blood from a system of minute tubes termed capillaries to or towards the heart. These veins like arteries are distributed through the whole body. All veins (with a few exceptions) carry dark impure blood. In structure veins like arteries have three coats — inner, middle and outer, but the coats are not so thick as those of the arteries and so their walls collapse when cut or when empty and thus lose their shape. The middle coat of the viens is thicker than that of the artery. There are valves in great many of the veins and these are pouch like folds formed of redulication of their lining membrance i.e. inner wall of the vein. The larger arteries have deep veins.

In the circulation of blood in the human body the usefulness of the veins chiefly consists in the structure of valves within them. The veins especially which lies in the muscular parts of the body receive presure to facititate the running of the blood towards the heart and this is greatly helped by the valves which impede the passage of blood thus preventing blood from passing in the opposite direction. Great many veins (portal vein) have no valves and they are absent in the largest trunks and in the smallest branches. The different kinds of veins derive the names from the places through which they run or in regard to their varied actions etc.

1. கேள்வி நாளம், auditory vein.
2. இருதய நாளம் cardiac vein.
3. ஈரல் நாளம், hepatic vein.

4. குண்டிக்காய் நாளம், renal vein.

5. புப்புச நாளம், pulmonary vein carries pure blood.

6. கன்னநரம்பு, buccal vein.

7. மூலக்கரு நாளம், the veins of the earliest embroynic life — Cardinal veins.

8. மூளை நாளம், cerebral veins.

9. உதர நாளம், veins of the stomach.

10. தண்டு நாளம், vein of the pains — Dorsal vein.

11. முக நாளம், facial vein.

12. குதமூல நாளம், hemorrhoidal veins around the lower rectum.

13. கழுத்து நாளம், jugular vein.

14. பிடரி நாளம், jugular vein posterior external.

15. கண்ணாளம், ophthalmic vein.

16. விந்து நாளம், spermatic vein.

17. மண்ணீரல் நாளம், spleenic vein.

18. விசுத்தி நாளம், thyroid vein.

19. நாபி நாளம், umbilical vein carries pure blood.

20. துடைநாளம், fenirak vein.

NOTE:- (by C.D.) Though it is stated that veins carry impure blood, the pulmonary veins and umbilical vein carry purified blood from the lungs and placenta respectively.

நாளயம், சின்னம்தான் பச்சரிசி, thyme leaved spurge — Euphorbia thymifolia.

நாளரம், இலாமிச்சம்புல், see நாளகம்.

நாளராவம், காரிரத்தக் குழலின் அழுக்கு, impurities in the vein — Venous matter; 2. இரத்தங்குத்தி யெடுத்தல், blood letting bleeding.

நாளவம், ஒட்டநாளம், elder wood tree vine — Lua sambucina.

நாளவா, see நாளவம்.

நாளவிரிவு, அகன்று திருகிய இரத்த நாளம், enlarged and twisted veins — Varicose veins.

நாளளவு, இன்ன மருந்தை இத்தனை நாளைக்குத் தான் கொள்ள வேண்டும் என்கிற வரம்பு, limitation or restriction as to a particular medicine to be taken only for a particular period.

நாளாய்ந்தோர், இத்தனை நாளுக்குள் சாவான் என்று நிச்சயித்தோர், அதாவது வைத்தியர், a physician who is capable of determining the time of death of a particular individual.

நாளாவட்டத்தில் குணப்படல், நோய் நாள் செல்லச் செல்ல நீங்கி வருதல், recovering from illness gradually or in the usual course.

நாளாவட்டம், நாள் செல்லச் செல்ல, after lapse of some days or some time.

நாளாவர்த்த வாதரோகம், மூத்திரம் கலங்கிய சுக்கிலம் போல் நாளத்தின் அதாவது ஆண் குறியின் துவாரத்தின் வழியாய், பொருத்துபொருத்து ஒழுகுவது மல்லாமல் குழலில் குத்தலையும், வலியையுமுண்டாக்குமோர் வகை வாதநோய், a kind of rheumatism with the symptoms of gonorrhoel uretheritis such as milky appearance of urine pain in the urethra — Gonorrheal rheumatism.

நாளி, கள், toddy; 2. நாய், dog; 3. கற்றாழை, aloe; 4. நாழிகை, 24 minutes; 5. புளிச்சைக்கிரை, Deccani hemp — Hibiscus camabinus.

நாளிகம், தாமரை, lotus; 2. வள்ளைக்கொடி, a creeping annual plant found on the borders of tank and moist places — Convolvulus creeper; 3. see இலாமிச்சை.

நாளிகயேலசம், நறும்பிசின், socotrine aloe — Aloe socotrina.

நாளிகா, சுனைக்கோரை, rough sedge grass — Fairena scirpoides.

நாளிகாசு, see நாளிகாதி.

நாளிகாதி, கிலிமுறுக்கு அல்லது முள்முருக்கு, Indian coral tree — Erythrina. indica; காட்டாமணக்கு common physic nut — Jatropha curcas.

நாளிகாயந்திரம், மருந்தை வடிப்பதற்காக உபயோகிக்கும் வாலை யந்திரம், distrillary apparatus.

நாளிகாவித்து, பாற்சோற்றி, a viscid liquid or juice taken from plants and evaporated in the sun — Cantchouc.

நாளிகேரகிருதம், தேங்காயெண்ணெய், cocoanut oil; 2. தேங்காய்ப் பாலுடன் மற்ற சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சி வடிக்கும் ஓர் மருந்தெண்ணெய், a

medicated oil prepared from milk of cocoanut kernel and other drugs.

நாளிகேரம், see நாளிகேளம்.

நாளிகேரளம், see நாளிகேளம்.

நாளிகேளம், தென்னைமரம், cocoanut tree — Cocos nucifera.

நாளிகை, see நாழிகை; 2. நாளம், a tube.

நாளிதம், சேம்பு, Arum colocasia.

நாளிமியாவரை, சூரத்து நிலா வாரை, Surat senna — Cassia lanceolata.

நாளினி, புளி மா மரம், sour mango tree — Spondias mangifera.

நாளினுநாளும், பிரதிதினமும், everyday.

நாளீபம், கடம்பு, cadamba-Nauclea cadamba.

நாளுக்கிருமுறை, ஒரு நாளுக்கு காலை, மாலை ஆகிய இரண்டு தடவை, twice a day viz, morning and evening; 2. தினத்திற்கு இரண்டு தடவை, twice a day — Bis indics.

நாளுக்குநாள், நாள்தோறும், from day to day; 2. தினந்தோறும், daily.

நாளெல்லை, மரணகாலம், period or time of death.

நாளை, ஓர் மரம், இதன் இலையால் பெண்கள் ரத்தகுன்மகட்டி போம், கிழங்கிற்கு பிரமேகம், கரப்பான், மூலம், அழிவிரணம்போம் a tree, its leaves cure uterine tumour its tuberus root cures gleet, piles, and some cutaneous diseases.

நாளைபோவான் நாயகம்,

நாளையென்பான் நாயகம், see நாளைபோவான் நாயகம்.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணம், change for the better every day and every time in the improvement of beauty and complexion said especially of a girl or child.

நாள், தினம், day; 2. விடியற்காலம், dawn; 3. காலம், time; 4. ஒரு இரவும் ஒரு பகலும் கொண்டது. a solar day and night; 5. இயற்கையாகவே செல்லுந்தினம், a natural day.

நாள்படாநோய், சீக்கிரம் குணப்படக்கூடிய நோய், a disease curable in a short time; 2. குணப்படுநோய், curable

disease as opposed to தீராநோய், chronic disease.

நாள்பட்ட நோய், மருந்திற்கு வசப்படா நோய், an incurable disease, chronic disease.

நாள்பட்டமேகம், பெண்கள் வெள்ளை யொழுக்கு — Leucorrhoea.

நாள்பழக்கம், தினந்தோறும் கைக்கொள்ளும் பழக்கம், daily routine.

நாள்வட்டம், see நாளாவட்டம், நாள்சுற்று cycle of one day.

நாறல், மணத்தல், giving out fragrance; 2. நாற்றம் வீசுதல், stinking; 3. தோன்றல், coming toexistence; 4. முளைத்தல், springing out — Shooting forth.

நாறல் தேகம், நாற்றவுடம்பு, vile body.

நாறல் வாயன், ஊத்தை வாயன், man of foul mouth, a person with stinking breath.

நாறற்பாக்கு, ஓர் வகை நாற்றப்பாக்கு, a kind of areca nut with fetid smell.

நாறனா, சடைச்சிப் பூடு, Aechynomene aspera.

நாறாக்கரந்தை, சிவகரந்தை, Shiva's basil — Sphaeranthus amaranthoides.

நாறி, கற்றாழை, Indian aloe — Aloe era officinalis; 2. நன்னாரி, Indian sarasaparilla — Hemidesmus indicus; 3. நாற்றமுள்ளது, anything giving smell — good or bad, sweet or foul; 4. பீ நாறி, fetid tree — Sterculic fetida; 5. பெருங்காயம், asafoetida — Fetula asafoetida.

நாறி,வகை; 1. அத்த நாறி, கட்டுக் கொங்கை, prussic acid tree — Pygeum wightiana; 2. அதிகநாறி, Plumbago genus; 3. மிளகு நாறி; பூதாங்குசம்; devil's good — Croton oblongi folius; 4. முடைநாறி, செம் பிரண்டை, small downy lobed vine — Vitis linnaci; 5. சுந்நாறி, காச்சாப்பட்டை, yellow flowered resin seed — Pittosperum tetraspermum; 6. பீநாறி, fire brand tree — Premna tomentosa; 7. போதக நாறி, same as No.6, 8. பிடங்கு நாறி; அல்லது புறங்கை நாறி, see கிருஷ்ணபாலை, 9. கஸ்தூரி நாறி; 10. பெருங்காய நாறி.

II 46

நாறிப்போதல், அழுகி நாற்ற மெடுத்தல், stinking after becoming rotten, rotting away.

நாறிமரம், பெருங்காயம் see நாறி.

நாறிவிரணம், see நாறுவிரணம்.

நாறு, நாறுதல், stinking; 2. நாறென்னேவல், the act of being fragrant; 3. உண்டாதல், coming to existence; 4. முளைத்தல், shooting sprouting; 5. முளை, sprout.

நாறுகட்டி, பெருங்காயம், see நாறி.

நாறுகம், பெருங்காயப் பால்மரம், asafoetida tree, see நாறி.

நாறுகரந்தை, கொட்டைக் கரந்தை, Indian globe thistle — Spnaeranthus indicus, which is opposed to நாறாக்கரந்தை, which see; 2. சிவகரந்தை, Shiva's basil — Sphaeranthus amaranthoides.

நாறுகாநீர், சிறு நீர் மூத்திரம் urine because of its stinking.

நாறுகோச்சினை, வாசனையுள்ள புதிய கோரோசனை, fragrant bezoar obtained afresh.

நாறுசிலந்தி, நாற்றமுள்ள அழுகிய சிலந்திப்புண், foul ulcer rapidly spreading and sloughing ulcer — Phagedenous ulcer.

நாறுதகரை, see நாற்றந்தகரை, foetid cassia — Cassia foetida

நாறுதல், see நாறல்.

நாறுநறுவிலி, வாசனை நாவல், clove leaved jaumoon — Eugenia jambolina (caryophyllifolia).

நாறுமதம், புனுகு, civet; 2. கஸ்தூரி, musk.

நாறும்பூ, கந்தகம், sulphur so called from its smell.

நாறுவிரணம், foul smelling ulcer; ulcer emitting bad dour due to suppuration. collection of pus and fetid matter which are not properly drained and the surrounding tissues begin to purify and sinuses are produced.

நாற்காலி, நாற்கால் பிராணி, four legged animal — Quadruped.

நாற்காலிப்பூண்டு, எருமை நாக்கி, which see.

நாற்கிழங்கு, மருட்கிழங்கு, root of hyacinthaloe — Sausievera zeylanica.

நாற்கை சீவன், குரங்கு, காட்டு மனிதன் முதலிய நான்கு கைகள் பிராணிகள், four handed animals like monkey, ape etc., an order of mammals comprising the monkey tribe usually characterised by all the four limbs terminating in prehansible hands — Qudrumana.

நாற்கோணக்கொடி, வெள்ளை வட்டச்சாரணை, white flowered trianthema — Trianthema pentandra.

